**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

Together we thrive

The Hongkong and Shanghai Banking Corporation Limited - Sri Lanka is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.
Issued by The Hongkong and Shanghai Banking Corporation Limited - Sri Lanka.

## HSBC Avance கணக்கின் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் என்பது இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும்.

HSBC கணக்கு வைப்பாளர்/கள் (சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப HSBC Advance கணக்கு வைப்பாளர்/கள்'', ''நீங்கள்'', உங்கள்'' என்றும் குறிப்பிடப்படும் இச் சொற்பிரயோகம் கணக்கு வைப்பாளரின்/வைப்பாளர்களின் வாரிசு/கள், நிர்வாகிகள், நிறைவேற்றுநர்கள் மற்றும் எவரேனும் சட்டபூர்வ பிரதிநிதியையும் உள்ளடக்கும்) வங்கி அலுவல்கள், முதலீடு, நிதி மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள், பல்வேறு தன்மையான வர்த்தக அலுவல்கள் என்பவற்றை மேற்கொள்ளும் நோக்கத்திற்காகவும் HSBC மற்றும்/அல்லது HSBC குழும அங்கத்தவர்களிடமிருந்து சேவைகள், வசதிகள், தகவல்கள், பண்டங்கள், அனுகூலங்கள் மற்றும் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காகவும் HSBCக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் அதனுடன் தொடர்பாடல் செய்வதற்கும் இடமளிக்கும் வகையில், த ஹொங்கொங் அன்ட ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் (சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப இனிமேல் "HSBC", ''வங்கி'', ''நாம்'', ''எமது'' என்றும் குறிப்பிடப்படும் இச் சொற்பிரயோகம் அதன் அடுத்துறுனர்கள் மற்றும் சாட்டுனர்களையும் உள்ளடக்கும்) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, காலத்திற்குக் காலம் வங்கிச் சேவைகள், வசதிகள் மற்றும் தகவல்களை வழங்கும்.

HSBC Advance கணக்கு வைப்பாளர்/கள் பயன்படுத்தும் அல்லது எம்மிடம் கோரும் அல்லது நாம் அவருக்கு/அவர்களுக்கு வழங்கும் வங்கிச் சேவைகள், வசதிகள் மற்றும் தகவல்கள் தொடர்பில் கணக்கு வைப்பாளரின்/வைப்பாளர்களின் பொறுப்புக்களையும் கடமைகளையும் (கீழே குறித்துரைக்கப்படவிருக்கும்) இந்த விதிகள் விளக்கிக்கூறுகின்றன.

மேலே "HSBC" எனவும் "HSBC Advance கணக்கு வைப்பாளர்/கள்'' எனவும் குறிப்பிடப்பட்டுள்ள சொற்பிரயோகங்கள் இனிமேல் சில சந்தர்ப்பங்களில் இந்த ஒப்பந்தத்தின் ''தரப்புக்கள்'' என்று கூட்டாகவும் ''தரப்பு'' என்று தனித்தனியாகவும் பயன்படுத்தப்படலாம்.

**வரைவிலக்கணங்கள்:**

இந்த விதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சிறப்புப் பதங்கள், சந்தர்ப்பத்தினால் வேறு விதமாக தேவைப்படுத்தப்படாவிடின், பின்வரும் அர்த்தங்களைக் கொண்டிருக்கும்.

**"ஒப்பந்தம்"** என்பது இங்கு குறிப்பிடப்படவிருக்கும் விதிகள் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, காலத்திற்குக் காலம் மாற்றம் செய்யப்படக்கூடிய விதிகள், இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக சேவைகளின் வழங்கல்கள் தொடர்பில் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஏதேனும் மேலதிக விதிகள் ஆகிய அனைத்தையும் குறிக்கும்.

**"கணக்கு வைப்பாளர்/கள் மற்றும்/அல்லது வாடிக்கையாளர்"** (அத்துடன், ''நீங்கள்'', ''உங்கள்'', ''உங்களுடைய'') என்பது HSBCஇல் ஆரம்பிக்கப்பட்டுப் பேணப்படும் முதலாவது கணக்கின் விண்ணப்பப் படிவத்தில் பெயரிடப்பட்டுள்ள கணக்கு வைப்பாளரை/வைப்பாளர்களை குறிக்கும்.

**"அதிகார அமைப்பு/கள்"** என்பது HSBC குழுமத்தின் மற்றும்/அல்லது HSBCயின் ஏதேனுமொரு பகுதியின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் ஏதேனும் நீதித்துறை, நிர்வாக அல்லது ஒழுங்குபடுத்தல் அமைப்பு, ஏதேனும் அரசாங்கம் அல்லது அரசாங்க முகவரகம், கருவியகம் அல்லது அதிகார சபை, ஏதேனும் வரி அதிகார சபை, பிணையங்கள் பரிவர்த்தனை, நீதிமன்றம், மத்திய வங்கி அல்லது சட்ட அமுலாக்க அமைப்பு அல்லது அவற்றின் ஏதேனுமொரு முகவரகத்தைக் குறிக்கும்.

**"வங்கிச் சேவை நாள்" / "வழமையான வங்கிச் சேவை நேரம்"** மற்றும் **"வேலை நாள்/நேரம்"** என்பன, எம்மால் வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிடின், வங்கிச் சேவை/வேலை நாள் ஒன்றையும் வழமையான வங்கிச் சேவை/வேலை நேரத்தையும் குறிக்கும்.

**"இணக்கக் கடப்பாடுகள்"** என்பது பின்வருவனவற்றிற்குப் பணிந்தொழுக HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் கொண்டுள்ள கடப்பாடுகளைக் குறிக்கும்: (அ) பொருத்தமான ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நியதி, சட்டம், பிரமாணம், கட்டளைச்சட்டம், விதி, தீர்ப்பு, ஆணை, தன்னார்வக் குறிப்புரை, பணிப்புரை, தடையுத்தரவு, நீதிமன்றக் கட்டளை, HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கும் அதிகார சபை ஒன்றிற்கும் இடையிலான ஒப்பந்தம், HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்குப் பிரயோகிக்கக்கூடிய விதத்தில் அதிகார சபைகளுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை (''சட்டங்கள்''), அல்லது சர்வதேச வழிகாட்டுதல்கள் மற்றும் உள்நாட்டுக் கொள்கைகள் அல்லது நடைமுறைகள். (ஆ) அதிகார அமைப்புகளினால் கோரப்படும் ஏதேனும் (நியாயமான) அறிக்கையிடல், ஒழுங்குபடுத்தல் வர்த்தக அறிக்கையிடல், வெளிப்படுத்தல் கோரிக்கைகள் மற்றும் சட்டப்படியான ஏனைய கடப்பாடுகள். (இ) எமது வாடிக்கையாளர்களின் அடையாளத்தை உறுதிசெய்வதற்கு HSBCஐ தேவைப்படுத்தும் சட்டங்கள்.

**“இரகசியத் தகவல்கள்”** என்பது வாடிக்கையாளர் தகவலை வெளியிடும்போது இரகசியமானது என்று குறிப்பிடும் தகவல்களை அல்லது நியாயமான ஒருவரினால் இரகசியமானது, பகிரங்கமற்றது மற்றும் தனிப்பட்ட தன்மையுடையது என்று கருதப்படும் தகவல்களைக் குறிக்கும்.

**“இணைக்கப்பட்ட நபர்”** என்பது சேவைகளின் வழங்கல் தொடர்பாக HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு வாடிக்கையாளரினால் வழங்கப்படும் அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவரினால் வேறு வழியில் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களுக்குரிய (இதில் தனிப்பட்ட விபரங்கள் அல்லது வரித் தகவல்களும் உள்ளடங்கும்) ஒரு நபரை அல்லது நிறுவனத்தைக் குறிக்கும். வாடிக்கையாளரைப் பொறுத்தவரையில், **இணைக்கப்பட்ட நபர்** என்பது (வாடிக்கையாளரின்) எவரேனுமொரு பிணையாளி, கம்பனியொன்றின் பணிப்பாளர் அல்லது அதிகாரி, பங்காளித்துவத்தின் பங்காளிகள் அல்லது உறுப்பினர்கள், ‘‘கணிசமான உரிமையாளர்’’, ‘‘கட்டுப்படுத்தும் நபர்’’, அல்லது பயனடையும் உரிமையாளர், அறக்காவலர், நம்பிக்கைப் பொறுப்பொன்றின் தீர்ப்பனவாளர் அல்லது பாதுகாவலர், குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றை வைத்திருப்பவர், குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவொன்றைச் செலுத்துபவர், வாடிக்கையாளரின் பிரதிநிதி, முகவர் அல்லது நியமத்தர், அல்லது வாடிக்கையாளர் HSBC குழுமத்துடன் கொண்டிருக்கும் வங்கி உறவுகள் தொடர்பாக வாடிக்கையாளருடன் தொடர்புகளை வைத்திருக்கும் வேறு நபர்கள் அல்லது நிறுவனங்களையும் உள்ளடக்கலாம்.

**“கட்டுப்படுத்தும் நபர்கள்”** என்பது (பொதுவாக) ஒரு நிறுவனத்தின் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் நபர்களைக் குறிக்கும். (நம்பிக்கைப் பொறுப்பகம் ஒன்றைப் பொறுத்தவரையில் அதன் தீர்ப்பனவாளர், நம்பிக்கைப் பொறுப்பாளர், பாதுகாவலர், பயனடைபவர் அல்லது பயனடையும் பிரிவினர் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பகத்தின் மீது தீர்க்கமான இறுதிக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் வேறேதும் நபர்கள் இதில் உள்ளடங்குவர். நம்பிக்கைப் பொறுப்பகம் அல்லாத ஒரு சட்டபூர்வ நிறுவனமாயின், சமமான அல்லது ஒத்தியல்பான கட்டுப்பாட்டு நிலையில் உள்ளவர்களை இச் சொற்றொடர் குறிக்கும்).

**“வாடிக்கையாளர் தகவல்”** என்பது வாடிக்கையாளரின் அல்லது இணைக்கப்பட்ட நபரின் தனிப்பட்ட விபரங்கள், இரகசியத் தகவல்கள் மற்றும்/அல்லது வரித் தகவல்களைக் குறிக்கும் (இணைக்கப்பட்ட அறிக்கைகள், விலக்களிப்புக்கள் மற்றும் ஒப்புதல்களும் இதில் உள்ளடங்கும்).

**“நிதிசார் குற்றம்”** என்பது பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குதல், இலஞ்சம், ஊழல், வரி ஏய்ப்பு, மோசடி, பொருளாதார அல்லது வர்த்தகத் தடைகளை மீறுதல் மற்றும்/அல்லது இந்த விடயங்கள் தொடர்பான சட்டங்கள் அல்லது பிரமாணங்களை மீறுதல் அல்லது மீறுவதற்குத் தந்திரமாக முயற்சி செய்தல் என்பவற்றைக் குறிக்கும்.

**“HSBC”** என்பது ஹொங்கொங் SAR சட்டங்களின் கீழ் முறைப்படி கூட்டிணைக்கப்பட்டதும், இல.1, குயீன்ஸ் வீதி மத்தி, ஹொங்கொங் என்னும் முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருப்பதும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசில் இல.24, சேர் பரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 1 என்னும் முகவரியிலும் வேறு இடங்களிலும் வியாபாரத்தை மேற்கொள்வதுமான **த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட்** என்ற வங்கியியல் கூட்டுத்தாபனத்தைக் குறிக்கும்.

**“HSBC குழுமம்”** என்பது HSBC ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. மற்றும்/அல்லது அதன் இணை நிறுவனங்கள், உப நிறுவனங்கள், துணை நிறுவனங்கள் என்பவற்றையும் அவற்றின் ஏதேனும் கிளைகள் மற்றும் அலுவலகங்களையும் குறிக்கும். **“HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர்”** என்பதும் அதே அர்த்தத்தைக் கொண்டிருக்கும்.

**“அறிவுறுத்தல்கள்”** என்பது கணக்கு வைப்பாளரினால்/வைப்பாளர்களினால் எழுத்துமூலம் அல்லது வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க பாதுகாப்பான டிஜிட்டல் முறையிவ் மற்றும்/ அல்லது இலத்திரனியல் வழிமுறையில் அனுப்பப்பட்டு HSBCக்கு கிடைக்கப்பெறுகின்ற, முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் வேண்டுகோளை அல்லது அறிவுறுத்தலைக் குறிக்கும்.

**“நிறுவனம்”** என்பது கணக்கு வைப்பாளரினால்/வைப்பாளர்களினால் HSBCக்கு அறிவிக்கப்பட்டு, இந்த ஒப்பந்தத்தின் நோக்கத்திற்கு ஒரு நிறுவனமாகக் கருதப்படவிருக்கும் ஏதேனும் மூன்றாம் தரப்பு நிதி நிறுவனத்தைக் குறிக்கும்.

**“தகவல்”** என்பது கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு எம்மால் அல்லது ஏதேனும் தகவல் வழங்குநரினால் வழங்கப்படும் ஏதேனும் நிதி, சந்தை அல்லது வேறேதும் தகவல்களையும் தரவுகளையும் குறிக்கும்.

**“இழப்பு”** என்பது ஏதேனும் உரிமைக் கோரல், அறவீடு, செலவு (ஏதேனும் சட்ட மற்றும் நிபுணத்துவ சேவைக்கான செலவுகளும் உள்ளடங்கும்), சேதங்கள், கடன், செலவினம், வரி, பொறுப்புக்கள், கடப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள், வழக்கு, நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு விசாரணை அல்லது தீர்ப்புக்களைக் குறிக்கும். இவை எவ்வாறு

கணிக்கப்பட்டவையாகவும் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில், எதிர்விளைவாக, தண்டனையாக அல்லது தற்செயலாக ஏற்பட்டவையாகவும் இருக்கலாம்.

**“தனிப்பட்ட விபரங்கள்”** என்பது ஒரு நபரை அடையாளம் காண்பதற்கு உதவக்கூடிய வகையில் அந்த நபர் (மற்றும் தரவு இரகசியச் சட்டம் நிறுவனங்களுக்குச் செல்லுபடியாகும் நாடுகளிலுள்ள நிறுவனங்கள்) தொடர்பான விபரங்களைக் குறிக்கும். இந்த விபரங்களுள் பெயர்(கள்), வசிப்பிட முகவரி(கள்), தொடர்பு விபரங்கள், வயது, பிறந்த திகதி, தேசிய இனம், பிரஜாவுரிமை, விவாக நிலை போன்றவையும் உள்ளடங்கும்.

**“கடவுச்சொல்”** என்பது கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு வங்கியினால் வழங்கப்பட்ட தன்னியக்க டெலர் இயந்திர அட்டை, டெபிற் கார்ட் மற்றும் கிறெடிட் கார்ட்டை பயன்படுத்துவதன் மூலம் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கு அல்லது செயற்படுத்துவதற்காகவும் அல்லது தொலைபேசி வங்கிச் சேவை மற்றும் தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை (PIB) ஊடாகக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்காகவும் உபயோகிக்கப்படுத்தப்படுகின்ற ஒரு இரகசியச் சொல்லை, சொற்றொடரை அல்லது எண்ணெழுத்துக் குறியீட்டைக் குறிக்கும்.

**தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை (“PIB”)** என்பது கணக்கு வைப்பாளர்/கள் அறிவுறுத்தல்களை பெறுவதற்கு அல்லது செயற்படுத்துவதற்கும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கும் HSBCயின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் கிடைக்கும் ஒரு வலைத்தளத்தை (web portal) குறிக்கும்.

**“விபரக்கூற்று”** என்பது கணக்குத் தொடர்பாக ஏதேனும் காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் (டெபிற் கார்ட் கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடங்கும்) கணக்கு மீதி என்பவற்றை எடுத்துக்காட்டும் விதத்தில் காலத்திற்குக் காலம் HSBCயினால் கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு வழங்கப்படும் கணக்கு அறிக்கையைக் குறிகும். HSBC பொருத்தமெனக் கருதும் வேறு தகவல்களும் இதில் சேர்க்கப்படலாம்.

**“சேவைகள்”** என்பது, வரையறைகள் எதுவுமின்றி (அ) வாடிக்கையாளரின் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், செயற்படுத்துதல் மற்றும் மூடுதல், (ஆ) வாடிக்கையாளருக்குக் கடன் வசதிகள் மற்றும் ஏனைய வங்கி வசதிகளையும் சேவைகளையும் வழங்குதல் (பிணையங்களின் கையாளுகை, முதலீட்டு ஆலோசனை, தரகு, முகவர், பாதுகாவலர், கிளியரிங் அல்லது தொழில்நுட்பக் கொள்முதல் சேவைகளும் இதில் உள்ளடங்கும்), விண்ணப்பங்களைப் பரிசீலித்தல், துணைக் கடன் மதிப்பீடு மற்றும் வங்கி வசதிக்கான தகுதி மதிப்பீடு, (இ) சந்தைப்படுத்தல் அல்லது நிதிச் சேவைகளின் ஊக்குவிப்பு அல்லது வாடிக்கையாளருக்கான தொடர்புடைய வங்கி வசதிகள், சந்தை ஆய்வு, காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிர்வாக நோக்கங்கள் என்பன உள்ளடங்கலாக

வாடிக்கையாளருடன்னான HSBCயின் ஒட்டுமொத்த உறவுகளைப் பேணுதல் ஆகியவற்றைக் குறிக்கும்.

**"கணிசமான உரிமையாளர்கள்"** என்பது ஒரு நிறுவனத்தில் 10%க்கு மேற்பட்ட இலாபத்திற்கான உரிமையை அல்லது 10%க்கு மேற்பட்ட பங்கை நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் கொண்டுள்ளவர்களைக் குறிக்கும்.

**"வரி அதிகார அமைப்புகள்"** என்பது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வரி, வருமான, நிதி மற்றும் நாணய அதிகார அமைப்புகளைக் குறிக்கும்.

**"வரித் தகவல்கள்"** என்பது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் ஏதேனும் வரி அதிகார சபைக்கான தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு (அல்லது பணிந்துதொழுகலை நிரூபிப்பதற்கு அல்லது பணிந்தொழுகாமையைத் தவிர்ப்பதற்கு) அவசியமென HSBC நியாயமான முறையில் கருதும் விதத்தில் வாடிக்கையாளரின் (அந்த வாடிக்கையாளர் ஒரு தனிநபராக, வியாபாரமாக அல்லது இலாபம் கருதாத அல்லது வேறு வகையான நிறுவனமாக இருக்கலாம்), அல்லது வாடிக்கையாளர் ஒருவரின் எவரேனும் உரிமையாளரின், ''கட்டுப்படுத்தும் நபரின்'', ''கணிசமான உரிமையாளரின்'', பயனடையும் உரிமையாளரின் வரி நிலைமையுடன் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையிலி தொடர்புடைய ஏதேனும் ஆவணங்கள் அல்லது தகவல்களைக் (அத்துடன் இணைக்கப்பட்ட அறிக்கைகள், விலக்களிப்புக்கள் மற்றும் ஒப்புதல்களும் உள்ளடங்கும்) குறிக்கும். **"வரித் தகவல்கள்"** என்பதில் வரி வசிப்பிடம் மற்றும்/அல்லது நிறுவனத்தின் அமைவிடம் (பொருத்தமான முறையில்), வரி வாழிடம், வரி அடையாள இலக்கம், வரிச் சான்றிதழ் படிவங்கள், சில தனிப்பட்ட தரவுகள் (பெயர்(கள்), வசிப்பிட முகவரி(கள்) வயது, பிறந்த திகதி, பிறந்த இடம், தேசிய இனம், பிரஜாவுரிமை) என்பனவும் உள்ளடங்கும்.

**"வரிச் சான்றிதழ் படிவங்கள்"** என்பது கணக்கு வைத்திருப்பவரின் அல்லது நிறுவனதொன்றின் இணைக்கப்பட்ட நபரின் வரி நிலைமையை ஊர்ஜிதம் செய்வதற்காக, காலத்திற்குக் காலம், வரி அதிகார சபை ஒன்றினால் அல்லது HSBC யினால் வழங்கப்படும் அல்லது தேவைப்படுத்தப்படும் ஏதேனும் படிவங்களை அல்லது வேறு ஆவணங்களைக் குறிக்கும்.

ஒருமையில் குறிப்பிடப்பட்டுள்ளவை பன்மை அர்த்தத்தையும் பன்மையில் குறிப்பிடப்பட்டுள்ளவை ஒருமை அர்த்தத்தையும் உள்ளடக்கும்.

**"விதிகள்"** என்பது இந்த ஒப்பந்தத்தை ஆட்சி செய்யும் விதிகள் மற்றும் நிபந்தனைகள், ஏதேனும் கைதுறப்புகள், இணைய வலைத்தள இரகசிய அறிக்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படும்போது கணக்கு வைப்பாளருக்கு/

வைப்பாளர்களுக்கு எம்மால் அறிவிக்கப்படும் ஏதேனும் மேலதிக விதிகள் என்பவற்றைக் குறிக்கும்.

**"கொடுக்கல் வாங்கல்/கள்"** என்பது கணக்குகள் தொடர்பில் அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகளை HSBC எடுப்பதற்காக வாடிக்கையாளர் ஒருவரினால் எழுத்து மூலம் அல்லது டெபிற் கார்ட் மூலம் HSBCக்கு வழங்கப்படும் அனுமதிக்கத்தக்க அறிவுறுத்தலைக் குறிக்கும் (பண மீளப்பெறுகைகள், விற்பனை ஸ்தானத்திலான கொடுப்பனவுகள், பண/காசோலை வைப்புக்கள் முதலியன கொடுக்கல் வாங்கலுக்கு உதாரணங்களாகும்) கூட்டு கணக்கு வைப்பாளர் /கள் இங்கு கணக்கு வைப்பாளர்/கள் என்று குறித்துரைக்கப்படுவர்.

**"மொத்த உறவு மீதி" (TRB)** என்பது கால வைப்புக் கணக்குகளிலுள்ள சராசரி வரவு மீதியைக் குறிக்கும். ஒரு காலப்பகுதிக்குரிய நாளாந்த வரவு மீதிகளின் ஒட்டுமொத்தத் தொகையை அக் காலப்பகுதியிலுள்ள நாட்களின் எண்ணிக்கையால் பிரிப்பதன் மூலம் இது கணிக்கப்படும்.

**அறிமுகம்**

HSBC Advance கணக்குப் பக்கேஜை வைத்திருப்பவர் ("கணக்கு வைப்பாளர்"), அவருக்கு அல்லது அவரது வேண்டுகோளின் பேரில் த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட்டினால் ("வங்கி") வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட இருக்கும் HSBC Advance கணக்குப் பக்கேஜின் ("பக்கேஜ்") பாவனையை ஆளுகை செய்யும் பின்வரும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க இணங்குகின்றார். இப் பக்கேஜில் பின்வருவன உள்ளடங்கும்:

i. காலத்திற்குக் காலம் கணக்கு வைப்பாளரினால் வங்கியில் உள்நாட்டு நாணயத்தில் மற்றும்/அல்லது வெளிநாட்டு நாணயங்களில் ஆரம்பிக்கப்படும் மற்றும்/அல்லது பேணப்படும் ("HSBC Advance கணக்கு" என்று வர்த்தகப் பெயரிடப்பட்ட) நடைமுறை, சேமிப்பு, சிறுவர் சேமிப்பு மற்றும் கால வைப்பு கணக்குகள் அனைத்தும். மற்றும்/அல்லது

ii. வங்கியினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் கடன் உச்சவரம்பிற்கு உட்பட்ட பெறக்கூடிய மேலதிகப் பற்று வசதிகள். மற்றும்/அல்லது

iii. இப் பக்கேஜின் ஒரு பகுதியாக வங்கி வழங்கப்படக்கூடிய HSBC Rewards / Visa Platinum Cashback கிறெடிட் கார்ட் என்பவற்றில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட HSBC Advance கிறெடிட் கார்ட்/கள் ("கிறெடிட் கார்ட்கள்"), HSBC

Advance டெபிற் கார்ட் ("கணக்கு அட்டை") அல்லது வேறேதும் அட்டை மற்றும்/அல்லது

iv. தன்னியக்க தொலைபேசி வங்கிச் சேவைகள் மற்றும்/அல்லது PIB மற்றும்/அல்லது

v. பகிர்வுப் பாதுகாவல் சேவைகள். மற்றும்/அல்லது

vi. வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட தவணைக் கடன், தனிப்பட்ட கடன் வசதி, தனிப்பட்ட பிணையுள்ள கடன். மற்றும்/அல்லது

vii. HSBC உலகளாவிய பெறுமதி/உலகளாவிய பரிமாற்றம் மற்றும் சர்வதேச கணக்கு ஆரம்பம். மற்றும்/அல்லது

viii. காலத்திற்குக் காலம் இப் பக்கேஜின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட்டு வங்கியினால் வழங்கப்படக்கூடிய வேறேதும் வசதிகள் மற்றும் சேவைகள்.

## பிரவேசத் தகுதி நிபந்தனைகள்

HSBC Advance பக்கேஜை பின்வருபவர்கள் ஆரம்பிக்க முடியும்:

**1.** இலங்கைப் பிரஜைகள், வதிவிட வீசாவின் பேரில் இலங்கையில் வசிக்கும் இலங்கைப் பிரஜை அல்லாதவர்கள் அல்லது இலங்கையில் வசிக்காத இலங்கைப் பிரஜைகள் கீழ்க்காணும் நிபந்தனையைப் பூர்த்தி செய்தால் இக் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

1.1 கணக்கு வைத்திருப்பவர் தனது (வெளிநாட்டு நாணய/உள்நாட்டு நாணய) கால வைப்புக் கணக்குகளில மாதாந்த மொத்த உறவு மீதியாக (TRB) ரூ.500,000க்கு மேற்பட்ட தொகையை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றில் சமமான தொகையைப் பேண வேண்டும். (இதில் கிறெடிட் கார்ட் உச்சவரம்புகள், கடன் உச்சவரம்புகள்/ நிலுவையாகவுள்ள மேலதிகப் பற்றுக்கள், திறைசேரி உண்டியல் ரெப்போக்கள் மற்றும் அவை போன்ற ஏனைய வசதிகள் உள்ளடங்க மாட்டா). கணக்கு வைத்திருப்பவர் தனி மற்றும் கூட்டுக் கணக்கு ஆகிய இரு வகைக் கணக்குகளையும் வைத்திருந்து அவை அனைத்தையும் பக்கேஜுக்கு மாற்ற விரும்பினால், தனிக் கணக்கு வைப்பாளர் என்ற முறையிலும் கூட்டுக் கணக்கு வைப்பாளர் என்ற முறையிலும் ரூ.500,000 என்ற குறைந்தபட்ச மாதாந்த மொத்த உறவு மீதியை (TRB) பேணுவது அவசியமாகும்.

1.2 குறைந்தபட்ச மொத்த உறவு மீதி (TRB) இல்லாமல் ரூ.100,000/- என்ற மாதாந்தச் சம்பளத்தை அல்லது கணக்கை ஆரம்பிக்கும் வேளையில் வங்கியுடன் இணங்கிக்கொள்ளும் ஒரு சம்பளத் தொகையைச் செலுத்துங்கள்.

1.3 மேலுள்ள சரத்து 1.1.இல் அல்லது சரத்து 1.2இல் தெரிவிக்கப்பட்டுள்ள தேவைகளைக் கணக்கு வைப்பாளர் பூர்த்தி செய்யாவிட்டால், வங்கியானது அதனால் தீர்மானிக்கப்படும் மாதாந்தக் கட்டணம் ஒன்றை ("Advance உறவுக் கட்டணம்" - Advance Relationsip Fee அல்லது ARF) விதிக்கும். பிரவேச நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத ஒரு குறிப்பிட்ட மாதத்திற்குரிய ARF கட்டணம், அதனைத் தொடர்ந்துவரும் மாதத்தில் சம்பந்தப்பட்ட கணக்கிலிருந்து அறவிடப்படும்.

1.4 கணக்கு வைத்திருப்பவர்கள் சம்பந்தப்பட்ட மீதி திரட்டும் காலப்பகுதியின் பின் ரூ..500,000 என்ற குறைந்தபட்ச மொத்த உறவு மீதியை (TRB) பேணாவிட்டால், 1.1 நிபந்தனையின் கீழ. வரும் வாடிக்கையாளர்கள் அட்வான்ஸ் உறவுக் கட்டணத்தை (ARF) செலுத்துவதன் மூலம் அடுத்தடுத்து மேலும் 03 மாதங்களுக்கு Advance அந்தஸ்தை தொடர்ந்து வைத்திருக்கலாம்.

1.5 மேலுள்ள 1.2 நிபந்தனையின் கீழ் வரும் கணக்கு வைப்பாளர்கள் சரத்து 1.2இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவையைப் பூர்த்தி செய்யாவிட்டால், அட்வான்ஸ் உறவுக் கட்டணத்தை (ARF) செலுத்துவதன் மூலம் மேலும் 03 மாதங்களுக்கு அட்வான்ஸ் அந்தஸ்தை தொடர்ந்து வைத்திருக்கலாம்.

1.6 ஒரு கணக்கு வைப்பாளர் அடுத்தடுத்து 03 மாதங்களுக்கு மேலாக சரத்து 1.1 மற்றும் சரத்து 1.2இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்யாவிட்டால், அந்தக் கணக்கு வைப்பாளரின் அந்தஸ்தானது HSBC Advance கணக்கு பக்கேஜ் என்ற நிலையிலிருந்து பொதுவான வங்கிச் சேவைக் கணக்கு என்ற நிலைக்கு மாற்றப்படுவதுடன், அவருக்கு வழங்கப்பட்டிருந்த HSBC Advance கணக்கு பக்கேஜ் சலுகைகள் அனைத்தும் உடனடியாக முடிவுறுத்தப்படும். இதன்படி, அவரது Advance டெபிற் கார்ட் பொதுவான கணக்கிற்குரிய கார்ட்டாக தரமிறக்கப்பட்டு, வங்கியின் பொதுவான வங்கிச் சேவை வாடிக்கையாளர்களுக்குப் பொருத்தமான நடைமுறையிலுள்ள கட்டணங்கள் அறவிடப்படும். மேற்குறிப்பிட்ட அல்லது வேறேதும் காரணத்திற்காக, HSBC Advance அந்தஸ்து கைவிடப்படும் அல்லது வாபஸ் பெறப்படும் பட்சத்தில், HSBC Advance கணக்குகள் சாதாரண கணக்குகளாக வகைப்படுத்தப்படும் என்பதால், கணக்கு வைப்பாளர்/கள் அதன் பின்பு அத்தகைய சாதாரண கணக்கின்/கணக்குகளின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். (இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரதியை வங்கியின் கிளையொன்றில் பெறலாம் அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பார்வையிடலாம்). கிறெடிட் கார்ட் பிளாஸ்டிக் மாற்றமின்றி அப்படியே இருக்கும். ஆனால், கிறெடிட் கார்ட்கள் தடை செய்யப்பட்டு, பிணையிலிருந்து மீதி

மீட்கப்பட்ட TRB கணக்கு வைப்பாளர்கள் தவிர்ந்த ஏனையவர்களின் கிறெடிட் கார்ட்களை பொறுத்த வரையில், சம்பந்தப்பட்ட HSBC Rewards/ Visa Platinum Cashback கிறெடிட் கார்ட்டிற்கான வருடாந்தக் கட்டணம் அடுத்த ஆண்டு நிறைவு மாதத்திலிருந்து அறவிடப்படும். TRB வாடிக்கையாளர்கள் HSBC Advance திட்டத்தின் அனுகூலங்களைத் தொடர்ந்து அனுபவிக்க விரும்பினால், மேலே சரத்து 1.2இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு சம்பளப் பிரவேச நிபந்தனையைப் பூர்த்தி செய்வதன் மூலம் மீண்டும் தகுதி பெறும் விருப்பத்தேர்வைப் பயன்படுத்தலாம்.

1.7 தற்போது பொது வங்கிச் சேவைக் கணக்கு வைத்திருப்பவர்கள் மேலே சரத்து 1.1 அல்லது 1.2இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையின் மூலம் பக்கேஜில் சேரலாம். HSBC Premier கணக்கு வைத்திருப்பவர்கள் ரூ.500,000 என்ற மொத்த உறவு மீதியை முழுமையாகப் பேணுவதன் மூலம் பக்கேஜில் சேரலாம்.

1.8 கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள் மேலே 1.1.இல் தெரிவிக்கப்பட்டுள்ள பிரவேச நிபந்தனை மூலம் பக்கேஜில் சேரலாம்.

**2.**

2.1 மேலே சரத்து 1இல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, ரூபாய் நாணய நடைமுறைக் கணக்கொன்றை அல்லது ரூபாய் நாணயச் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டியது HSBC Advance கணக்கு வைத்திருப்பவர்களுக்குக் கட்டாயமானதாகும். வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஓர் அடையாள ஆவணத்தையும் (அதாவது, தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு) வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் வழங்குநர் ஒருவரினால் வழங்கப்பட்ட அறிமுகக் கடிதம், வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தற்போதய கணக்கு வைப்பாளரினால் வழங்கப்பட்ட அறிமுகக் கடிதம், உத்தேச வாடிக்கையாளர் தற்போது நடைமுறைக் கணக்கை வைத்திருக்கும் வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட அறிமுகக் கடிதம் என்பவற்றில் ஒன்றையும் சமர்ப்பித்து நடைமுறைக் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

2.2 வாடிக்கையாளரின் அடையாளம் மற்றும் அந்தஸ்து குறித்து வங்கி திருப்தியடையுமாயின், அது தனது தற்றுணியின் பேரில், அறிமுகக் கடித நிபந்தனையைக் கைவிடக்கூடும்.

2.3 பக்கேஜில் முன்வைக்கப்பட்டுள்ள சகல அனுகூலங்களையும் அனுபவிப்பதற்கு, இருதரப்பில் ஒருதரப்பின் கையொப்ப அதிகாரமளிப்பு கட்டாயமானதாகும்.

2.4 மேற்குறிப்பிட்ட பீரவேசத் தகுதி நிபந்தனைகளை காலத்திற்குக் காலம் மாற்றும் உரிமை வங்கிக்கு உண்டு. அத்தகைய திருத்தங்கள் வங்கியின் கிளைகள் மற்றும் சுய சேவை நிலையங்களில் உள்ள விளம்பரப் பலகைகளிலும் ஏனைய பொது இடங்களிலும் www.hsbc.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திலும் பார்வைக்கு வைக்கப்படும்.

2.5 மேற்குறிப்பிட்ட அல்லது வேறேதும் காரணத்திற்காக, HSBC Advance அந்தஸ்து கைவிடப்படும் அல்லது வாபஸ் பெறப்படும் பட்சத்தில், HSBC Advance கீழுள்ள தனித்தனிக் கணக்குகள் சாதாரண கணக்குகளாக வகைப்படுத்தப்படும். அதன் பின், கணக்கு வைப்பாளர்/கள் அத்தகைய கணக்கின்/கணக்குகளின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். (இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரதியை வங்கியின் கிளையொன்றில் பெறலாம் அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பார்வையிடலாம்.

## 3. ஆணையளிப்பு

3.1 HSBC Advance பக்கேஜ் ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களின் பெயர்களில் இருந்தால்,

(a) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் நோக்கத்திற்காக, அத்தகைய ஒவ்வொருவரும் கணக்கு வைப்பாளராகக் கருதப்படுவார்.

(b) பக்கேஜிலுள்ள தனித்தனிக் கணக்குகள் தொடர்பான கூட்டுக் கணக்கு அதிகாரமளிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் எவ்வாறாக இருந்தாலும், கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் ஒருவரினால் அல்லது பலரினால் கையொப்பமிடப்பட்டு, செயற்படுத்தப்படும் காசோலைகள், அறிவுறுத்தல்கள், பணிப்புரைகள், ஏனைய பத்திரங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்திற்கும் மதிப்பளிக்க ஒவ்வொரு கூட்டுக் கணக்கு வைப்பாளரும் வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கிறார்.

(c) கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் ஒருவரின் அல்லது பலரின் வேண்டுகோளுக்கு இணங்க, வங்கியானது தனது தற்றுணிபின் பேரில் மேலதிகப் பற்றையும் வேறேதும் வசதிகளையும் வழங்குவதற்கு இணங்கக்கூடும். எனினும், இந்த பக்கேஜின் கீழ் அதற்கான பொறுப்பை கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள் தனித்தனியாகவும் கூட்டாகவும் ஏற்க வேண்டும்.

(d) வங்கியானது கூட்டுக் கணக்கு வைப்பாளர்களின் ஒருவரின் அல்லது பலரின் சார்பில் சேகரிக்கப்படுபவற்றை HSBC Advance கணக்கொன்றில் வரவு வைக்க முடியும்.

(e) கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் ஒருவர் மரணமடையும் பட்சத்தில், உயிருடன் எஞ்சியிருப்பவர்/கள் சம்பந்தப்பட்ட மரணச் சான்றிதழின் மூலப்பிரதி அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியுடன் அது பற்றி உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

(f) கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் ஒருவர் மரணமடையும் பட்சத்தில், அத்தகைய கூட்டுக் கணக்கில் எஞ்சியிருக்கும் பணம் உயிருடனிருக்கும் கணக்கு வைப்பாளருக்கு அல்லது கணக்கு வைப்பாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். செயற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பணத்தைச் செலுத்தியதற்காக, எந்தவொரு கூட்டுக் கணக்கு வைப்பாளரும் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

(g) கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் எவரேனும் ஒருவரின் மரணம் பற்றிய செய்தி கிடைக்கப்பெற்றதும், வங்கியின் ஏதேனும் கணக்கில் அல்லது கணக்குகளில் வரவாகவுள்ள அல்லது வைத்திருக்கப்படும் பணம், பிணையங்கள், உறுதிப்பத்திரங்கள், ஆவணங்கள மற்றும் ஏனைய சொத்துக்கள் அனைத்தையும் உயிருடன் இருப்பவருக்கு அல்லது உயிருடன் இருப்பவர்களுக்கு அல்லது அவர்களின் கட்டளைக்கேற்ப செலுத்தியதும் அல்லது விநியோகித்ததும் கணக்கு வைப்பாளருக்கான/வைப்பாளர்களுக்கான தனது கடப்பாட்டினைப் பூரணமாக நிறைவேற்றியுள்ளது என்பதை ஒவ்வொரு கூட்டுக் கணக்கு வைப்பாளரும் ஏற்றுக்கொள்கிறார்.

(h) ஏதேனும் மேலதிகப் பற்றிற்கு அல்லது வேறேதும் விதத்தில் கணக்கில் உறப்பட்ட ஏனைய கடப்பாடுகளுக்கு கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாளியாவார்கள்.

(i) குறிப்பிட்டதொரு கணக்குத் தொடர்பில், கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் ஒருவர் அல்லது சிலர் (ஆனால், அனைவரும் அல்லர்) இங்குள்ள கணக்கு வைப்பாளர் எவரினதும் அதிகாரத்தை மாற்றினால் அல்லது இரத்துச்செய்தால், அதன் பின்னர் வங்கியானது தனது பூரண சுயவிருப்பின் பேரில் அக் கணக்கை சகல கூட்டுக் கணக்கு வைப்பாளர்களினாலும் கூட்டாகச் செயற்படுத்தப்படும் கணக்காக மாற்றுவதற்கு உரிமை கொண்டுள்ளது.

## 4. வைப்புக்கள்

4.1 வங்கியின் பெயரில் எழுதப்படாத வெளிநாட்டு நாணய வரைவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுக் கட்டளைகளைக் கொள்வனவு செய்வதா அல்லது சேகரிப்பின் பேரில் அனுப்புவதா என்பதை வங்கி தனது தற்றுணிபின் அடிப்படையில் தீர்மானிக்கும். பணம் செலுத்துகின்ற வங்கியானது, அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட பத்திரங்களை நிராகரிக்கும் பட்சத்தில், பூரண மறுவழியுரிமையை (விதிப்பனவுகள் உட்பட) வங்கி கொண்டிருக்கும். நிராகரிப்பு பற்றிய அறிவித்தல் கிடைத்ததும், கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு எழுத்து மூலம் அல்லது வேறு வழியில்

அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட தொகை HSBC Advance கணக்கில் பற்று வைக்கப்படும்.

4.2 கணக்கு வைப்பாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும் காசோலைகள் சேகரிப்புக்காக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். செலுத்துகின்ற வங்கியினால் அவை தீர்வு செய்யப்படும் வரை பணத்தை மீளப்பெற முடியாது. பணத்தைப் பெறக்கூடிய திகதி என்பது சுட்டிக்காட்டல் நோக்கத்திற்காக மாத்திரமே வழங்கப்படுகின்றது. சேமிப்புக் கணக்குகளில் காசோலைகள் சேகரிக்கப்படவோ தீர்வுசெய்யப்படவோ மாட்டா. கொண்டுவருபவருக்கு, வைப்பாளருக்கு அல்லது மூன்றாம் தரப்பினருக்குச் செலுத்தத்தக்க வைப்புகள், காசோலைகள், பங்கிலாபச் சான்றிதழ்கள் மற்றும் ஏனைய பத்திரங்களை வைப்பிற்காக ஏற்றுக்கொள்வதை மறுக்க வங்கி உரிமை கொண்டுள்ளது.

4.3 ஏனைய வங்கிகளின் பெயரில் எழுதப்பட்டு தீர்வுக்காக அல்லது சேகரிப்பிற்காக வைப்புச் செய்யப்படும் ரூபாய் காசோலைகள், லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிட்டட்டின் விதிகளுக்கும், காலத்திற்குக் காலம் அவற்றிற்குச் செய்யப்படக்கூடிய திருத்தங்களுக்கும் அமைவாக இருக்கும். பெறுநர் வங்கிகளினால் அறவிடப்படும் ஏதேனும் தரகுப்பணங்கள், வங்கியின் பூரண தற்றுணியின் பேரில், மேலதிக கட்டணத்துடன் அல்லது மேலதிக கட்டணம் இல்லாமல் சம்பந்தப்பட்ட நடைமுறைக் கணக்குகளில் பற்று வைக்கப்படும்.

4.4 வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வெளிநாட்டு நாணயத் தாள்களை வைப்பிலிடும்போது, நாணயத் தாள்களின் பரிவர்த்தனை வீதம், தந்திவழிப் பரிமாற்ற வீதம் என்பவற்றின் வேறுபாடு காரணமாக வைப்பிலிடப்பட்ட தாள்களின் சமபெறுமதியில் குறைவு ஏற்படும்.

4.5 வங்கியின் பேரில் வரையப்பட்ட வரைவுகள்/காசோலைகள் வங்கியின் கணக்கொன்றில் வரவு வைப்பதற்காகச் செலுத்தப்படும்போது, வங்கியானது, அதன் வெளியிடப்பட்ட இறுப்பனவுப் பட்டியலுக்கிணங்கக் கையாளுகை விதிப்பனவுகளைக் கழித்துக்கொள்ளும்.

4.6 சகல வைப்புக்களும், வைப்புச் சீட்டைச் செல்லுபடியாக்குதல் மூலம் அல்லது வைப்புச் சீட்டில் வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் கையெழுத்தின் மூலம் உறுதி செய்யப்படும்.. அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பங்களினதும் மாதிரி டெலர் முடிவிட அச்சினதும் பட்டியலொன்றை வேண்டுகோளின் பேரில் பார்வையிடலாம்.

4.7 வங்கியின் கிளைகளில் வைக்கப்பட்டுள்ள காசோலை இடும் பெட்டிகளினுள் மற்றும்/அல்லது ATMகளில் வைப்பிலிடப்பட்டவையாகக் கூறப்படும் எவையேனும் காசோலைகளுக்காக (தற்காலிக அறிவித்தல் காண்பிக்கப்படுகின்றமை எவ்வாறிருப்பினும்), அவ்வாறு வைப்பிலிடப்பட்ட காசோலைகளின் (ஏதேனுமிருப்பின்) வரும்படிகள் கணக்கு வைத்திருப்பவரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தாலொழிய, வங்கியானது கணக்கு வைத்திருப்பவருக்குப் பொறுப்பாளியாக மாட்டாது. காசோலை இடுகின்ற பெட்டியினால் மற்றும்/அல்லது

ATM களினால் வழங்கப்பட்ட தற்காலிக அறிவித்தல் எவ்வாறிருப்பினும், வங்கியானது, எந்தச் சூழ்நிலையிலும் அல்லது எந்தக் காரணத்திற்கேனும், காசோலை இடுகின்ற பெட்டிகளினுள் வைப்பிலிடப்பட்டனவாகச் கூறப்பட்ட காசோலைகள் தொடர்பில் ஏதேனும் உரிமைக் கோரிக்கையை, அவ்வாறு வைப்பிலிடப்பட்ட காசோலைகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தாலொழிய, ஏற்றுக்கொள்ள மாட்டாது.

4.8 வங்கியானது, வாடிக்கையாளரின் கணக்கில் தவறுதலாக வரவு வைக்குமாயின், எந்தச் சந்தர்ப்பத்திலும் அப் பதிவை நேர்மாற்றம் செய்வதற்கு மற்றும்/அல்லது அத் தொகையை வாடிக்கையாளரிடமிருந்து கோருவதற்கு உரிமை கொண்டுள்ளது.

## 5. மீளப்பெறுதல்கள்

5.1 வங்கியானது, கணக்கு வைத்திருப்பவரின் உறுதிப்படுத்தப்பட்ட எழுத்துமூலம் அறிவுறுத்தல்களின் பேரில் மாத்திரமே கொடுப்பனவுகளுக்காகக் கணக்கில் பற்று வைத்தலைச் செயற்படுத்தும். எனினும், இது சரத்து 15இற்கு அமைவானதாக இருக்கும்.

5.2 வாடிக்கையாளரினால் இழப்பெதிர்காப்புக் கடிதம் முறைப்படி கைச்சாத்திடப்படும் பட்சத்தில் **மாத்திரமே** தொலைநகல் மூலம் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களின் பேரில் வங்கி நடவடிக்கை எடுக்கும்.

5.3 சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நடைமுறையிலுள்ள சகல அரசாங்க விதிப்பனவுகளும் வரிகளும் கணக்கு வைப்பாளரின்/வைப்பாளர்களின் கணக்கிலிருந்து அறவிடப்படும். சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதன் விளைவாக எழும் கோரிக்கைகளுக்கு அல்லது வாடிக்கையாளரினால் உறப்படும் இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பாளியாகாது.

5.4 மீளப்பெறுதல்கள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மீது ஒழுங்குபடுத்தும் அமைப்புக்களினால் வரையறைகள் விதிக்கப்படுமாயின், கணக்கு வைப்பாளர்கள் அத்தகைய வரையறைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

## 6. கால வைப்புகள்

6.1 கால வைப்புக்களை, அவை முதிர்ச்சியடைவதற்கு முன்பு மீளப்பெற முடியாது. பணத்தை மீள முதலீடு செய்வதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்காவிட்டால், முதிர்ச்சித் தொகையானது, முதிர்ச்சித் திகதியை உடனடியாக அடுத்துவரும் வேலை நாளில் மாத்திரம் வழங்கப்படும்.

6.2 எனினும், கணக்கு வைப்பாளரினால்/வைப்பாளர்களினால் (வங்கிக்கு வழங்கப்பட்ட ஆணையளிப்பிற்கு அமைவாக) முறைப்படியான எழுத்துமூல வேண்டுகோள் விடுக்கப்படும் பட்சத்தில், வங்கியானது தனது தற்றுணிபின் பேரில் கால

வைப்புக்களை முதிர்ச்சிக்கு முன்பே விடுவிக்கலாம். வங்கியின் தற்றுணிபின் பேரில் முதிர்ச்சிக்கு முன்பே விடுவிக்கப்படும் கால வைப்புக்களுக்கு வங்கியின் விதிப்பனவுப் பட்டியலுக்கு அமைவாகத் தண்டக் கட்டணம் ஒன்று அறவிடப்படும்.

6.3 தற்போதுள்ள கால வைப்பை அதிகரிப்பதற்காக மேலதிக வைப்பையும் சேர்த்து மீள முதலீடு செய்யும் நோக்கம் உட்பட எந்த நோக்கத்திற்காகவேனும் கால வைப்புத் தொகை முதிர்ச்சிக்கு முன்பே மீளப் பெறப்படுமாயின், தண்டக் கட்டணத்தைச் செலுத்தியாகவே வேண்டும். தண்டத் தொகையை வங்கி தனது தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கும். இத் தொகை ஆரம்ப வைப்புத் தொகையிலிருந்து கழிக்கப்படலாம். இதனால் ஆரம்ப வைப்புத் தொகை குறையும்.

6.4 வேறு விதமாகக் குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் இல்லாவிடின், கால வைப்புக்கள் முதிர்ச்சி அடைந்ததும், முதிர்ச்சித் திகதியில் நடைமுறையிலிருந்த வட்டி வீதத்தில் அதே போன்றதொரு காலப்பகுதிக்குப் புதுப்பிக்கப்படும்..

6.5 கால வைப்புக்களின் மீளப்பெறுகைகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மீது ஒழுங்குபடுத்துநர்களினால் வரையறைகள் விதிக்கப்படும் பட்சத்தில், கணக்கு வைப்பாளர் அத்தகைய வரையறைகளினால் பிணிக்கப்படுவார்.

6.6 ரூபாய் நாணயத்திலான கால வைப்புக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கான குறைந்தபட்ச வைப்புத் தொகை **நூறாயிரம் இலங்கை ரூபாய் (ரூ.100,000)** ஆகும். குறைந்தபட்ச வைப்புக் காலம் ஒரு (1) மாதம் ஆகும். ரூபாய் நாணய கால வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப வைப்புத் தொகையை வங்கி எவ்வித முன்னறிவித்தலுமின்றி மாற்ற முடியும். குறைந்த ஆரம்ப வைப்புடன் கணக்குகளை ஆரம்பிக்க வங்கியானது தனது தற்றுணிபின் பேரில் இணங்கக்கூடும். எனினும், குறைந்தபட்ச மீதியைக் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

6.7 ரூபாய் கால வைப்புகளுக்கான வட்டி வீதம் அறிவித்தலின்றி மாற்றப்படலாம். ஆனால், நடைமுறையிலுள்ள கால வைப்புக்கான வட்டி அந்த வைப்பு முதிர்ச்சி அடையும் வரை வங்கியினால் மாற்றப்பட மாட்டாது.

## 7. HSBC Advance சிறுவர் சேமிப்புக் கணக்கு

7.1 HSBC சிறுவர் சேமிப்புக் கணக்கு (கணக்கு), பருவமடையாத ஒருவரின் (கணக்கு வைத்திருப்பவர்) பெயரில் ஆரம்பிக்கப்படலாம் என்பதுடன், இக் கணக்கில் எவரும் பணத்தை வைப்புச் செய்ய முடியும்.

7.2 கணக்கை ஆரம்பிக்கும்போது வங்கியினால் குறித்துரைக்கப்படும் தொகையே, HSBC சிறுவர் சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகையாகும். இத் தொகை காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம்.

7.3 பிறப்புக்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பருவமடையாதவரின் பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி, கணக்கு ஆரம்பிக்கப்படும்போது வங்கியின் பரிசீலனைக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இப் பிறப்புச் சான்றிதழின் நிழற்படப் பிரதியொன்றை வங்கி தனது தேவைக்காக வைத்திருக்கும்.

7.4 இக் கணக்கிற்குரிய வட்டி வீதம் முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.

7.5 குறிப்பிட்ட காலப்பகுதியில் கணக்குத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சகல கொடுக்கல் வாங்கல்களையும் எடுத்துக்காட்டும் விபரக்கூற்றுக்கள் காலாண்டுக்கு ஒரு தடவை வழங்கப்படும்.

7.6 பருவமடையாதவர் 18 வயதை அடைந்ததும், இக் கணக்கு (சாதாரண சேமிப்புக் கணக்கிற்கான குறைந்தபட்ச மீதி நிபந்தனை பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில்) ஒரு சாதாரண சேமிப்புக் கணக்காக மாற்றப்படும். எனினும், கணக்கு வைத்திருப்பவர் அதற்குத் தேவையான ஆவணங்களை நிரப்ப வேண்டும். பராயமடையாதவர் 18 வயதை அடைந்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாவிட்டால், வங்கியானது சம்பந்தப்பட்ட கணக்கை மூடுவதுடன், பராயமடையாதவரின் பெயருக்கு எழுதப்பட்ட வங்கி வரைவு ஒன்றை வங்கியில் கடைசியாகப் பதிவு செய்யப்பட்டிருந்த கடிதத்தொடர்பு முகவரிக்கு அனுப்பிவைக்கும்.

7.7 பருவமடையாதவர் இயலாமைக்கு ஆளாக நேர்ந்தால், கணக்கிலுள்ள பணம் பெற்றோருக்கு/ பெற்றோரின் பெற்றோருக்கு/பருவமடையாதவரின் பெயரில் HSBC சிறுவர் சேமிப்புக் கணக்கை ஆரம்பித்த வேறோர் ஆளுக்கு (வேறோர் ஆள்) அல்லது நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஒரு பராமரிப்பாளருக்கு வழங்கப்படும் (அத்தகைய சந்தர்ப்பத்தில் பெற்றோரினால்/பெற்றோரின் பெற்றோரினால்/ வேறோர் ஆளினால் அல்லது நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பராமரிப்பாளரினால் கையொப்பமிடப்பட்ட பற்றுச்சீட்டு, அத்தகைய பெற்றோருக்கு/பெற்றோரின் பெற்றோருக்கு/வேறோர் ஆளுக்கு அல்லது நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பராமரிப்பாளருக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டது என்பதற்கான செல்லுபடியான மற்றும் போதுமான சான்றாகக் கொள்ளப்படும். இந்த விடயம் தொடர்பில், பருவமடையாதவர் உண்மையாகவே இயலாமைக்கு ஆளாகியுள்ளாரா என்பதைத் தீர்மானிக்கும் முழு உரிமையும் வங்கிக்கு உள்ளது.

7.8 பருவமடையாதவர் மரணமடைய நேர்ந்தால், கணக்கிலுள்ள பணம் இலங்கையின் சட்டப்படி உரிய வாரிசுக்கு வழங்கப்படும்.

7.9 பருவமடையாத எவரின் பெயரில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டதோ அவரே கணக்கில் வைப்புச் செய்யப்படும் பணம் முழுவதினதும் பயனாளியாவார். ஆகவே, பருவமடையாதவர் 18 வயதை அடையும் வரை கணக்கின் மீளப்பெறுகை/மூடுகை அனுமதிக்கப்பட மாட்டாது. எனினும், பருவமடையாதவரின் உயர் கல்வி, அவசர மருத்துவ சிகிச்சை அல்லது குடிபெயர்வு போன்ற நோக்கங்களுக்காக அல்லது

காரணங்களுக்காக, பெற்றோர்/ பெற்றோரின் பெற்றோர்/வேறோர் ஆள் அல்லது அவர்கள் உயிருடனில்லையென்றால் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பராமரிப்பாளர் விண்ணப்பிக்கும் பட்சத்தில் மாத்திரம் கணக்கின் மீளப்பெறுகையை/மூடுகையை வங்கி தனது தனித் தீர்மானத்திற்கேற்ப அனுமதிக்கக்கூடும். அத்தகைய மீளப்பெறுகையின்/ மூடுகையின் செல்லுபடியாகும் தன்மையைத் தீர்மானிக்கும் முழு உரிமையும் வங்கிக்கு உண்டு. வங்கி இது தொடர்பில் ஆவணச் சான்றுகளைக் கோரக்கூடும்.

7.10 விபரக்கூற்றுக்களின் பிரதிகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கணக்கு வைத்திருப்பவரின் /பெற்றோரின்/பெற்றோரைப் பெற்றவர்களின்/வேறோர் ஆளின் (கூட்டாக ''வாடிக்கையாளர்கள்'' எனப்படுவர்) பொறுப்பாகும். விபரக்கூற்றுக்களின் பிரதிகள் வங்கியிடமிருந்து கோரப்பட்டால், வங்கியானது அதன் பிரசுரிக்கப்பட்ட கட்டணப் பட்டியலுக்கேற்ப ஒரு கட்டணத்தை அறவிட்டு இச் சேவையை வழங்குவதற்கு உரிமை கொண்டுள்ளது.

a) ஒவ்வொரு கணக்கு விபரக்கூற்றும் கிடைத்ததும் உடனடியாக அல்லது அவ்வாறு இயலாவிட்டால் கிடைத்த திகதியிலிருந்து முப்பது (30) கலண்டர் தினங்களுக்குள் (''30 நாள் மீளாய்வு'') அதனைப் பரிசீலனை செய்து, ஒவ்வொரு பதிவையும் தம்மிடமுள்ள பதிவுகளுடன் ஒப்பிட்டு உறுதிசெய்துகொள்ள வாடிக்கையாளர்கள் இணங்குகின்றனர். ஏதேனும் தவறுகள், விடுபடுகைகள் அல்லது மோசடிகள் அனுமதியற்ற பாவனைகள் உள்ளிட்ட முறைகேடுகள் இருந்தால் அல்லது விபரக்கூற்றுத் தொடர்பாக வேறேதும் ஆட்சேபனை இருந்தால் (இவையனைத்தும் ''கணக்கு முறைகேடுகள்'' எனப்படும்) வாடிக்கையாளர்கள் எழுத்து மூலம் அல்லது PIB ஊடான வேண்டுகோள் மூலம் அவற்றை உடனடியாக வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். 30 நாள் மீளாய்வு காலத்திற்குள் அவ்விதம் செய்ய வாடிக்கையாளர்கள் தவறினால், கணக்கு விபரக்கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள மீதியும் கணக்கு முறைகேடுகள் உள்ளடங்கலான சகல பதிவுகளும் சரியானவையாகவும் பூரணமானவையாகவும் அதிகாரம் அளிக்கப்பட்டவையாகவும் வாடிக்கையாளர்களைப் பிணிப்பவையாகவும் கருதப்படும். அத்துடன், இச் சரத்திற்கு அமைவாக முறைப்பாடு கொடுக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தவிர, மிகச் சமீபத்திய கணக்கு விபரக்கூற்றுத் திகதி வரை இடம்பெற்ற ஏனைய கொடுக்கல் வாங்கல்களுக்கான சகல பொறுப்புக்களிலிருந்தும் வங்கி விடுவிக்கப்படும்.

b) மேலே சரத்து 7.10(a)இன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்ற வாடிக்கையாளர் தவறினால், வாடிக்கையாளரின் நடத்தை அல்லது தவறுகையினால் அல்லது அதன் விளைவாகக் கணக்கில் இழப்பு (வங்கியினால் உறப்பட்ட மற்றும் வங்கிக்கு எதிரான வரிகள், விதிப்பனவுகள், கட்டணங்கள், அபராதங்கள் அல்லது தண்டங்கள் போன்ற சகல விதமான இழப்புகளும் இதில் உள்ளடங்கும்) ஏற்படுமாயின், அத்தகைய இழப்புத் தொடர்பில் வங்கியானது வாடிக்கையாளலுக்கான பொறுப்பு எதையும் கொண்டிருக்காது என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார். இந்த ஒப்பந்தத்தினால் தேவைப்படுத்தப்பட்ட காலத்திற்குள் கணக்கு விபரக்கூற்றை மீளாய்வு செய்யத் தவறும் செயலானது, ஒப்பந்தத்தின் பிரகாரம் கணக்கு விபரக்கூற்று அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவேடுகள் மீளாய்வு செய்யப்பட்டு, அதன் மூலம் ஏதேனும் தவறு அல்லது விடுபடுகை கண்டுபிடிக்கப்பட்டிருக்கக்கூடிய காலம் வரை ஏற்பட்ட ஏதேனும் இழப்பின் அளவுக்கே காரணமாக அல்லது பங்களிப்புச் செய்வதாகக் கருதப்படும் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார். வங்கியின் பூரண கவனயீனம் அல்லது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட தவறான செயல் காரணமாக கணக்கிலிருந்து தவறாக மீளப்பெறப்பட்ட பிரதான தொகையின் உண்மையான நேரடி இழப்பிற்கு மட்டுமே வங்கி பொறுப்பேற்கும் என்பதையும் வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார்.

7.11 வங்கியானது வாடிக்கையாளரின் கணக்கில் தவறுதலாக ஏதேனும் பணத்தை வரவு வைத்துவிட்டால், எந்த வேளையிலும் அது தொடர்பான பதிவை நேர்மாற்றம் செய்யவும் மற்றும்/அல்லது சம்பந்தப்பட்ட தொகையை வாடிக்கையாளரிடமிருந்து கோரிப்பெறவும் உரிமை கொண்டுள்ளது.

7.12 விபரக்கூற்றுச் சுற்றுவட்டத்தின் முடிவிலிருந்து 14 தினங்களுக்குள் விபரக்கூற்று கிடைக்காவிட்டால், வங்கிக்கு அது பற்றி அறிவிக்க வேண்டும் வங்கியிலிருந்து கிடைக்கும் ஒவ்வொரு கணக்கு விபரக்கூற்றையும் பரிசீலனை செய்து, அதிலுள்ள பதிவுகளை உறுதிப்படுத்த பெற்றோர்/பராமரிப்பாளர்/பாதுகாவலர்/வேறோர் ஆள் இணங்குகின்றார்.

## 8. காசோலைகள் மற்றும் காசோலைகளின் இரத்துச்செய்கை

8.1 HSBC Advance நடைமுறைக் கணக்கு வைத்திருப்போருக்கு, காந்த முறையிலான மையினால் எழுத்தைக் கண்டறியக்கூடிய வகையில் அச்சிடப்பட்ட HSBC Advance காசோலைப் புத்தகம்/புத்தகங்கள் வழங்கப்படும். அதற்காக, ஏதேனும் அரசாங்க வரிகள் மற்றும் விதிப்பனவுகளும் வங்கியின் வெளியிடப்பட்ட

இறுப்பனவுப் பட்டியலுக்கு அமைவான விதிப்பனவுகளும் அறவிடப்படும். இந்த விதிப்பனவுகள் காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம்.

8.2 காசோலைப் புத்தகத்திற்கான வேண்டுகோள் கிடைக்கப்பெற்றதும், வங்கியானது தனது பதிவேட்டிலுள்ள கணக்கு வைப்பாளரின் முகவரிக்கு அக் காசோலைப் புத்தகத்தைத் தபால் மூலம் அனுப்பிவைக்கும். அத்தகைய ஏதேனும் விநியோக முறை காரணமாக ஏற்படும் தாமதத்திற்கு அல்லது இழப்பிற்கு வங்கி பொறுப்பாளியாகாது.

8.3 கணக்கு வைப்பாளர் புதிய காசோலைப் புத்தகத்தைப் பெற்றதும். அதில் அச்சிடப்பட்டுள்ள காசோலைத் தொடரிலக்கங்கள், கணக்கு இலக்கம், கணக்கு வைப்பாளரின் பெயர் என்பவற்றையும் காசோலைகளின் எண்ணிக்கையையும் பார்வையிட்டு உறுதிசெய்த பின்பே காசோலைப் புத்தகத்தைப் பாவிக்கத் தொடங்க வேண்டும். ஏதேனும் ஒழுங்கீனங்கள் அவதானிக்கப்பட்டால், உடனடியாக வங்கியின் கவனத்திற்குக கொண்டுவர வேண்டும்.

8.4 கணக்கு வைப்பாளர் காசோலைகளை வரைவதற்கு முன்னர், காசோலைப் புத்தக முகப்பு அட்டையின் உட்பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள நிபந்தனைகளை வாசிக்க வேண்டும். இந்த நிபந்தனைகளுக்கும், காலத்திற்குக் காலம் கொண்டுவரப்படும் திருத்தங்களுக்கும் கணக்கு வைப்பாளர் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

8.5 கணக்கு வைப்பாளர் வங்கிக்கு வழங்கிய மாதிரிக் கையொப்பத்திற்கு/ கையொப்பங்களுக்கு இணங்கவே காசோலைகளில் கையொப்பமிடுதல் வேண்டும். கையொப்பத்தில் ஏதேனும் மாற்றங்கள் இடம்பெறின், அது பற்றி உடனடியாக எழுத்துமூலம் வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

8.6 காசோலைகள் வங்கியினால் வழங்கப்பட்ட காசோலைத் தாள்களில் மாத்திரம் நிரந்தர மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு திருத்தமும் காசோலை வரைபவரின் முழுக் கையொப்பத்தினால் ஊர்ஜிதம் செய்யப்பட வேண்டும். காசோலைகளை வரைவதற்கு மின்சார/ இலத்திரனியல் தட்டச்சுக் கருவிகளை அல்லது அழிக்கக்கூடிய மையைப் பயன்படுத்தக்கூடாது. இலகுவில் கண்டுபிடிக்க முடியாத திருத்தங்களின் விளைவினால் ஏற்படக்கூடிய இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பாளியாகாது என்பதைக் கணக்கு வைப்பாளர் ஏற்றுக்கொள்கிறார்..

8.7 காசோலைத் தாள்கள் காணாமற்போனால்/களவாடப்பட்டால் அல்லது தவறான இடத்தில் வைக்கப்பட்டால், கணக்கு வைத்திருப்பவர் தனது காசோலை இலக்கம், கணக்கிலக்கம், திகதி, தொகை மற்றும் பணம் பெறுபவரின் பெயர் என்பவற்றைக் கொடுத்து, கொடுப்பனவை நிறுத்தும்படி எழுத்தில் வங்கிக்கு உடனடியாக அறிவுறுத்துதல் விடுத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட காசோலை/கள், அத்தகைய அறிவுறுத்துதல் பெறப்பட்ட நேரம் வரை செலுத்தப்பட்டிருக்காவிட்டால் மட்டுமே அத்தகைய எல்லா அறிவுறுத்துதல்களும் பயனுடையனவாகவிருக்கும். கொடுப்பனவை நிறுத்தும்படி தொலைபேசிமூலம் கொடுக்கப்பட்ட அறிவுறுத்துதல்கள், 48 மணித்தியாலங்களுக்குள் எழுத்தில்

உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய எழுத்திலான அறிவுறுத்துதல்கள் வங்கியினால் பெறப்படாதவிடத்து, கணக்கு வைத்திருப்பவருக்கான ஏதேனும் அறிவித்தலின்றி, கொடுப்பனவை நிறுத்துவதற்கான அறிவுறுத்துதலை இல்லாதாக்குவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. 48 மணித்தியாலங்களுக்குள் கணக்கு வைப்பாளரினால்/வைப்பாளர்களினால் எழுத்தில் உறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவு நிறுத்த அறிவுறுத்தலை செயற்படுத்தாமைக்கு வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

## 9. வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

9.1 வெளிநாட்டு நாணயச் சேமிப்புக் கணக்குகள்/கால வைப்புக் கணக்குகள், நாணயப் பரிவர்த்தனைப் பிரமதணங்களுக்கு அமைவாக ஆரம்பிக்கப்படும். ஏதேனும் பணத் தொகையை ஒரு நாணயத்திலிருந்து இன்னொரு நாணயத்துக்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்படுமாயிவ், அத்தகைய மாற்றம், அத்தகைய நாணயத்துக்காக வங்கியில் அப்போது நிலவிய பரிவர்த்தனை வீதத்தில் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் பரிவர்த்தகை வீதத்தில் செயற்படுத்தப்படும்.

9.2 வெளிநாட்டு நாணயச் சேமிப்புக் கணக்குகள், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட நாணயங்களில் ஆரம்பிக்கப்பட்டுப் பேணப்படலாம்.

9.3 இக் கணக்குகளில் பின்வரும் வைப்புக்கள் மட்டுமே செய்யப்படலாம்:

a) கணக்கு வைத்திருப்பருக்கான உள்வரும் அனுப்பீட்டுத் தொகைகள்.

b) நிலவுகின்ற நாணயப் பரிவர்த்தனைப் பிரமாணங்களுக்கு அமைவாக, கணக்கு வைப்பாளரினால்/வைப்பாளர்களினால் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்றுத் தொகைகள்.

## 10. கூட்டுக் கணக்குகள்

10.1 இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சகல விதிகளுக்கும் மேலதிகமாக, கணக்கு வைப்பாளர்/கள் பின்வரும் விதிகளையும் நன்கு அறிந்துள்ளார்/கள் என்பதைக் கணக்கு வைப்பாளர்/கள் அறிக்கையிடுகின்றார்/கள்:

10.1.1 கணக்கு வைப்பாளர் என்பதில் உள்ளடக்கப்படும் தனித்தனி நபர்களில் எவரேனும் ஒருவர் மரணமடையும் பட்சத்தில், மேற்படிக் கூட்டுக் கணக்கில் வரவாகவுள்ள பணம், உயிருடனிருக்கும் கணக்கு வைப்பாளருக்கு அல்லது கணக்கு வைப்பாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆதாரத்துடன் மரணம் பற்றிய அறிவித்தல் வங்கிக்கு முறைப்படி வழங்கப்படும் வரை, செயற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு அமைவாகப் பணத்தை

வழங்கியமைக்காக எந்தவொரு கூட்டுக் கணக்கு வைப்பாளரும் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

10.1.2 கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் எவரேனும் ஒருவரின் மரணம் பற்றிய அறிவித்தல் வங்கிக்குக் கிடைத்த பின்னர், வங்கியின் ஏதேனும் கணக்கில் அல்லது கணக்குகளில் வரவாகவுள்ள அல்லது வைத்திருக்கப்படும் பணம், பிணையங்கள், உறுதிப்பத்திரங்கள், ஆவணங்கள மற்றும் ஏனைய சொத்துக்கள் அனைத்தையும் உயிருடன் இருப்பவருக்கு அல்லது உயிருடன் இருப்பவர்களுக்கு அல்லது அவர்களின் கட்டளைக்கேற்ப செலுத்தியதும் அல்லது விநியோகித்ததும் கணக்கு வைப்பாளருக்கான/வைப்பாளர்களுக்கான தனது கடப்பாட்டினைப் பூரணமாக நிறைவேற்றியுள்ளது என்பதை ஒவ்வொரு கூட்டுக் கணக்கு வைப்பாளரும் ஏற்றுக்கொள்கிறார்.

ஏதேனும் மேலதிகப் பற்றிற்கு அல்லது வேறேதும் விதத்தில் கணக்கில் உறப்பட்ட ஏனைய கடப்பாடுகளுக்கு கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாளியாவார்கள்.

10.1.3 ஏதேனும் மேலதிகப் பற்றிற்கு அல்லது வேறேதும் விதத்தில் கணக்கில் உறப்பட்ட ஏனைய கடப்பாடுகளுக்கு கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாளியாவார்கள்.

10.1.4 குறிப்பிட்டதொரு கணக்குத் தொடர்பில், கூட்டுக் கணக்கு வைப்பாளர்களில் ஒருவர் அல்லது சிலர் (ஆனால், அனைவரும் அல்லர்) இங்குள்ள கணக்கு வைப்பாளர் எவரினதும் அதிகாரத்தை மாற்றினால் அல்லது இரத்துச்செய்தால், மற்றும்/அல்லது கூட்டுக் கணக்கு வைப்பாளர்களுக்கு இடையே ஏதேனும் சர்ச்சை இருக்கிறதென வங்கி அறியவந்தால், கூட்டுக் கணக்கு வைப்பாளர்களினால் வங்கிக்கு வழங்கப்பட்ட கையொப்ப அறிவுறுத்தல்கள் எவ்வாறிருந்தாலும், வங்கியானது தனது பூரண சுயவிருப்பின் பேரில் அக் கணக்கை சகல கூட்டுக் கணக்கு வைப்பாளர்களினாலும் கூட்டாகச் செயற்படுத்தப்படும் கணக்காக மாற்றுவதற்கு உரிமை கொண்டுள்ளது.

10.1.5 ஒவ்வொரு கணக்கு வைப்பாளரும், இன்னுமொரு கணக்கு வைப்பாளருடன் சேர்ந்த கண்கொன்றைப் பேணினால் அல்லது சேவையொன்றைப் பயன்படுத்தினால் (“கூட்டுக் கையொப்பதாரர்/கள்), அவர்களினால் பேணப்படும் ஒவ்வொரு கணக்கின் கீழும் அவர்களினால் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சேவையின் கீழும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் கூட்டுக் கையொப்பதார்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாளியாவார்கள்.

10.1.6 கூட்டுக் கையொப்பதாரர் ஒருவர் தனியாகக் கணக்கொன்றைப் பேணுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தால், அக் கணக்கிற்காக அல்லது அது தொடர்பில் எவரேனுமொரு கூட்டுக் கையொப்பதாரர் விடுக்கும் அறிவுறுத்தலுக்கு அல்லது வேறேதும் பணிப்புரைகளுக்கு வங்கி இணங்கியொழுகக்கூடும் (வங்கி வேறு விதமாக இணங்கினால் அல்லது தீர்மானித்தாலன்றி).

10.1.7 கூட்டுக் கையொப்பதாரர்களில் எவரேனுமொருவர் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதும், ஏனைய கூட்டுக் கையொப்பதாரர்களும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவார்கள்.

10.1.8 பின்வரும் குறைபாடுகளில் எதுவேனும் காணப்பட்டாலும் வங்கி அது பற்றி அறிந்து அல்லது அறிய வேண்டி இருந்தாலும், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினாலும் சம்பந்தப்பட்ட கணக்கு அல்லது சேவையை ஆட்சிசெய்யும் ஏனைய நிபந்தனைகளினாலும் ஒவ்வொரு கூட்டுக் கையொப்பதாரரும் பிணிக்கப்படுகின்றார்.

a) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் அல்லது அத்தகைய வேறேதும் விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்பட வேண்டிய ஒரு கூட்டுக் கையொப்பதாரர், உண்மையில் அவ்வாறு பிணிக்கப்படவில்லை/அல்லது,

b) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதுவேனும் அல்லது அத்தகைய வேறு விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஒரு கூட்டுக் கையொப்பதாரரை பொறுத்தவரை செல்லுபடியற்றதாக அல்லது நடைமுறைப்படுத்த முடியாததாக இருத்தல்.

10.1.9 வங்கியானது இன்னுமொரு கூட்டுக் கையொப்பதாரர் தொடர்பில் தனது உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் நிவாரணங்களை மட்டுப்படுத்தாமல் அல்லது குறைக்காமல் எந்தவொரு எந்தவொரு கூட்டுக் கையொப்பதாரருடனும் விடயம் தொடர்பிலும் வேறாக நடவடிக்கை மேற்கொள்ளக்கூடும். அத்தகைய விடயங்களில் பின்வருவன உள்ளடங்கும்:

a) ஏதேனும் பொறுப்பை ஏதேனும் அளவுக்கு மாற்றுதல் அல்லது நிறைவேற்றுதல்; அல்லது

b) கூடுதல் அவகாசம் அல்லது வேறேதும் சலுகை வழங்குதல் அல்லது வேறு ஏற்பாடுகளைச் செய்தல்.

10.1.10 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் எவரேனுமொரு கூட்டுக் கையொப்பதாரருக்கு வழங்கப்படும் அறிவித்தல் சகல கூட்டுக் கையொப்பதாரர்களுக்கும் செல்லுபடியானதாகக் கொள்ளப்படும்.

10.1.11 சகல கூட்டுக் கையொப்பதாரர்களுக்கும் பின்வருவனவற்றை வெளியிட வங்கிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது:

a) கணக்கு பற்றிய ஏதேனும் தகவல் - இது கூட்டுக் கையொப்பதாரர்களின் கூட்டுப் பெயர்களில் கணக்குப் பேணப்படாத காலப்பகுதி தொடர்பானதாக இருக்கக்கூடும்.

b) எவரேனும் கூட்டுக் கையொப்பதாரின் அல்லது அவரால் வழங்கப்பட்ட ஏதேனும் தனிப்பட்ட தரவுகள் மற்றும் வேறு தகவல்கள்.

## 11. டெபிற் கார்ட் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

கணக்கு வைப்பாளரினால்/வைப்பாளர்களினால் வைத்திருக்கப்படும் சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்குகளின் பேரில் வழங்கப்பட்ட HSBC Advance டெபிற் கார்ட்டின் பயன்பாட்டுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள், இந்த ஆவணத்தில் குறித்துரைக்கப்படுகின்றவாறும் காலத்திற்குக் காலம் வங்கியினால் திருத்தப்பட்டவாறாகவும் இருக்கும். கணக்கு வைத்திருப்பவர் டெபிற் கார்ட் விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிடுவதன் மூலம், அல்லது டெபிற் கார்ட் பெறப்பட்டதை எழுத்தில் ஏற்றுக்கொள்வதன் மூலம், அல்லது டெபிற் கார்ட்டின் பின்புறத்தில் கையொப்பமிடுவதன் மூலம், அல்லது டெபிற் கார்ட்டைப் பயன்படுத்திக் கொடுக்கல் வாங்கலொன்றைச் செய்துகொள்வதன் மூலம், அல்லது பதிவேட்டிலுள்ள முகவரிக்கு டெபிற் கார்ட் அனுப்பப்பட்டதிலிருந்து பத்து நாட்களின் பின்னர் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உடன்பட்டு, அவற்றை ஏற்றுக்கொள்கிறார் எனக் கருதப்படுதல் வேண்டும். கணக்கு வைப்பாளர்/கள் வங்கியுடனான அவரது நடைமுறை/சேமிப்புக் கணக்குகளின் செயற்பாட்டு விதிகள் மற்றும் நிபந்தனைகளினாலும் தொடர்ந்து பிணிக்கப்பட்டவராக இருப்பார்.

11.1 வரைவிலக்கணங்கள்

a) “ATM” என்பது தன்னியக்க டெலர் இயந்திரங்களைக் குறிக்கும்.
இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் தன்னியக்க டெலர் இயந்திரங்கள் பற்றி குறிப்பிடப்படும்போது, டெபிற் கார்ட்டின் பாவனை மூலம் செயற்படுத்தப்படும் வலையமைப்பின் ஒரு பகுதியாக (கார்ட் வழங்கப்பட்ட நாட்டில் அல்லது அதற்கு வெளியே) பயன்படுத்தப்படும் அது போன்ற வேறு இயந்திரங்களும் தன்னியக்க டெலர் இயந்திரங்கள் என்பதில் உள்ளடக்கப்படும்.

b) “கார்ட் வைத்திருப்பவர்” என்பது வங்கியிலுள்ள கணக்கின் பேரில் வங்கியினால் டெபிற் கார்ட் ஒன்று வழங்கப்பட்ட நபரைக் குறிக்கும். கார்ட் வைத்திருப்பவர் ஒரு தனிக் கணக்கு வைப்பாளராக இருக்க வேண்டும் அல்லது கூட்டுக் கணக்கு வைப்பாளராக இருந்தால் தனிக் கையொப்பதாரராக அல்லது தனியே செயற்பட அதிகாரம் பெற்றவராக இருக்க வேண்டும்.

c) “டெபிற் கார்ட்” என்பது கார்ட் வைத்திருப்பவர் ஒருவருக்கு வங்கியினால் வழங்கப்பட்ட, பொருத்தத்திற்கேற்ப, உள்நாட்டில் அல்லது சர்வதேச ரீதியில் செல்லுபடியாகும் டெபிற் கார்ட்டை குறிக்கும்.

d) “சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்கள்” என்பது கார்ட் வைத்திருப்பவர் வங்கியின் ஊடாக இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளும் சகல கொடுக்கல் வாங்கல்களையும் குறிக்கும்.

e) “வணிக நிறுவனங்கள்” என்பது எங்கிருந்தாலும் டெபிற் கார்ட்டை ஏற்றுக்கொள்ளும் நிறுவனங்களைக் குறிக்கும். வங்கியிளால் அல்லது VISA இன்டர்நஷனலினால் விளம்பரப்படுத்தப்படும் விற்பனை நிலையங்கள், கடைகள், உணவகங்கள், விமான சேவை நிறுவனங்கள் முதலியனவும் இதில் உள்ளடங்கும்.

f) “பிரதான கணக்கு” என்பது, டெபிற் கார்ட்டுடன் இணைக்கப்பட்ட பல்தொகுதிக் கணக்குகளைப் பொறுத்தவரையில், செயற்பாட்டிற்கென பிரதம/முதலாவது கணக்காக நியமிக்கப்பட்ட கணக்கைக் குறிக்கும். அதாவது, இக் கணக்கிலேயே டெபிற் கார்ட் தொடர்பான கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள், விதிப்பனவுகள், மற்றும் கட்டணங்கள் பற்று வைக்கப்படும்.

g) “VISA” என்பது VISA இன்டர்நஷனலுக்குச் சொந்தமான ஓர் அடையாளத்தைக் குறிக்கும்.

h) “VISA ATM வலையமைப்பு” என்பது டெபிற் கார்ட்டிற்கு மதிப்பளிக்கும் மற்றும் VISA அல்லது இலெக்ட்ரோன் சின்னத்தைப் பார்வைக்கு வைத்திருக்கும் ATMகளின் வலையமைப்பைக் குறிக்கும்.

11.2 டெபிற் கார்ட் வழங்கப்படுதல்

11.2.1 டெபிற் கார்ட் வழங்கலும் அதன் பாவனையும் இலங்கை மத்திய வங்கியின் (CBSL) பிரமாணங்களுக்கும் காலத்திற்குக் காலம் வலுவிலுள்ள HSBCயின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருக்கும்.

11.2.2 டெபிற் கார்ட்டும் அதனுடன் தொடர்புடைய தனிப்பட்ட அடையாள இலக்கமும் (PIN) கார்ட் வைத்திருப்பவரின் பெயரில் வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட டெபிற்

கார்ட் மற்றும் PIN இலக்கத்தைத் தனது பாதுகாப்பில் வைத்திருப்பது கார்ட் வைத்திருப்பவரின் பொறுப்பாகும்.

11.2.3 டெபிற் கார்ட்டைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் கார்ட் வைத்திருப்பவரால் அதிகாரமளிக்கப்பட்டவையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அக் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்திற்கும் கார்ட் வைத்திருப்பவரே பொறுப்பாதல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் ஏதேனும் வழிகாட்டு நெறிகள் அல்லது நாணயப் பரிவர்த்தனைச் சட்டம் மற்றும்/அல்லது தொழிற்பாட்டு அறிவுறுத்துதல்கள் மற்றும்/அல்லது அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் ("நாணயப் பரிவர்த்தனை ஒழுங்குவிதிகள்") அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதும் சட்டம், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பன மீறப்பட்டதன் காரணமாக எழுகின்ற ஏதேனும் தண்டனை, வழக்கு நடவடிக்கை உட்பட டெபிற் கார்ட்டின் அல்லது அதனுடன் தொடர்புபட்ட PIN இலக்கத்தின் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத உபயோகத்தினால் ஏற்பட்ட இழப்பிற்காக அல்லது சேதத்துக்கு எதிராக கார்ட் வைத்திருப்பவர் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்க வேண்டும். கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில், கணக்கு வைத்திருக்கும் அனைவரும் கூட்டாகவும் தனித்தனியாகவும், மேலேயுள்ளவாறு, டெபிற் கார்ட்டை பயன்படுத்துதல், PIN இலக்கத்தின் சேமக்காப்பு மற்றும் டெபிற் கார்ட்டை பயன்படுத்திச் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன தொடர்பில் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்குதல் வேண்டும். அத்தகைய கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில், எல்லாக் கணக்கு வைத்திருப்பவர்களும், கார்ட் வைத்திருப்பவருக்குப் பொறுப்பிக்கப்பட்ட எல்லாக் கடமைகளுக்கும் பொறுப்புக்களுக்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாக வேண்டியுள்ளவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

11.2.4 டெபிற் கார்ட்டை பயன்படுத்திச் செய்யப்பட்ட ஏதேனும் மீளப்பெறுகை, கைமாற்றுகை மற்றும்/அல்லது வேறேதும் கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றின் தொகையானது கணக்கில் பற்று வைக்கப்படுதல் வேண்டும். எவையேனும் கொடுக்கல் வாங்கல்களை ஈடுசெய்வதற்காக, கார்ட் வைத்திருப்பவர் தனது பிரதான கணக்கில் போதியளவு பணத்தை வைத்திருக்க வேண்டும். கார்ட் வைத்திருப்பவர் தனது பிரதான வங்கிக் கணக்கிலிருந்து பணத்தை மிகையாகப் பெறுவதற்கு அல்லது வங்கியுடன் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட மேலதிகப்பற்று எல்லை ஏதேனுமிருப்பின் அதற்கு மேலாக தனது டெபிற் கார்ட் மூலம் பணத்தை மீளப்பெறுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

11.3 கார்ட் வைத்திருப்பவரின் கடப்பாடுகளும் டெபிற் கார்ட்டின் செல்லுபடியாகும் தன்மையும்.

11.3.1 டெபிற் கார்ட் கிடைத்தவுடன் கார்ட் வைத்திருப்பவர் அதில் கையொப்பமிட வேண்டும். அவர் அதனைப் பயன்படுத்த வேறொருவருக்கு அனுமதியளிக்கக் கூடாது. அத்துடன், எல்லா நேரங்களிலும் டெபிற் கார்ட்டை தனது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் அதனைத் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்க வேண்டும்.

11.3.2 டெபிற் கார்ட்டுடன் பயன்படுத்துவதற்காக, கார்ட் வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட அல்லது கார்ட் வைத்திருப்பவர் தானாகவே தெரிவுசெய்ய PIN இலக்கம் கார்ட் வைத்திருப்பவரின் பாவனைக்கு மட்டுமானது.. அதனைக் கைமாற்றக் கூடாது. மிகவும் இரகசியமாகப் பேணப்பட வேண்டிய PIN இலக்கம் வேறு நபர்களினால் பயன்படுத்தப்படுவதற்கு இடமளிக்கு வகையில் எழுதிவைக்கப்படக் கூடாது. எந்தவொரு சூழ்நிலையிலும் சுயவிருப்பத்துடன் அல்லது வேறு வழிமுறைகள் மூலம் அது எவரேனும் மூன்றாம் தரப்பினருக்கு வெளிப்படுத்தப்படக் கூடாது.

11.3.3 டெபிற் கார்ட்டானது, குறிப்பிடப்பட்ட மாதத்தின்/ஆண்டின் கடைசி நாள் வரை செல்லுபடியாகும். டெபிற் கார்ட்டின் செல்லுபடிக் காலம் முடிவுறும்போது, அதனைப் பல துண்டுகளாக வெட்டி அழித்துவிட கார்ட் வைத்திருப்பவர் பொறுப்பேற்கின்றார். டெபிற் கார்ட் காலாவதியாகுவதற்கு முன்னர், HSBC தனது தற்றுணிபின் பேரிலும் கணக்கின் நடத்துகை பற்றிய மதிப்பீட்டின் அடிப்படையிலும், புதுப்பிக்கப்பட்ட டெபிற் கார்ட் ஒன்றை கார்ட் வைத்திருப்பவருக்கு அனுப்பும். காலாவதியான டெபிற் கார்ட்டை புதுப்பிப்பிக்கும் தனியுரிமையையும் HSBC கொண்டுள்ளது.

11.4 ATMகளின் பாவனை

11.4.1 டெபிற் கார்ட்டானது, HSBC குழுமத்தின் ATMகளிலும் VISA ATM வலையமைப்பில் அங்கம் வகிக்கும் உலகம் முழுவதுமுள்ள ஏனைய வங்கிகளின் ATMகளிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

11.4.2 வங்கியானது தனது தற்றுணிபின் பிரகாரம், ATM பணப் பரிமாற்ற வசதியையும் சகல விதமான கொடுக்கல் வாங்கல்களுக்கான சகல பணப் பரிமாற்ற வசதிகளையும் தற்காலிகமாக மீளப்பெறலாம் அல்லது முடிவுறுத்தலாம். ATM மூலமான பணப் பரிமாற்றங்கள் மற்றும் பண மீளப்பெறுகைகள் தொடர்பில் நாளொன்றுக்கான உச்சவரம்பை மாற்றுவதற்கான உரிமையையும் வங்கி கொண்டுள்ளது.

11.4.3 கார்ட் வைத்திருப்பவரினால் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் HSBC குழும ATMகளில் அல்லது VISA ATMகளில் மேற்கொள்ளப்பட்ட பண மீளப் பெறுகைகள் யாவும், காலத்திற்குக் காலம் நடைமுறையிலிருக்கும் விதிப்பனவுகள் பட்டியலுக்கு அமைவான பண மீளப்பெறுகைக் கட்டணமொன்றுக்கு உட்டுபடும்.

11.4.4 டெபிற் கார்ட்டை பயன்படுத்துவதன் மூலம் ஏதேனும் ATMஇல் வைப்புச் செய்யப்பட்ட பணம் மற்றும்/அல்லது காசோலைகள், வங்கியினால் உறுதிசெய்யப்பட்ட பின்னர் மட்டுமே கணக்கில் வரவு வைக்கப்படும். இது எல்லா நோக்கங்களுக்காகவும் முடிவானதாகவும் பிணிப்பதாகவும் இருத்தல் வேண்டும். வைப்பிலிடும் நேரத்தில் ATMஇனால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டானது, கார்ட் வைத்திருப்பவர் வைப்புச் செய்துள்ளாரெனக் கூறப்படுவதை மாத்திரம் குறிக்கின்றதேயொழிய வங்கியைப் பிணிக்காது. காசோலைகள் சேகரிப்புக்காக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுமென்பதுடன், இக் காசோலைகள் தீர்வு செய்யப்படும் வரை வரும்படிகள் கிடைக்கவும் மாட்டாது. HSBC ATM ஒன்றிலான சகல் பண மீளப்பெறுகைக்ளுக்காகவும் மீளப்பெறும் நேரத்தில் ATMஇனால் வழங்கப்பட்ட விபரக்கூற்றுக்கள் HSBCஇனால் வேறு விதமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டாலொழிய, முடிவானவையாதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் ஊர்ஜிதப்படுத்தல் அதே போன்று இறுதியானதும் முடிவானதுமாகும். ஊர்ஜிதம் செய்யப்பட்ட இத் தொகை கார்ட் வைத்திருப்பவரைப் பிணிக்கும்.

11.4.5 டெபிற் கார்ட் எந்த நாட்டில் வழங்கப்பட்டதோ அந்த நாடு தவிர்ந்த வேறொரு நாட்டில் கிடைக்கக்கூடிய ATM சேவையானது, அத்தகைய வேறு நாட்டில் வலுவிலுள்ள உள்நாட்டு பிரமாணங்களினால் ஆளுகை செய்யப்படும். இச் சேவைகள், முன்னறிவித்தலின்றி வாபஸ் பெறப்படின், HSBC அதற்குப் பொறுப்பாளியாகாது.

11.5 வணிக நிறுவனப் பாவனை

11.5.1 டெபிற் கார்ட்டானது, இலத்திரனியல் பயன்பாட்டுக்கு மட்டுமேயாகும். இலத்திரனியல் விற்பனை ஸ்தான “ஸ்வைப்” முனையத்தைக் கொண்ட வணிக நிறுவனங்களில் மட்டுமே அது ஏற்றுக்கொள்ளப்படும். வர்த்தக நிறுவனங்களில் கொள்வனவுகளைச் செய்வதற்கு, இலத்திரனியல் விற்பனை ஸ்தான “ஸ்வைப்” முனையத்தின் ஊடாக அல்லாமல் வேறேதும் வழியில் கார்ட்டை பயன்படுத்துதல் அதிகாரமளிக்கப்படாத செயலாகக் கருதப்படும். அத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்கு கார்ட் வைத்திருப்பவரே பொறுப்பாளியாதல் வேண்டும்..

11.5.2 பாதுகாப்பு ஏற்பாட்டின் நிமித்தம், ஒரு புதிய டெபிற் கார்ட் ஆரம்பத்தில் வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்படுவதற்கு செயல்வலு அற்றதாக இருக்கும். வணிக நிறுவனங்களில் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பயன்படுத்தக்கூடியதாக அதனைச் செயல்வலுப்படுத்த, கார்ட் வைத்திருப்பவர் HSBC வாடிக்கையாளர் சேவையின் பிரத்தியேகத் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு எடுக்க வேண்டும்.

11.5.3 கார்ட் வைத்திருப்பவர் வணிக நிறுவனங்களில் கொடுப்பனவுகளைச் செய்வதற்குப் டெபிற் கார்ட்டை பயன்படுத்தும்போது, விற்பனைச் சீட்டில் கையொப்பமிடுவதுடன், கார்ட் வைத்திருப்பவருக்கான அதன் பிரதியை தன்னுடன் வைத்துக்கொள்ள வேண்டும். விற்பனைச் சீட்டின் மேலதிக பிரதிகள் தேவைப்படின், ஒரு மேலதிகக் கட்டணத்தின் பேரில் HSBC அவற்றை வழங்கக்கூடும். கார்ட் வைத்திருப்பவரின் கையொப்பத்துடன் டெபிற் கார்ட் இலக்கமும் குறிப்பிடப்பட்ட ஒரு விற்பனைச் சீட்டானது, அட்டை வைத்திருப்பவரினால் உறப்பட்ட பொறுப்பின் அளவு பற்றி HSBCக்கும் கார்ட் வைத்திருப்பவருக்கும் இடையே ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவான சான்றாக இருக்கும். கார்ட் வைத்திருப்பவர் தனக்குத் திருப்தியான முறையில் பண்டங்களை /சேவைகளை பெற்றுள்ளார்/பயன்படுத்தியுள்ளார் என்பதனை உறுதிப்படுத்தும் கடப்பாடு வங்கிக்குக் கிடையாது. கார்ட் வைத்திருப்பவரினால் நேரடியாகக் கையொப்பமிடப்படாத, ஆனால் கார்ட் வைத்திருப்பவரினால் அதிகாரமளிக்கப்பட்டதாக நிருபிக்கப்படக்கூடிய ஏதேனும் விற்பனைச் சீட்டும் கார்ட் வைத்திருப்பவரின் பொறுப்பாகக் கருதப்படும்.

11.5.4 இலங்கையிலும் வெளிநாடுகளிலும் VISA Electron இலச்சினையைப் பார்வைக்கு வைத்துள்ள சகல இலத்திரனியல் வணிக நிறுவனங்களிலும் டெபிற் கார்ட் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பண்டங்களையும் சேவைகளையும் வழங்குதலுட்படவும் ஆனால் அதற்கு மட்டும் வரையறுக்கப்படாமலும், கார்ட் வைத்திருப்பவருடன் வணிக நிறுவனம் மேற்கொள்ளக்கூடிய எவையேனும் கையாளுகைகளுக்கு HSBC எவ்வித பொறுப்பையும் ஏற்காது. கார்ட் வைத்திருப்பவருக்கு விலைக்கழிவுகள் போன்ற அனுகூலங்களை வழங்கும் மூன்றாம் தரப்பினரால் முன்வைக்கப்படும் பண்டங்களினதும் சேவைகளினதும் தரச்சிறப்புப் பற்றி HSBC எவ்வித கருத்தும் வெளியிடாது. சேவையானது எவ்வழியிலும் குறைபாடுள்ளதாக அல்லது வேறு வகையில் திருப்தியற்றதாக இருப்பின், HSBC அதற்குப் பொறுப்பாளியாகாது.. ஏதேனும் வணிக நிறுவனம் தொடர்பாக கார்ட் வைத்திருப்பவர் ஏதேனும் முறைப்பாட்டை கொண்டிருப்பின், அவர் அவ் விடயத்தை சம்பந்தப்பட்ட வணிக நிறுவனத்துடன் தீர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுதல், HSBCக்கான எவையேனும் கட்டுப்பாடுகளிலிருந்து கார்ட் வைத்திருப்பவரை விடுவிக்காது. எவ்வாறாயினும், இயன்றவிடத்தெல்லாம் கார்ட் வைத்திருப்பவருக்கு உதவ HSBC முயற்சி செய்யக்கூடும். இதற்காக, கார்ட் வைத்திருப்பவர் பொருத்தமான ஏதேனும் ஆதார ஆவணங்களுடன் தனது முறைப்பாடு பற்றி HSBCக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

11.5.5 வருமதிகளைச் சேகரிக்கும் விடயத்தை எவரேனும் முகவரிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் ஏற்படின் சேகரிப்பு மற்றும் சட்ட நடவடிக்கை தொடர்பாக ஏற்படும் செலவுகளுக்கும் பிணக்கொன்றைத் தீர்த்துவைப்பதற்குச் சட்ட மூலவளங்கள் பயன்படுத்தப்படும் பட்சத்தில் அதற்காக ஏற்படும் செலவுகளுக்கும் கார்ட் வைத்திருப்பவர் பொறுப்பேற்க வேண்டும்.

11.5.6 டெபிற் கார்ட்டை ஏற்றுக்கொள்ள ஏதேனும் வணிக நிறுவனம் மறுக்குமாயின், HSBC அதற்கான பொறுப்பை ஏற்காது.

11.5.7 ஏதேனும் ஒரு வணிக நிறுவனத்தினால் விதிக்கப்பட்டு, கொடுக்கல் வாங்கலின் தொகையுடன் கணக்கில் பற்று வைக்கப்படும் ஏதேனும் மிகைக் கட்டணத்திற்கு HSBC பொறுப்பேற்காது.

11.5.8 ஒரு கொள்வனவும், அதன் பின்னர் பண்டங்கள் அல்லது சேவைகளை இரத்துச் செய்வதன் பேரில் மேற்கொள்ளப்படும் வரவு வைப்பும் இரு வெவ்வேறு கொடுக்கல் வாங்கல்களாகும். மீளளிப்பானது, வணிக நிறுவனத்திடமிருந்து பெறப்படுகின்றவாறும் பெறப்படுகின்றபோதும் மட்டுமே (இரத்துச் செய்கைக்கான கட்டணங்களைக் கழித்துக்கொண்டு) பிரதான கணக்கில் வரவு வைக்கப்படும். மீளளிப்பு நாளிலிருந்து 30 தினங்களுக்குள் வரவானது பிரதான கணக்கில் பதிவு செய்யப்படாதிருப்பின், கார்ட் வைத்திருப்பவர், வணிக நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட வரவுக் குறிப்பின் பிரதியுடன் HSBCக்கு அறிவித்தல் வேண்டும்.

11.5.9 பல கணக்குகளுடன் இணைக்கப்பட்ட டெபிற் கார்ட்களைப் பொறுத்தவரையில், வணிக நிறுவனங்களிலான கொடுக்கல் வாங்கல்கள், பிரதான கணக்கில் பற்று வைக்கப்படுவதன் மூலமே செயற்படுத்தப்படும். அத்தகைய கொடுக்கல் வாங்கல்களைச் செயற்படுத்த அக் கணக்கில் போதியளவு பணம் இல்லாவிடின், அவசியமான பணத் தொகையானது டெபிற் கார்ட்டுடன் இணைக்கப்பட்ட ஏனைய கணக்குகளில் கூட்டுமொத்தமாக அல்லது தனித்தனியாக இருந்தாலும்கூட, HSBC அத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்கு மதிப்பளிக்காது.

11.6 டெபிற் கார்ட்டின் சர்வதேசப் பாவனை

11.6.1 டெபிற் கார்ட்டின் பாவனை, எல்லா நேரங்களிலும், வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அதன் கீழுள்ள பிரமாணங்களுக்கும் கண்டிப்பாக இணங்கியிருத்தல் வேண்டும். அவ்வாறு இணங்கியொழுகுவதற்குத் தவறும் பட்சத்தில், கணக்கு வைத்திருப்பவர்/கள், வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சட்டம் மற்றும் அதன் கீழுள்ள பிரமாணங்களின் பிரகாரம் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாவார்கள். அத்துடன், HSBCயின் அல்லது இலங்கை மத்திய வங்கியின் வங்கியின் பணிப்பிற்கு அமைய, டெபிற் கார்ட்டின் பாவனை தடைசெய்யப்படலாம். கணக்கு வைத்திருப்பவர் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சட்டம் மற்றும் அதன் கீழுள்ள பிரமாணங்களுக்கு இணங்கியொழுகாமை காரணமாக எழுகின்ற

ஏதேனும்/எல்லா விளைவுகளிலிருந்தும் அவற்றுக்கு எதிராகவும் கணக்கு வைத்திருப்பவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும், HSBCக்கு இழப்பெதிர்காப்பு வழங்குவதுடன் வங்கியை தீங்கிலிருந்து விலக்கி வைத்திருத்தலும் வேண்டும்.

11.6.2 டெபிற் கார்ட் எந்த நாட்டில் வழங்கப்பட்டதோ அந்த நாடு தவிர்ந்த ஏனைய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பண மீளப்பெறுகைகள், வங்கியினால் காலத்திற்குக் காலம் அறிவிக்கப்படும் பண மீளப்பெறுகைக் கட்டணமொன்றுக்கு உட்படும். டெபிற் கார்ட் எந்த நாட்டில் வழங்கப்பட்டதோ அந்த நாடு தவிர்ந்த ஏனைய நாடொன்றில், வேண்டுகோளின் பேரில் வழங்கப்படும் ATM சேவைகளின் கிடைக்கும் தன்மையானது அந்த நாட்டில் வலுவிலுள்ள உள்நாட்டுப் பிரமாணங்களினால் ஆளுகை செய்யப்படும். இச் சேவைகள் முன்னறிவித்தலின்றி வாபஸ் பெறப்படின் வங்கி அதற்குப் பொறுப்பாளியாகாது.

11.6.3 வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்∴அல்லது பயணச் செலவுகள், ஹொட்டல் கட்டணங்கள். இடைநேர் விளைவான செலவுகள், மருத்துவச் செலவுகள், கல்விசார் செலவுகள், பயணம் மற்றும் உடல்நலம் தொடர்பான காப்புறுதிச் செலவுகள், சொந்தப் பயன்பாட்டுக்காகப் பண்டங்களைக் கொள்வனவு செய்தல் போன்ற தனிப்பட்ட செலவுகளுக்காக வெளிநாட்டு நாணயத்தில் விலைப்பட்டியல் இடப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றிற்காக மட்டுமே கார்ட் வைத்திருப்பவர் தனது டெபிற் கார்ட்டை பயன்படுத்த வேண்டும். மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான கொடுப்பனவுக்காகவும் வர்த்தக அளவுகளில் பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது இறக்குமதி செய்வதற்காகவும் கார்ட் பயன்படுத்தப்படலாகாது

11.6.4 இலங்கை ரூபாய்களை ஒரு வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றும் தேவையை ஏற்படுத்தும் மேற்கூறப்பட்டவாறான எவையேனும் கொடுக்கல் வாங்கல்களை இலங்கையிலிருந்து அல்லது வெளிநாடுகளிலிருந்து மேற்கொள்வதற்கு, தனது டெபிற் கார்ட்டை பயன்படுத்த கார்ட் வைத்திருப்பவர் வேறெவருக்கும் அனுமதியளிக்கக் கூடாது

11.6.5 கார்ட் வைத்திருப்பவர் குடிபெயரும்போது அல்லது வெளிநாட்டுத் தொழிலுக்காக இலங்கையை விட்டு அகலும்போது அல்லது காலத்திற்குக் காலம் நடைமுறையிலிருக்கும் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களின் வரைவிலக்கணங்களின்படி ‘‘வதிவற்றவராகக்’’ கருதப்படும் பட்சத்தில், தன்னிடமுள்ள டெபிற் கார்ட்டை/கார்ட்களை வங்கியிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

11.6.6 வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைத் திணைக்களப் பணிப்பாளர் அல்லது வேறேதும் ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ‘‘அறிக்கையிடுதல்’’ நிபந்தனைகளுக்கு வங்கி இணங்கியொழுகும்.

11.6.7 காலத்திற்குக் காலம் நடைமுறையிலுள்ள வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சட்டம் மற்றும் அதன் கீழுள்ள பிரமாணங்களின் மீறுகை இடம்பெற்றுள்ளதென வங்கி நம்பும் பட்சத்தில், கார்ட் வைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு அறிவித்தல் கொடுக்காமலே கார்ட்டை இரத்துச்செய்ய வங்கி அதன் சொந்த விருப்பத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கக்கூடும்.

11.6.8 காலத்திற்குக் காலம் இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படும் வெளிநாட்டு நாணயமாற்று உரித்துடைமைகளை (எவையேனுமிருப்பின்) கார்ட் வைத்திருப்பவர் மீறினால், அத்தகைய மீறல் பற்றி HSBC அறியவந்து, அதன் காரணமாக ஏதேனும் கொடுக்கல் வாங்கலுக்கான அதிகாரமளிப்பை மறுக்கும் பட்சத்தில், அதன் நிமித்தம் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் ஏற்படும் ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்கு HSBC எவ்வித பொறுப்பையும் ஏற்காது.

11.6.9 எவையேனும் சட்டவிரோதமான கொள்வனவுகளுக்காக, அதாவது நடைமுறையில் உள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின்படி அனுமதிக்கப்படாத பொருள்களின்/சேவைகளின் கொள்வனவுகளுக்காகக் கொடுப்பனவு செய்வதற்குப் டெபிற் கார்ட்டை பயன்படுத்தாமலிருக்க கார்ட் வைத்திருப்பவர் உடன்படுகிறார். இந்த நிபந்தனை மீறப்படின், அது பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையிடுவதற்கான உரிமையை HSBC கொண்டுள்ளது.

11.6.10 வெளிநாட்டு நாணயமாற்று தொடர்பாக நிலவுகின்ற சட்டங்கள் மற்றும் பிரமாணங்களின்படி, ரூபாய்க் கணக்குகளுடன் தொடர்புபடுத்துவதற்காக சர்வதேச ரீதியில் செல்லுபடியாகும் டெபிற் கார்ட் ஒன்றை வதிவற்றோருக்கு வழங்க முடியாது.

11.6.11 சட்டத்தினால், அரசாங்கப் பிரமாணங்களினால் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்துதல்களினால் திருத்தங்கள் தேவைப்படுத்தப்படின், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் தன்னியல்பாகவே திருத்தப்படும்.

11.7 கட்டணங்கள்

11.7.1 டெபிற் கார்ட் வழங்கப்படும்போது/புதுப்பிக்கப்படும்போது அதற்கான வருடாந்தக் கட்டணங்கள், காலத்திற்குக் காலம் நடைமுறையிலிருக்கும் விதிப்பனவுகள் பட்டியலின்படி, பிரதான கணக்கில் பற்றுவைக்கப்படும். இக் கட்டணங்கள் மீளப்பெற முடியாதவையாகும்.

11.7.2 டெபிற் கார்ட்டுடன் தொடர்புபட்ட ஏனைய அறவீடுகள் காலத்திற்குக் காலம் நடப்பிலுள்ள விதிப்பனவுகள் பட்டியலின்படி பிரதான கணக்கில் பற்றுவைக்கப்படும்.

11.7.3 வங்கி அதன் தற்றுணிபின் பேரிலும், கார்ட் வைத்திருப்பவருக்கு முன்னறிவித்தல் கொடுக்காமலும், உரிய விதிப்பனவுகள் பட்டியலைக் காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்வதற்கு உரிமை கொண்டுள்ளது. மறுசீரமைக்கப்பட்ட விதிப்பனவுகள் பட்டியலை www.hsbc.lk. என்ற வங்கியின் பொது

வலைத்தளத்தில் பார்வையிடலாம். கார்ட் வைத்திருப்பவர் இந்த விதிப்பனவுகள் பட்டியலை வங்கியில் கேட்டுப் பெறவும் முடியும்.

11.7.4 வெளிநாட்டு நாணயத்திலான சகல விதிப்பனவுகளும் இலங்கை ரூபாய்களில் பிரதான கணக்கில் பற்று வைக்கப்படும். வெளிநாட்டு நாணயத்தில் உறப்பட்ட விதிப்பனவுகள் அனைத்தும் HSBCஇனால் அல்லது VISA இன்டர்நஷனலினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் வீதத்தில் அதற்குச் சமமான இலங்கை ரூபாயாக மாற்றப்படுவதற்கு கார்ட் வைத்திருப்பவர் HSBCக்கும் VISA இன்டர்நஷனலுக்கும் இத்தால் அதிகாரமளிக்கின்றார்.

11.8 தகவல்களின் வெளிப்படுத்தல்

11.8.1 டெபிற் கார்ட்டை வழங்குதல், அதனைப் பேணுதல், டெபிற் கார்ட்டை பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை நிறைவேற்றுதல், டெபிற் கார்ட்டை புதுப்பித்தல் அல்லது டெபிற் கார்ட்டுடன் தொடர்புபட்ட வேறேதேனும் நோக்கம் என்பவற்றுக்காக HSBC அவசியமெனக் கருதுகின்ற எவையேனும் விடயங்கள் தொடர்பாக ஏதேனும் தகவலை, பதிவேடுகளை அல்லது சான்றிதழ்களை வழங்கும்படி HSBC வேண்டுகோள் விடுக்கும்போது, கார்ட் வைத்திருப்பவர் அவற்றை வழங்குதல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் தகவல்களை எத்தகைய வழிவகைகள் மூலமும், அவசியமெனக் கருதப்படுகின்ற எத்தகைய மூலவிடங்களிலிருந்தும் விசாரித்து ஊர்ஜிதம ் செய்ய கார்ட் வைத்திருப்பவர் HSBCக்கு அதிகாரமளிக்கின்றார். கார்ட் வைத்திருப்பவர் அத்தகைய தகவல்களை/தரவுகளை வழங்காவிடின் அல்லது பிழையான தகவல்களை/தரவுகளை வழங்கினால், HSBC, அதன் தற்றுணிபிற்கேற்ப டெபிற் கார்ட்டை புதுப்பிக்க மறுக்கலாம் அல்லது டெபிற் கார்ட்டை உடனடியாக முடிவுறுத்தலாம்.

11.8.2 கார்ட் வைத்திருப்பவர் பற்றிய தகவல்களை தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட ஏதேனும் நீதிமன்றத்திற்கும் மருவிய நீதித்துறை அதிகாரிகளுக்கும் சட்ட அமுலாக்க முகவரகங்களுக்கும் அரசாங்கத்தின் வேறேதேனும் பிரிவுக்கும் வெளியிட HSBC உரிமை கொண்டுள்ளது.

11.8.3 ஏதேனும் இலத்திரனியல் பணப் பரிமாற்ற வலையமைப்பில் பங்குபற்றுதல் சம்பந்தமாக அவசியப்படும் அல்லது பொருத்தமுடையதாகவிருக்கும், அல்லது டெபிற் கார்ட்டின் பயன்பாட்டிலிருந்து அல்லது செயற்பாட்டிலிருந்து அல்லது அது சம்பந்தமாக எழுகின்ற எவையேனும் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமென வங்கி கருதக்கூடிய கணக்குத் தொடர்பான தகவல்களை, கண்டிப்பான இரகசியத்தன்மையுடன் வேறு நிறுவனங்களுக்கு வெளியிட HSBC உரிமை கொண்டுள்ளது.

11.8.4 பின்னலுவலகச் செயற்பாடுகள் மற்றும் வெளியாரிடம் ஒப்படைக்கப்பட்ட வேறு செயற்பாடுகளின் நோக்கத்துக்காக, HSBC அதன் தற்றுணிபிற்கேற்ப, ஏதேனும் மூன்றாம் தரப்பிற்கு எவையேனும் செயற்பாடுகளைக் குறித்தளித்து, அத்தகைய மூன்றாம் தரப்பின் முகவர் நிலையங்களுக்கும் கணக்கின் விபரங்களை வழங்கலாம். இது தொடர்பில், கணக்கு வைத்திருப்பவர்/கள், HSBC குழுமத்தினுள் அல்லது வங்கியினால் பயன்படுத்தப்படும் ஏதேனும் நிறுவனத்துடன் அல்லது எவரேனும் முகவருடன் அல்லது மூன்றாம் தரப்பினருடன் கணக்கு மற்றும்∴அல்லது கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய தகவல்களை வங்கி செயல்முறைப்படுத்த, பகிர்ந்துகொள்ள, களஞ்சியப்படுத்த அல்லது அனுப்ப வேண்டியிருக்கும் என்பதைக் கணக்கு வைத்திருப்பவர்/கள் விளங்கிக்கொண்டு, அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கின்றார்/ அதிகாரமளிக்கின்றனர்.

11.8.5 தகவல்களின் அத்தகைய ஏதேனும் செயல்முறைப்படுத்துதல், பகிர்தல், களஞ்சியப்படுத்துதல் அல்லது அனுப்பீடு செய்தல் இரகசியமான முறையில் மேற்கொள்ளப்படுவதற்கு வங்கி பொறுப்பேற்கின்றது. பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய நிலைமைகளில் இந்த தகவல்களை HSBC குழுமத்திற்குள் மிகவும் இரகசியமாகப் பேணுவதற்கும் வங்கி முயற்சி செய்யும்:

i. ஏதேனும் பொருத்தமான சட்டத்தினால், பிரமாணத்தினால் அல்லது ஏதேனும் பகிரங்க அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரியின் வேண்டுகோளினால் வேறு வகையாகத் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் அல்லது
ii. மோசடியைத் தடுக்கும் நோக்கங்களுக்காக வெளிப்படுத்தல் தேவைப்பட்டால் அல்லது
iii. டெபிற் கார்ட் வசதியை வழங்குவதற்கு வெளிப்படுத்தல் அவசியமென வங்கி கருதினால்

கணக்கு வைத்திருப்பவரும்/வைத்திருப்பவர்களும் வங்கியும் ஏற்புடைய சகல தரவுப் பாதுகாப்புச் சட்டங்களுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும். எவ்வாட்களின் தனிப்பட்ட அல்லது வேறு தரவு அனுப்பப்படுகின்றதோ, செய்முறைப்படுத்தப்படுகின்றதோ அல்லது வேறு வகையாகக் கையாளப்படுகின்றதோ அவ்வாட்கள் எல்லோரும், இச் சட்டங்களுக்கிணங்க, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அத்தகைய அனுப்புகைக்கு, செய்முறைப்படுத்துகைக்கு அல்லது வேறு கையாளுகைக்குச் சம்மதித்துள்ளார்/சம்மதித்துள்ளனர் என்றும் அல்லது அத்தகைய ஏதேனும் அனுப்பீட்டிற்கு, செய்முறைப்படுத்துகைக்கு அல்லது வேறு கையாளுகைக்கு

முன்னர் அவ்வாறு செய்வார்/கள் என்றும் கணக்கு வைத்திருப்பவர்/கள் உறுதிப்படுத்துகின்றார்/உறுதிப்படுத்துகின்றனர். இந்த ஏற்பாட்டின் ஏதேனும் மீறுகையின் விளைவாக உறப்பட்ட சகல செலவு தொகைகள், தண்டங்கள், இழப்பீடுகள் மற்றும் வேறு நட்டங்கள் என்பவற்றுக்கெதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும் வங்கியைத் தீங்கிலிருந்து விலக்கி வைக்கவும் கணக்கு வைத்திருப்பவர் மேலும் உடன்படுகின்றார்.

11.8.6 டெபிற் கார்ட் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணய மீளப்பெறுகைகள்/கொடுப்பனவுகள் பற்றி இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையிடுவதற்கான உரிமையை HSBC கொண்டுள்ளது.

11.9 தொலைந்த அல்லது திருடப்பட்ட டெபிற் கார்ட்

11.9.1 டெபிற் கார்ட் தொலைந்தமை அல்லது திருடப்பட்டமை, அத்தகைய தொலைவு/திருட்டு பற்றி அறியவந்தவுடனேயே தொலைபேசி, தொலைநகல் அல்லது ரெலெக்ஸ் மூலம் வங்கியின் அட்டை நிலையத்திற்கும் எழுத்தில் பொலிசாருக்கும் (அல்லது, வெளிநாட்டிலிருப்பின், வீசா அல்லது மாஸ்டர்கார்ட் அங்கத்தவர் ஒருவருக்கும்) அறிவிக்கப்பட வேண்டும். அதே சமயத்தில், அத்தகைய ஏதேனும் தொலைபேசி, தொலைநகல் அல்லது ரெலெக்ஸ் செய்தியானது, கார்ட் வைத்திருப்பவரின் அல்லது உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட அவரது அட்டோர்னித் தத்துவக்காரரின் கைப்பட்ட கையொப்பத்தின் மூலம் உடனடியாக எழுத்தில் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். டெபிற் கார்ட் காணாமற்போனமை அல்லது திருடப்பட்டமை அறிவிக்கப்பட்டு, பின்னர் மேற்கூறப்பட்டவாறு வங்கிக்கு அல்லது VISA அல்லது Mastercard உறுப்பினருக்கு எழுத்தில் உறுதிப்படுத்தப்படும் வரை, டெபிற் கார்ட்டின் அனுமதியற்ற பயன்பாட்டின் விளைவாக கார்ட் பிரதான கணக்கில் பற்று வைக்கப்பட்ட எல்லாத் தொகைகளுக்கும் டெபிற் கார்ட் பிரதான கணக்கில் இனிமேல் பற்று வைக்கப்படவுள்ள முடிவுறாத டெபிற் கார்ட் கொடுக்கல் வாங்கல்களுக்கும் கார்ட் வைத்திருப்பர் பொறுப்பேற்க வேண்டும். கார்ட் வைத்திருப்பவர் காணாமற்போன அல்லது திருடப்பட்ட டெபிற் கார்ட்டை/கார்ட்களை மீட்டெடுக்கும் பட்சத்தில், மீட்டெடுக்கப்பட்ட டெபிற் கார்ட்டை/ கார்ட்களை உடனடியாக வங்கிக்குத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

11.9.2 மேலேயுள்ள சரத்து 11.9.1க்கு இணங்க, கார்ட் காணாமற்போனமை எழுத்தில் அறிவிக்கப்பட்ட பின்னர், காணாமற்போன ஒரு டெபிற் கார்ட்டின் பேரில் வணிக நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பொறுப்பு பூச்சியமாகவிருக்கும். ஆயினும், காணாமற்போன டெபிற் கார்ட்டை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு நியாயமான கவனமும் முயற்சியும் எடுக்கப்பட்டதென்றும் காணாமற்போனமை/திருடப்பட்டமை உடனடியாக அறிவிக்க்ப்பட்டதென்றும் கார்ட் வைத்திருப்பவர் நல்லெண்ணத்துடன் செயலாற்றினாரென்றும்

நிரூபிக்கப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும் (இச் சிறப்புக்கூறு இதனகத்துப் பின்னர் ''பூச்சிய காணாமற்போன கார்ட் பொறுப்பு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்). எவ்வாறாயினும், ATMகள் மூலமாகச் செய்யப்பட்ட பண மீளப்பெறுகைகளைப் பொறுத்தவரையில், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள், கார்ட் வைத்திருப்பவருக்கு மட்டுமே தெரிந்த ஒரு PIN இலக்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதால், அத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்கு ''பூச்சிய காணாமற்போன கார்ட் பொறுப்பு'' எதுவும் ஏற்புடையதாக இருக்காது. இது கார்ட் வைத்திருப்பவருக்கு இரகசியமான கொடுக்கல் வாங்கலாகக் கொள்ளப்படும்.

11.9.3 டெபிற் கார்ட் காணாமற்போய், மேலேயுள்ள சரத்து 11.9.1க்கு அமைய HSBCக்கு அறிவிக்கப்படாத பட்சத்தில் அல்லது அவ்வாறு அறிவிக்கப்படுவதற்கு முன்னர் டெபிற் கார்ட் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தால், டெபிற் கார்ட் காணாமற்போனதன் அல்லது துஷ்பிரயோகம் செய்யப்பட்டதன் விளைவாக எழக்கூடிய ஏதேனும் பொறுப்பு (குடியியல் அல்லது குற்றவியல்), நட்டம், கிரயம், செலவுகள் அல்லது சேதங்களுக்கு எதிராக கார்ட் வைத்திருப்பவர் HSBCக்கு முழுமையான இழப்பெதிர்காப்பை இத்தால் வழங்குகின்றார்.

11.9.4 கார்ட் வைத்திருப்பவர் ஏற்புடைய சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு சகல விதத்திலும் இணங்கியொழுகினால், ஏற்புடைய கட்டணமொன்றின் பேரில் பதிலீட்டுப் டெபிற் கார்ட் ஒன்றை, வழங்க HSBC தனது தனித் தற்றுணிபின் பேரில் நடவடிக்கை எடுக்கலாம். பதிலீட்டுப் டெபிற் கார்ட்டையை வழங்குவதில் உறப்பட்ட ஏதேனும் செலவுத் தொகை கார்ட் வைத்திருப்பவரின் பிரதான கணக்கில் பற்று வைக்கப்படும்.

11.9.5 கார்ட் வைத்திருப்பவர் தனது தொலைந்த/திருடப்பட்ட டெபிற் கார்ட்டை பின்பு மீட்டெடுத்தால், அதனைப் பயன்படுத்தக் கூடாது. கார்ட்டை அதன் காந்தப் பட்டி ஊடாகப் பல்வேறு துண்டுகளாக வெட்டுவதன் மூலம் அதனை அழித்துவிட வேண்டும்.

11.10 விபரக்கூற்றுகள் மற்றும் பதிவேடுகள்

11.10.1 டெபிற் கார்ட் கொடுக்கல் வாங்கல்களின் பதிவுகள், HSBC இனால் அனுப்பப்படும் விபரக்கூற்றில் காண்பிக்கப்படும். அத்தகைய விபரக்கூற்றுக்கள், கணக்கிற்குப் பொருத்தமான விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி, கணக்கு வைத்திருப்பவருக்கு, பதிவேட்டிலுள்ள அவரது தபால் முகவரிக்கு காலாந்த அடிப்படையில் தபாலில் அனுப்பப்படும். டெபிற் கார்ட்டை பயன்படுத்திச் செயற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் HSBC வைத்திருக்கும் பதிவுகளே எல்லா நோக்கங்களுக்கும் முடிவானவையாகவும் பிணிபபவையாகவும் இருக்கும்.

கார்ட் வைத்திருப்பவர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தனது கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறினால், மற்றும் கார்ட் வைத்திருப்பவரின் நடத்தை அல்லது தவறுகை அக் கணக்கில் ஒரு நட்டத்தை (வங்கியினால் உறப்பட்ட மற்றும்/அல்லது அடையப்பட்ட எத்தகையனவுமான எவ்வகையிலுமான நட்டங்கள் அல்லது வங்கிக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட வரிகள், அறவீடுகள், குற்றப்பணங்கள், கட்டணங்கள் அல்லது தண்டங்கள்) விளைவித்தால் அல்லது அதற்குப் பங்களித்தால், அத்தகைய நட்டம் தொடர்பில் வங்கியானது கார்ட் வைத்திருப்பவருக்கு எவ்விதமான பொறுப்பையும் கொண்டிருக்காது என்பதை கார்ட் வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கின்றார். இந்த உடன்படிக்கைக்கு அமைவாக, உரிய நேரத்தில் கணக்கு விபரக்கூற்றுக்களை மீளாய்வதற்குத் தவறியமையானது, விபரக்கூற்று அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவுகள் மீளாயப்பட்டிருப்பின் ஏதேனும் பிழை அல்லது விடுபடுகை கண்டுபிடிக்கப்பட்டிருக்கக்கூடிய நேரத்துக்கு பின்னா் ஏற்படுகின்ற ஏதேனும் நட்டத்தின் அளவுக்குக் கணக்கின் மீது நட்டத்தை விளைவிப்பதாக அல்லது அதற்கு உதவுவதாகக் கருதப்படுமென்பதைக் கார்ட் வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கின்றார். கார்ட் வைத்திருப்பவருக்கான வங்கியின் ஆகக்கூடிய பொறுப்பு, வங்கியின் பாரதூரமான அசட்டை அல்லது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட தவறான நடத்தை காரணமாக கார்ட் வைத்திருப்பவரின் கணக்கிலிருந்து தவறுதலாக அல்லது பிழையான முறையில் மீளப்பெறப்பட்ட பிரதான தொகையினால் ஏற்பட்ட நேரடி நட்டத்துக்கு வரையறுக்கப்படுமென கார்ட் வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கின்றார்.

விபரக்கூற்றில் குறிப்பிடப்பட்ட அல்லது கார்ட் வைத்திருப்பவரினால்/ வைத்திருப்பவர்களினால் வேறு வகையில் தீர்மானிக்கப்பட்ட ஒரு கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கணக்கு வைத்திருப்பவரின் உடன்பாடின்மையை, உடன்பாடின்மை பற்றிய அறிவித்தல் பெறப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் தீர்த்துவைப்பதற்கு, HSBC நல்லெண்ணத்துடனும் நியாயமான முறையிலும் முயற்சி செய்யும். அத்தகைய முயற்சியின் பின்னர், சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் செல்லுபடியானதே என்று HSBC தீர்மானித்தால், கார்ட் வைத்திருப்பவருக்கு/ளுக்கு அது பற்றி அறிவிக்கப்படும்.

11.11 முடிவுறுத்துகை

11.11.1 வங்கியானது தனது தற்றுணிபின் பேரில் எந்த நேரத்திலும் எவ்வித காரணமும் காட்டாமலும் நியாயமான முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு டெபிற் கார்ட்டை இரத்துச்செய்வதற்கு/ மீளப்பெறுவதற்கு அல்லது அதனைப் புதுப்பிக்க மறுப்பதற்கு உரிமை கொண்டுள்ளது.

11.11.2 கணக்கு வைத்திருப்பவர் HSBCஇல் வைத்திருக்கும் கணக்கை மூடிவிடுவதற்குத் தீர்மானிக்கும் பட்சத்தில், அத்தகைய கணக்கின் பேரில் வழங்கப்பட்ட டெபிற் கார்ட் தன்னியல்பாகவே இரத்துச் செய்யப்பட்டுவிடும். கார்ட் வைத்திருப்பவர் தனது டெபிற் கார்ட்டின் பாவனையை உடனடியாக நிறுத்துவதுடன், அத்தகைய கணக்குடன் இணைந்த டெபிற் கார்ட்டை அழித்துவிடுதலும் திருப்பிக்கொடுத்தலும் வேண்டும். HSBC ஆனது கணக்கிலுள்ள மீதிகளை கணக்கு வைத்திருப்பவருக்குத் திருப்பிக்கொடுப்பதற்கு முன்னர், கணக்கில் இன்னமும் பற்று வைக்கப்படாமல் நிலுவையாகவுள்ள எவையேனும் கொடுக்கல் வாங்கல்கள் இருப்பின், அத் தொகைகளைக் கழித்துக்கொள்ளும்.

11.11.3 டெபிற் கார்ட் வங்கியின் சொத்தாகும். வங்கி வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில், அது உடனடியாகவும் நிபந்தனையின்றியும் வங்கிக்குத் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும். கார்ட் வைத்திருப்பவர் தனது டெபிற் கார்ட்டை கையளிப்பதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட வங்கி அலுவலரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

11.11.4 பின்வரும் நிகழ்வுகளுள் எதுவேனும் இடம்பெறும் பட்சத்தில், டெபிற் கார்ட் வசதியை உடனடியாக முடிவுறுத்துவதற்கு HSBC உரிமை கொண்டுள்ளது என்பதுடன், டெபிற் கார்ட் வங்கிக்குத் திருப்பிக்கொடுக்கப்படவும் வேண்டும்::

i. இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத் தவறுதல்

ii. HSBCயுடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தின் கீழான அல்லது அது போன்றதொரு பொறுப்பின் கீழான (எதிர்பாராதது அல்லது வேறு வகையானது) தவறுகை நிகழ்வொன்று ஏற்படுதல்.

iii. கணக்கு வைத்திருப்பவர்/கள் ஏதேனும் வங்குரோத்து அல்லது திவால்நிலை தொடர்பான அல்லது வழக்கு அல்லது ஒத்த தன்மையினவான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாகுதல்.

iv. கார்ட் வைத்திருப்பவர் மரணமடைதல்.

v. கணக்கு மூடப்படுதல் அல்லது குறைந்தபட்ச சராசரி மீதி கணக்கில் பேணப்படாதிருத்தல்.

11.12 பொது

11.12.1 கணக்கு வைத்திருப்பவர்/கள் தமது முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படுமாயின் அது பற்றி உடனடியாக எழுத்தில HSBCக்கு அறிவிக்க வேண்டும்.

11.12.2 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்கு ஒன்றிற்கு மேற்பட்ட ஆட்கள் கையொப்பமிட்டால் அல்லது உடன்பட்டால், இதன் கீழ் அத்தகைய ஆட்களின் கடப்பாடு கூட்டானதாகவும் தனித்தனியானதாகவும்

இருக்கும். சந்தர்ப்பம் தேவைப்படுத்துமிடத்து, இதன்கண் ஒருமையை மட்டும் குறிக்கும் சொற்கள் பன்மையையும் உள்ளடக்குவதாகக் கருதப்படும் அத்தகைய ஆட்களுள் எவரேனுமொருவருக்கு இதன் கீழ் வழங்கப்படும் ஏதேனும் அறிவித்தல் அத்தகைய எல்லா ஆட்களுக்கும் பொருத்தமுள்ள அறிவிப்பாகக் கருதப்படும்.

11.12.3 வங்கியானது கார்ட் வைத்திருப்பவருக்கும் துணைக் கார்ட் வைத்திருப்பவருக்கும் டெபிற் கார்ட்களை கையளிப்பதற்கான அதன் பிரதிநிதியாக, ஒப்படைக்கும் சேவைக் கம்பனியொன்றுடன் ஒப்பந்தம் செய்யலாம். கார்ட் வைத்திருப்பவரும் துணைக் கார்ட் வைத்திருப்பவரும் டெபிற் கார்ட்களை பெறும்போது தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதுடன், டெபிற் கார்ட் கிடைக்கப்பெற்றதை உடனடியாக அறிவிக்கவும் வேண்டும். டெபிற் கார்ட்டை ஒப்படைக்கும் நோக்கத்துக்காக கார்ட் வைத்திருப்பவரினால் குறித்துரைக்கப்பட்ட முகவரியில் கார்ட் வைத்திருப்பவரின் பிரதிநிதியாகவிருப்பதற்கு வங்கியினால் அல்லது அதன் பிரதிநிதியினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு மூன்றாம் தரப்பிடமும் வங்கி அல்லது அதன் பிரதிநிதி, தனது தற்றுணிபின் பேரில், டெபிற் கார்ட்டை கையளிக்கலாம். டெபிற் கார்ட் அவ்வாறு ஒப்படைக்கப்படும் நேரத்திலிருந்து அந்த டெபிற் கார்ட் மூலம் செய்யப்படும் எல்லா மீளப்பெறுதல்களுக்கும் கார்ட் வைத்திருப்பவர் பொறுப்பாளியாக வேண்டும். கார்ட் வைத்திருப்பவரின் சார்பில், ஏதேனுமொரு கிளையில் டெபிற் கார்ட்டை கையேற்பதற்கு கார்ட் வைத்திருப்பவர் தனது தற்றுணிபின் பேரில் மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கலாம். கார்ட் வைத்திருப்பவரினால் அல்லது அவரது சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் டெபிற் கார்ட் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து அந்த டெபிற் கார்ட்டை பயன்படுத்திச் செய்யப்பட்ட எல்லா மீளப்பெறுதல்களுக்கும் கார்ட் வைத்திருப்பவர் பொறுப்பாளியாவார்.

11.12.4 டெபிற் கார்ட்டானது, கார்ட் வைத்திருப்பவரின் பாவனைக்காக மட்டுமே வழங்கப்படுகின்றது. அதனை ஏதேனுமொரு வழியில் கைமாற்றவோ அல்லது பிணையாகச் சமர்ப்பிக்கவோ முடியாது.

11.12.5 அறிவிக்கப்பட்டவாறான எவையேனும் ஏற்புடைய விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய, தற்போது வழங்கப்படும் அல்லது எதிர்காலத்தில் அவ்வப்போது கிடைக்கக்கூடிய சேவைகளின் கீழ் சகல ATM கொடுக்கல் வாங்கல்களையும் வணிக நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களையும் செய்வதற்கான உரிமையை கார்ட் வைத்திருப்பவர் தனது டெபிற் கார்ட் மூலம் பெறுகின்றார்.

11.12.6 வைப்பிலிடும் நேரத்தில் ATMஇனால் வழங்கப்படும் விபரக்கூற்றுச் சீட்டு, கார்ட் வைத்திருப்பவர் வைப்பிலிட்டதாகக் கொள்கின்றதை மட்டுமே குறிக்கின்றது. அது வங்கியைப் பிணிக்கமாட்டாது. டெபிற் கார்ட்டைப் பயன்படுத்தி ATM ஊடாக வைப்பிலிடப்பட்டனவாகச் சொல்லப்பட்ட எவையேனும் பணம் அல்லது காசோலைகளின் பணத்தொகை கார்ட் வைத்திருப்பவரின் கணக்கில் வரவு

வைக்கப்பட்டு மீளப்பெறுதலுக்காகக் கிடைக்கக்கூடியனவாக இருக்கும் வரை, கார்ட் வைத்திருப்பவர் பணத்தை மீளப்பெறக் கூடாது.

11.12.7 டெபிற் கார்ட்டின் சகல பதிலீடுகளும் புதுப்பித்தல்களும் அந்தந்த நேரத்தில் வலுவிலிருந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைந்தவையாக இருக்கும்.

11.12.8 வங்கிக்கு ஏதேனும் தொடர்பாடலை வழங்குவதற்கு அஞ்சல் வைப்பு வசதியைப் பயன்படுத்துதலும் வங்கியின் பதிவேடுகளும் அத்தகைய தொடர்பாடல்களின் தன்மை மற்றும் அவை வங்கியினால் பெறப்பட்ட நேரம் என்பவற்றிற்கு முடிவான சான்றாக அமைதல் வேண்டும். அவ்வாறு வைப்பிலிடப்பட்ட தொடர்பாடல்களில் காணப்படக்கூடிய ஏதேனும் தெளிவின்மைக்கு கார்ட் வைத்திருப்பவரே/ வைத்திருப்பவர்களே பொறுப்பாதல் வேண்டும்.

11.12.9 கார்ட் வைத்திருப்பவர் ஒரு டெபிற் கார்ட்டை மட்டுமே தன்வசம் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், பதிலீட்டுப் டெபிற் கார்ட்/கள் வழங்கப்படும்போது ஏற்கனவே வைத்திருந்த டெபிற் கார்ட்டை/கார்ட்களை இரத்துச்செய்ய வங்கிக்கு அதிகாரமளித்தலும் வேண்டும்.

11.12.10 டெபிற் கார்ட் ஓராண்டுக்கு மேற்பட்ட காலத்திற்கு பயன்படுத்தப்படாவிட்டால் அதன் செல்லுபடியாகும் தன்மை முடிவுறுமென்பதை கார்ட் வைத்திருப்பவர் கவனிக்க வேண்டும். மீளப்பெறுகைகள், பணப் பரிமாற்றங்கள், வணிக நிறுவனங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் என்பன மாத்திரமே கொடுக்கல் வாங்கல்களாகக் கொள்ளப்படும்.

11.12.11 டெபிற் கார்ட்டை பயன்படுத்துவதன் மூலம் செயற்படுத்தப்படக்கூடிய ஒரு வலையமைப்பின் பகுதியாக அமைகின்ற ஏனைய வங்கிகளினால் நிறுவப்பட்ட ATMகளைப் பயன்படுத்தும்போது, ஏனைய வங்கிகளினால் அதற்காக அறவிடப்படும் சகல கட்டணங்களும் கொடுக்கல் வாங்கல்களாகக் கருதப்படும்.

11.12.12 டெபிற் கார்ட்டை பயன்படுத்தி நடைமுறைக் கணக்குகள் மற்றும் சேமிப்புக் கணக்குகளில் செய்யப்படும் சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் அத்தகைய கணக்குகளுக்கான விதிகள் மற்றும் பிரமாணங்கள் அனைத்தும் ஏற்புடையனவாகும்.

11.12.13 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதனையும் சேர்ப்பதற்கான, அவற்றுள் எவற்றையும் நீக்கிவிடுவதற்கான மற்றும்/அல்லது மாற்றுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. அத்தகைய மாற்றப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகள் www.hsbc.lk HSBC யின் உத்தியோகபூர்வ பொது வலைத்தளத்தில் காண்பிக்கப்படும். அத்துடன் அதன் பிரதியை வேண்டுகோளின் பேரில் பெறவும் முடியும். (வங்கியின் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் செய்யப்படும் ஏதேனும் மாற்றம் எத் திகதியில் அமுலுக்கு வருகின்றதோ அத் திகதிக்குப் பின்னர் டெபிற் கார்ட்டை பயன்படுத்துவதன் மூலம் கார்ட் வைத்திருப்பவர் அத்தகைய மாற்றத்தை

ஏற்றுக்கொண்டவராகக் கருதப்படுவார். கார்ட் வைத்திருப்பவர் அத்தகைய ஏதேனும் மாற்றத்தை ஏற்காவிட்டால், அத்தகைய மாற்றம் அமுலுக்கு வருகின்ற திகதிக்கு முன்னர் டெபிற் கார்ட்டை வங்கிக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டும்.

11.12.14 தபால்/மின்னஞ்சல் அல்லது தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை (PIB) மூலம் அனுப்படும் ஏதேனும் அறிவித்தல், வங்கிக்குக் கடைசியாக எழுத்தில் கொடுக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பப்பட்ட திகதியிலிருந்து 7 நாட்களினுள் கார்ட் வைத்திருப்பவரினால் பெறப்பட்டுள்ளதாகக் கருதப்படும். கட்டணங்கள், விதிப்பனவுகள் மற்றும்/அல்லது விதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான மாற்றங்கள் பற்றிய அறிவித்தல, கடிதம் மூலம் மற்றும்/அல்லது உள்நாட்டுப் பத்திரிகைகளிலான அறிவித்தல் மூலம் மற்றும்/அல்லது வங்கியின் அறிவித்தல் பலகைகளில் பார்வைக்கு வைக்கப்படும் விளம்பரங்கள் மூலம் மற்றும்/அல்லது விபரக்கூற்றுச் செய்திகள் மூலம் மற்றும்/அல்லது www.hsbc.lk HSBC யின் உத்தியோகபூர்வ பொது வலைத்தளத்தின் ஊடாக வழங்கப்படுதல், கார்ட் வைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு முறைப்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகப் பொருள் கொள்ளப்படும்.

11.12.15 கார்ட் வைத்திருக்கும் ஒருவர் தனது டெபிற் கார்ட்டை பயன்படுத்துவதன் மூலம், கணக்கிலுள்ள மீதிக்கு அல்லது HSBCஇனால் அனுமதிக்கப்பட்ட மேலதிகப் பற்று உச்சவரம்பிற்கு மேலானதொரு தொகையை மீளப்பெற்றால், அந்த கார்ட் வைத்திருப்பவர், HSBCஇனால் தீர்மானிக்கப்படும் வீதத்தில் விதிக்கப்படும் வட்டியுடனும் தண்டங்களுடனும், மேலதிகமாகப் பெறப்பட்ட முழுத் தொகையையும் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் HSBCக்குச் செலுத்த வேண்டும். எவ்வாறாயினும், HSBC ஏதேனும் மேலதிகப்பற்று வசதியை அளிப்பதற்கு வெளிப்படையாக அல்லது உட்கிடையாக இணங்கியுள்ளதென இதனைப் பொருள்கொள்ளக் கூடாது.

11.12.16 ATMஇன் அல்லது டெபிற் கார்ட்டின் ஏதேனும் செயலிழப்பு, நிதிகளின் தற்காலிகப் போதாமை, ஏதேனும் பிணக்கு போன்றவற்றின் (நேரடி அல்லது நேரடியற்ற) காரணங்களினால் அல்லது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வேறு சூழ்நிலைகள் காரணமாக, ஏதேனும் சேவையை வழங்குவதற்கு அல்லது அதன் கீழ் ஏதேனும் கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கு வங்கி தவறுமாயின், அத் தவறுகைக்கு வங்கி பொறுப்பாளியாகாது.

11.12.17 கணக்குகளுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை தொடர்பில் அல்லது அவற்றின் தொழிற்பாடு சம்பந்தமாக அல்லது டெபிற் கார்ட்டின் பயன்பாடு சம்பந்தமாக, பாதுகாப்பு மீறுகை அல்லது வேறு சந்தேகத்துக்கிடமான சூழ்நிலைகளை இடம்பெற்றுள்ளதென அறியும் பட்சத்தில் அல்லது அவ்வாறு சந்தேகிக்கும் பட்சத்தில், வங்கியானது அதன் தனித் தற்றுணிபின் பேரிலும்

ஏதேனும் பொறுப்புக்கள் இல்லாமலும் ஏதேனும் கொடுக்கல் வாங்கலுக்கான அதிகாரமளிப்பை மறுக்க முடியும். வங்கி இயன்றளவு விரைவாக இது குறித்து கார்ட் வைத்திருப்பவருக்கு அறிவிக்கும்.

11.12.18 டெபிற் கார்ட்டின் பாவனையானது, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக VISA வழிகாட்டு நெறிகளுக்கும் அமைவானதாக இருக்கும்.

11.12.19 கார்ட் வைத்திருப்பவர்/கள் தமது டெபிற் கார்ட்டின்/கார்ட்களின் மூலம் வணிக நிறுவனங்களில் நிலையான அறிவுறுத்துதல்களை ஏற்படுத்த முடியாது.

11.12.20 அறிவுறுத்துதல்களை விடுக்கும் அல்லது விடுப்பதாகக் கொள்ளப்படும் ஆளின் அதிகாரம் அல்லது ஆளடையாளம் பற்றி வங்கியின்பாலான ஏதேனும் விசாரணையின்றியும், அறிவுறுத்துதல்கள் கிடைக்கப்பெற்ற நேரத்தில் நிலவுகின்ற சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமலும், தொலைபேசி மூலம், ரெலெக்ஸ் மூலம், தொலைநகல் மூலம், குறுஞ் செய்திச் சேவை (“SMS”) மூலம், தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை (“PIB”) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் கார்ட் வைத்திருப்பவரினால் அல்லது அவரது சார்பில் காலத்துக்குக் காலம் கொடுக்கப்படக்கூடிய அல்லது கொடுக்கப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் அறிவித்தல், அறிவுறுத்துதல், கோரிக்கை அல்லது வேறு கடிதத்தொடர்பு என்பவற்றை நம்புவதற்கும் அவற்றுக்கிணங்கச் செயலாற்றுவதற்கும் கார்ட் வைத்திருப்பவர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். கார்ட் வைத்திருப்பவருடன் தொடர்புகொள்வதற்கு வங்கியானது தொலைபேசி, ரெலெக்ஸ், தொலைநகல், SMS, PIB அல்லது மின்னஞ்சலை பயன்படுத்தலாம். அறிவுறுத்தல் பெறப்பட்ட நேரம்/திகதி தொடர்பில் வங்கியின் தீர்மானத்தையே இறுதியானதாக அட்டை வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

11.12.21 வங்கி கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் உரிமைகளுக்கு முரணாகாத வகையில், வங்கியினால் கணக்கு வைப்பாளருக்கு/ வைப்பாளர்களுக்கு, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அல்லது வேறேதும் வழியில் வழங்கப்படும் சேவைகள், வங்கியினால் உறப்படும் கட்டணங்கள், கிரயங்கள், அறவீடுகள் வட்டி அல்லது ஏற்புடைய ஏதேனும் செலவுகளுக்கு உட்படும்.

11.12.22 வங்கியினால் உறப்படும் அத்தகைய கட்டணங்கள், கிரயங்கள், அறவீடுகள் வட்டி அல்லது ஏற்புடைய ஏதேனும் செலவுகளை மற்றும்/அல்லது வெளிநாட்டு நாணயமாற்று, வட்டி வீதங்கள், வர்த்தகப் பண்டங்கள் அல்லது வேறேதும் அனுமதிக்கப்பட்ட சொத்துப் பிரிவுகள் தொடர்பில், வங்கிக் கொடுக்கல் வாங்கல்களின் இரத்துச்செய்கை, வங்கி வசதிகள் மற்றும் சேவைகளின் இரத்துச்செய்கை மற்றும்/அல்லது திருத்தம் மற்றும்/ அல்லது இரட்டிப்பு உள்ளிட்ட (ஆனால் அவை மட்டுமல்ல) காரணங்களினால் கணக்கு வைப்பாளரினால்/வைப்பாளர்களினால் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய

கொடுப்பனவுகளை, அவை எத்தகைய கொடுக்கல் வாங்கல் முறையில் இடம்பெற்றன என்பதையோ, வங்கியில் கணக்கு வைப்பாளர்/கள் வைத்திருக்கும் எந்தக் கணக்கில்/கணக்குகளில் இருந்து மேற்கொள்ளப்பட்டது என்பதையோ கருதாமல், எந்த நேரத்திலும் முன்னறிவித்தல் இல்லாமலே பற்று வைக்க வங்கிக்கு உரிமையுண்டு என்பதைக் கணக்குவைப்பாளர்/ள் ஏற்றுக்கொள்கின்றார்/ ஏற்றுக்கொள்கின்றனர்.

11.12.23 அறிவுறுத்தல்கள் கார்ட் வைத்திருப்பவரால் முழுமையாக அதிகாரமளிக்கப்பட்டவை மற்றும் அவரைப் பிணிப்பவை என்று கருதுவதற்கும் அறிவுறுத்தல்கள் தொடர்பில் அல்லது அவற்றை நம்பி, பொருத்தமெனக் கருதும் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் வங்கி உரிமை கொண்டுள்ளது. அத்தகைய அறிவுறுத்தல்கள் பணம் செலுத்துதல் சம்பந்தப்பட்டவையாக அல்லது ஏதேனும் கணக்கில் வேறு வகையில் பற்று வைப்பதற்கானவையாக அல்லது வரவு வைப்பதற்கானவையாக அல்லது ஏதேனும் பணத்தை அல்லது எவையேனும் ஆவணங்களைப் பாராதீனம் செய்தல் தொடர்பானவையாக அல்லது வங்கியுடனான அல்லது வேறெவரேனும் ஆளுடனான ஏதேனும் உடன்படிக்கைக்கு அல்லது வேறு ஏற்பாட்டிற்கு அட்டை வைத்திருப்பவரைப் பிணிப்பவையாகக் கொள்ளப்படுவதற்கு தக்கவையாக இருந்தாலும் அல்லது எத்தகையதுமான வேறேதும் கொடுக்கல் வாங்கலின் அல்லது ஏற்பாட்டின் தன்மையை அல்லது உட்படுத்தப்பட்ட பணத் தொகையைப் பொருட்படுத்தாமலும் ,அறிவுறுத்துதல்களின் நியதிகளில் பிழை, இருபொருண்மை, பிறழ்விளக்கம் அல்லது தெளிவின்மை எவ்வாறாக இருப்பினும், அக் கொடுக்கல் வாங்கலுக்கு அல்லது ஏற்பாட்டிற்கு கார்ட் வைப்பாளரைப் பொறுப்பாக்கமுடியும்.

11.12.24 வங்கியானது இந்த அதிகாரமளிப்பினதும் இழப்பெதிர்காப்பினதும் விதிமுறைகளுக்கு அமைவாகச் செயற்படுவதால், இந்த அறிவுறுத்தல்கள் தொடர்பில் அல்லது அவற்றின் விளைவாக ஏதேனும் தன்மையில் மற்றும் ஏதேனும் வகையில் உறப்படும்/உள்ளாகும் இழப்புக்கள், உரிமைக் கோரல்கள். சட்ட நடவடிக்கைகள், வழக்குகள், கோரிக்கைகள், சேதங்கள், கிரயங்கள் மற்றும் செலவுகள் அனைத்திற்கும் எதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும் அதனைத் தொடர்ந்து பேணவும் கார்ட் வைத்திருப்பவர் எவ்வித மறுதலிப்புக்கும் இடமின்றிப் பொறுப்பேற்கின்றார்.

11.12.25 கார்ட் வைத்திருப்பவரிடமிருந்து முடிவுறுத்தல் அறிவித்தலை வங்கி பெறும் வரையும், அத்தகைய முடிவுறுத்தல் அறிவித்தலின் மீது நடவடிக்கை எடுக்க நியாயமான காலம் வங்கிக்கு வழங்கப்படாத வரையும் இந்த அதிகாரவளிப்பினதும் இழப்பெதிர்காப்பினதும் விதிகள் முழு வலுவுடையதாக நடைமுறையில் இருக்கும். எனினும், அத்தகைய முடிவுறுத்தல் கார்ட் வைத்திருப்பவரினால் கொடுக்கப்பட்ட மேற்படி அதிகாரமளிப்பின் கீழ் உறப்பட்ட ஏதேனும் பொறுப்புக்களிலிருந்தும் இந்த ஒப்பந்தத்தின் விதிகளுக்கிணங்கப்

புரியப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பிலான இழப்பெதிர்காப்பிலிருந்தும் அட்டை வைத்திருப்பவரை விடுவிக்காது.

11.12.26 டெபிற் கார்ட்டின் வழங்குகையும் பாவனையும், காலத்திற்குக் காலம் வலுவிலிருக்கக்கூடிய சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கும் வீசா வழிகாட்டுதல்களுக்கும் HSBCஇன் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் அமைந்தவையாக இருக்க வேண்டும். வங்கிக்கு அளிக்கப்பட்ட எல்லா அதிகாரவளிப்புக்களும் அதிகாரங்களும் இல்லாதொழிக்கப்பட முடியாதவை.

## 12. HSBC Advance பக்கேஜின் கீழ் வழங்கப்படும் HSBC Rewards/VISA Platinum Cashback கிறெடிட் கார்ட்

12.1 HSBC Rewards/VISA Platinum Cashback கிறெடிட் கார்ட் ஒன்று வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில், கணக்கு வைப்பாளர் HSBC Rewards/VISA Platinum Cashback கிறெடிட் கார்ட் வைத்திருப்பவர் ஒப்பந்தம்/விதிகள் மற்றும் நிபந்தனைகள், அவற்றிற்கான திருத்தங்கள், கிறெடிட் கார்ட் தொடர்பில் (தரமுயர்வுகள், ஊக்குவிப்புக்கள், வசதிகள் முதலியன தொடர்பாக) வங்கியினால் காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்படும் வேறு சகல நியதி நிபந்தனைகள் என்பவற்றினால பிணிக்கப்படுவார்.

12.2 HSBC Rewards/VISA Platinum Cashback கிறெடிட் கார்ட், வங்கியின் தனித் தற்றுணிபிற்கேற்ப காலத்திற்குக் காலம் மாற்றப்படக்கூடிய, தற்போதய HSBC Advance தகுதி நிபந்தனைகள் மற்றும் வங்கியின் கடன் இடர் கொள்கைகளுக்கு அமைவாக வழங்கப்படும்.

12.3 HSBC Rewards/VISA Platinum Cashback கிறெடிட் கார்ட்டில் வசதி இணைக்கப்பட்டிருந்தால், அத்தகைய வசதியின் பயன்பாடானது HSBC Rewards/VISA Platinum Cashback கிறெடிட் கார்ட்/ HSBC பொதுக் கிறெடிட் கார்ட் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படும்.

## 13. தன்னியக்கத் தொலைபேசி வங்கிச் சேவை (ATB)

13.1 1வங்கியினால் வழங்கப்படும் ATB சேவைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

(i) கணக்கு வைத்திருப்பவரின் கணக்குகளுக்கு இடையே பணத்தை இடம்மாற்றுதல்.

(ii) தொலைபேசி வங்கிச் சேவையின் கீழ் பணம் பெறும் நோக்கத்திற்காக, முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட வரையறைக்குள், கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனுமொரு கணக்கிலிருந்து கணக்கு

வைத்திருப்பவரினால் எழுத்து மூலம் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கணக்கிற்கு ("நியமிக்கப்பட்ட மாற்றப்படுபவர் கணக்கு") பணத்தை இடம்மாற்றுதல்.

(iii) கணக்கு வைத்திருப்பவரின் கணக்குகள் தொடர்பிலான கணக்கு மீதிகள் மற்றும் முன்னைய கொடுக்கல் வாங்கல்கள் பற்றியும் நாணயப் பரிவர்த்தனை வீதங்கள், வைப்புக்களுக்கான வட்டி வீதங்கள் பற்றியும் விசாரித்து அறிதல்.

(iv) விபரக்கூற்றுக்கள் (தெரிவு செய்யப்பட்ட சில கணக்கு வகைகளுக்கு மட்டும்), காசோலைப் புத்தகம் என்பவற்றிற்கு வேண்டுகோள் விடுத்தல் மற்றும் கணக்கு வைத்திருப்பவரின் கணக்குத் தொடர்பில் காசோலைகளை நிறுத்துவதற்கான அறிவுறுத்தல்களை விடுத்தல்.

(v) வங்கியினால் காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்படும் ஏனைய வங்கிச் சேவைகள் அல்லது முதலீட்டுச் சேவைகள்.

13.2 கணக்கு வைத்திருப்பவரினால் தொலைபேசி/ATB மூலம் வழங்கப்படும் அறிவுறுத்துதல்களுக்கு இணங்கச் செயற்பட வங்கிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளபோதிலும், வங்கி இது தொடர்பில் பிணிக்கப்படவில்லை. ஏதேனும் தொலைபேசி மூலமான அறிவுறுத்துதல் அனுமதியற்ற நபரினால் விடுக்கப்பட்டதென வங்கி தனது தற்றுணிபின் பேரில் நம்பினால், அத்தகைய அறிவுறுத்துதலைச் செயற்படுத்தாமல் இருக்க வங்கிக்கு அதிகாரம் உண்டு என்பதைக் கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார்.

13.2.1 கணக்கு வைத்திருப்பவருக்கு வங்கியினால் வழங்கப்பட்ட ATB தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN) எந்நேரமும் மிகவும் இரகசியமான முறையில் வைத்திருக்க கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகின்றார். PIN இலக்கம் தாலைந்துவிட்டால் அல்லது அனுமதியற்ற ஒருவருக்குத் தெரிந்துவிட்டதெனக் கருதினால், கணக்கு வைத்திருப்பவர் அது பற்றி உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

13.3 ஏதேனும் உபகரணத்தின் கோளாறு அல்லது செயலிழப்பு உட்பட, முழுமையாக அல்லது பகுதியளவில் சாட்டத்தக்க, வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஏதேனும் காரணத்தினால் ஏதேனும் தொலைபேசி/ATB அறிவுறுத்துதலைச் செயற்படுத்த வங்கி தவறினால், வங்கி அது தொடர்பில் வங்கி கணக்கு வைத்திருப்பவருக்குப் பொறுப்பாளியாகாது. வங்கியானது தொலைபேசி/ATB அறிவுறுத்துதலை செயற்படுத்துவதால் அல்லது செயற்படுத்தத் தவறுவதால் அல்லது அது தொடர்பில் நேரடியாக நேடியற்ற முறையில் அல்லது எதிர்விளைவாக ஏற்படுகின்ற ஏதேனும் இழப்பிற்கு கணக்கு வைத்திருப்பவர் எந்தச் சூழ்நிலையிலும் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது. வங்கியானது

தொலைபேசி/ATB அறிவுறுத்துதலை ஏற்றுச் செயற்படுத்துவதால் அல்லது செயற்படுத்தத் தவறுவதால் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் எழக்கூடிய சட்ட நடவடிக்கைகள், வழக்குகள், உரிமைக் கோரல்கள், இழப்புக்கள் சேதங்கள், மற்றும் செலவுகளுக்கு எதிராக கணக்கு வைத்திருப்பவர் எல்லா வேளைகளிலும் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்குவதுடன் வங்கியைத் தீங்கிலிருந்து பாதுகாத்து வைக்கவும் வேண்டும். ATB சேவை முடிவுறுத்தப்பட்டாலும் இந்த இழப்பெதிர்காப்பு தொடர்ந்து நீடிக்கும்.

13.4 இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக தொலைபேசி/ATB அறிவுறுத்ததல்களை விடுப்பதற்குக் கணக்கு வைத்திருப்பவர் கொண்டுள்ள உரிமையானது, எல்லா வேளைகளிலும் வங்கியின் தற்றுணிபிற்கு உட்பட்டதாக இருக்கும். வங்கியானது இந்த உரிமையை எந்த நேரத்திலும் முன்னறிவித்தலின்றி இரத்துச்செய்ய முடியும்.

13.5 தொலைபேசி/ATB அறிவுறுத்தல்களை அல்லது ஏனைய அறிவுறுத்துதல்களைச் செயற்படுத்துவதற்கு கணக்கு வைத்திருப்பவரின் கணக்கில் மற்றும்/அல்லது கிறெடிட் கார்ட் கணக்கில் போதியளவு பணம் (அல்லது முன்னேற்றபாடு செய்யப்பட்ட கடன் வசதி) இருப்பதைக் கணக்கு வைத்திருப்பவர் உறுதிப்படுத்த வேண்டும். போதியளவு பணம் இல்லாமை காரணமாக அத்தகைய ஏதேனும் அறிவுறுத்துதலைச் செயற்படுத்த வங்கி தவறுவதால் எழக்கூடிய ஏதேனும் விளைவுகளுக்கு வங்கி பொறுப்பாளியாகாது. கணக்கில் போதியளவு பணம் இல்லாவிட்டாலும் அறிவுறுத்தலைச் செயற்படுத்துவதற்கு வங்கி தனது தற்றுணிபின் பேரில் தீர்மானிக்குமாயின், கணக்கு வைத்திருப்பவரிடம் முன்னனுமதி கோராமலும் அவருக்கு அறிவிக்காமலும் அவ்வாறு செய்ய வங்கிக்கு உரிமையுண்டு. இதன் மூலம் ஏற்படக்கூடிய மேலதிகப் பற்று, முற்பணம் அல்லது கடன் மற்றும் அது தொடர்பான அறவீடுகளுக்கும் கணக்கு வைத்திருப்பவர் பொறுப்பாதல் வேண்டும். மேலதிகப் பற்று, முற்பணம் அல்லது கடனுக்கு, வங்கி தனது பூரண தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கும் வீதத்தில் வட்டி அறவிடப்படும். அத்துடன், அத்தகைய கணக்குகளுக்குப் பொருத்தமான வங்கியின் வழமையான விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் அவை ஆளுகை செய்யப்படும்.

13.6 கணக்கு வைத்திருப்பவரினால் வழங்கப்பட்ட தொலைபேசி/ATB அறிவுறுத்துதல்களின் பிரகாரம், வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலின் விபரங்கள், நியமிக்கப்பட்ட மாற்றப்படுபவர் கணக்கை/கணக்குகளை வைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு மற்றும்/அல்லது ஏவரேனும் கூட்டுக் கணக்கு வைப்பாளருக்கு கணக்கு வைத்திருப்பவரினால் அறிவிக்கப்பட வேண்டும். அத்தகைய ஏதேனும் அறிவித்தல் வழங்கப்படுவது தொடர்பில் வங்கியானது கணக்கு வைத்திருப்பவருக்குப் பொறுப்பாளியாகாது.

13.7 வங்கியானது காலத்திற்குக் காலம் தனது தற்றுணிபின் பேரில் பொருத்தமெனக் கருதும் சேவைக் கட்டணங்களை மற்றும்/அல்லது வேறேதும் கட்டணங்களை விதிக்க உரிமை கொண்டுள்ளது.

13.8 வங்கியானது காலத்திற்குக் காலம் தனது தற்றுணிபிற்கேற்ப பொருத்தமெனக் கருதும் விதத்தில் ATB சேவையின் செயலெல்லை மற்றும் அது தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதையேனும் சேர்க்க, நீக்க அல்லது மாற்றம் செய்ய உரிமை கொண்டுள்ளது.

13.9 ATB சேவையைப் பெறுவதற்கு வங்கியினால் வழங்கப்பட்ட ATB PIN இலக்கம், தனிப்பட்ட வங்கிச் சேவை இலக்கம் (PBN) அல்லது இச் சேவையைப் பெறுவதற்கு வங்கியினால் வழங்கப்பட்ட கிறெடிட் கார்ட் இலக்கம் பயன்படுத்தப்படுதல், கணக்கு வைத்திருப்பவர் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுளார் என்று அர்த்தம் கொள்ளப்படும்.

13.10 வங்கியின் ATB சேவையைப் பயன்படுத்தி வெவ்வேறு நாணயங்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களைச் செய்யும்போது, கணக்கு வைத்திருப்பவர் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சட்டங்கள் மற்றும் அவற்றின் கீழான பிரமாணங்கள் அனைத்திற்கும் பணிந்தொழுக வேண்டும்.

## 14. HSBC Advance SMS விழிப்பூட்டல்கள் (“சேவை”)

14.1 வாடிக்கையாளர் இச் சேவையைப் பயன்படுத்தும் காலத்தில் வங்கியின் அறிவுறுத்தல்கள் மற்றும்/அல்லது நடைமுறைகளுக்கு அமைவாகவும் கட்டுப்பட்டும் நடக்க வேண்டும். அத்தகைய அறிவுறுத்தல்கள் மற்றும்/ அல்லது நடைமுறைகளுக்கு பணிந்தொழுக வாடிக்கையாளர் தவறுவதால், அவருக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பு, சேதம் மற்றும் செலவுகள் தொடர்பில், வங்கிக்கு எதிரான உரிமைக் கோரல், அடைக்கலம் அல்லது நிவாரணம் எதுவும் வாடிக்கையாளருக்குக் கிடையாது.

14.2 ஏதேனும் காரணத்தினால், இச் சேவை தொடர்பாக அல்லது அதன் விளைவாக வாடிக்கையாளருக்கு நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்கு வாடிக்கையாளர் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது. வாடிக்கையாளர் தவிர்ந்த இன்னுமொருவர் செய்திகளைப் பார்வையிடுதல் அல்லது சேவையைப் பயன்படுத்துதல். கணனி மற்றும் அதன் டேர்மினல் இணைப்புக்களின் அல்லது தரவுகளைச் செயற்படுத்தும் அமைப்பின் அல்லது சொந்தமான அல்லது சொந்தமற்ற அனுப்பீட்டு ஊடகங்களின் செயலிழப்பு அல்லது கோளாறு, வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வேறேதும் சூழ்நிலைகள் என்பனவும் (ஆனால் அவை மட்டுமல்ல)

இக் காரணங்களுள் அடங்கும்.

14.3 வங்கியானது தனது சுயவிருப்பின் பேரிலும் எவ்வித முன்னறிவித்தல் கொடுக்காமலும், எவ்வித காரணம் தெரிவிக்காமலும், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை வாடிக்கையாளர் ஏற்கனவே மீறியமைக்காக நடவடிக்கை எடுக்க வங்கி கொண்டுள்ள உரிமையைப் பாதிக்காத விதத்திலும், இச் சேவையை மாற்ற, இடைநிறுத்த மற்றும்/அல்லது முடிவுறுத்த உரிமை கொண்டுள்ளது.

14.4 வாடிக்கையாளர் ஏழு (7) நாட்களுக்கு முன்பே எழுத்துமூலம் முன்னறிவித்தல் (ஊர்ஜிதம் செய்யப்பட வேண்டும்) கொடுப்பதன் மூலம் அல்லது வாடிக்கையாளர் சேவை ஹொட்லைன் (PIN ஊர்ஜிதப்படுத்தல் தேவை) ஊடாக அறிவிப்பதன் மூலம் இச் சேவையின் உபயோகத்தை முடிவுறுத்தும்படி வேண்டுகோள் விடுக்கலாம். சேவையில் ஏதேனும் மாற்றத்தைச் செய்ய வாடிக்கையாளர் விரும்பினால், அவர் அதற்கென ஒரு புதிய விண்ணப்பப் படிவத்தை நிரப்ப வேண்டும்.

14.5 சேவையின் உபயோகம் தொடர்பில் அல்லது அதன் விளைவாக வங்கிக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பு, சேதம் மற்றும் செலவுகளுக்கு எதிராகவும் வங்கி முகங்கொடுக்கக்கூடிய சட்ட நடவடிக்கைகள், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு எதிராகவும் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும், அந்த இழப்பெதிர்காப்பைத் தொடர்ந்து பேணி, காலத்திற்குக் காலமும் எல்லா வேளைகளிலும் வங்கியைத் தீங்கிலிருந்து பாதுகாக்கவும் வாடிக்கையாளர் இத்தால் எவ்வித மாற்றத்திற்கும் இடமின்றி இணங்கிப் பொறுப்பேற்கிறார்.

14.6 இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை எந்த நேரத்திலும் வாடிக்கையாளருக்கு முன்னறிவித்தல் கொடுக்காமலும் மாற்றுவதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. அத்தகைய மாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்படும் திகதியிலிருந்து வாடிக்கையாளர் அதற்குப் பூரணமாகக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அத்தகைய மாற்றங்கள் கடிதம் மற்றும்/அல்லது உள்நாட்டுப் பத்திரிகை விளம்பரங்கள் மற்றும்/அல்லது வங்கியின் அறிவித்தல் பலகைகளில் காட்சிக்கு வைக்கப்படும் அறிவித்தல்கள் மற்றும்/அல்லது விபரக்கூற்றுச் செய்திகள் மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ பொது வலைத்தளத்தின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

14.7 சில நாடுகளில், அந்தந்த நாட்டின் ஒழுங்குபடுத்தல் தேவைகள் மற்றும் தடைகள் காரணமாக இச் சேவை கிடையாதிருக்கலாம்.

## 15. தனிப்பட்ட அடையாள இலக்கம் (PIN) / பாதுகாப்பு டோக்கன்

15.1 வங்கியினால் வழங்கப்படும் தனிப்பட்ட அடையாள இலக்கமானது HSBC Advance டெபிற் கார்ட், கிறெடிட் கார்ட், தன்னியக்கத் தொலைபேசி வங்கிச் சேவை (ATB), இணையத்தள வங்கிச் சேவை மற்றும் PIN இலக்கம் தேவைப்படும் வேறேதும் வசதிகளைப் பயன்படுத்தும் நோக்கத்துக்கானவை. இந்த நோக்கத்துக்காகப் பதிலிடப்படும் ஏதேனும் இலக்கம் (அல்லது இலக்கங்கள்) மிகவும் இரகசியமாகப் பேணப்பட வேண்டியவை.

15.2 PIN இலக்கத்தை எத்தகைய சூழ்நிலையிலும் சுயவிருப்பத்துடனோ அல்லது வேறு வழிகளிலோ எவரேனும் மூன்றாம் தரப்பினருக்கு வெளிப்படுத்தக் கூடாது.. வங்கியினால் வழங்கப்படும் கணக்கை, டெபிற் கார்ட்டை, கிறெடிட் கார்ட்டை, ATB சேவையை அல்லது அது போன்ற வேறேதும் சேவையைப் பயன்படுத்த மூன்றாம் தரப்பினருக்கு இடமளிக்கக்கூடிய ஏதேனும் இடத்தில் அல்லது முறையில் PIN இலக்கத்தின் ஏதேனும் எழுத்திலான பதிவைக் கணக்கு வைத்திருப்பவர் பேணுதலாகாது.

15.3 PIN இலக்கத்தைப் பயன்படுததுவதன் மூலம் மேற்கொள்ளப்படும் ஏதேனும் வேண்டுகோள்கள் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கு எல்லா வேளைகளிலும் கணக்கு வைத்திருப்பவர் பொறுப்பேற்க வேண்டும். PIN இலக்கத்தின் அனுமதியற்ற பாவனை மூலம் ஏதேனும் வழியில் ஏற்படக்கூடிய சகல இழப்புக்களுக்கும் சேதங்களுக்கும் எதிராக, கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்க வேண்டும்.

## 16. பயன்ப ாட்டு வசதி “பில்” கொடுப்பனவுகள்

16.1 ATB, PIB, ATMகள் மற்றும் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வேறு கொடுப்பனவுச் சேகரிப்பு ஊடகங்கள் மூலம் செய்யப்படும் பயன்பாட்டு வசதிக் கட்டணக் கொடுப்பனவுகளை வங்கி உரிய வேளையில் அனுப்பியிருந்தபோதிலும், அக் கொடுப்பனவுகளை வரவு வைப்பதற்கு பயன்பாட்டு வசதியை வழங்கும் கம்பனி தாமதிக்குமானால், வங்கி அதற்குப் பொறுப்பாளியாகாது.

## 17. வட்டி

17.1 சேமிப்பு மற்றும் கால வைப்புக் கணக்குகளின் மீதான வட்டி வீதங்கள் (வெளிநாட்டு நாணயம்/உள்நாட்டு நாணயம்) முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம். எவ்வாறாயினும், ஏற்கனவேயுள்ள கால வைப்புக்களைப் பொறுத்தவரையில், அவை முதிர்வடையும் வரை, உடன்பட்டுக்கொள்ளப்பட்ட வட்டி வீதத்தை வங்கி மாற்ற மாட்டாது.

17.2 சகல கணக்குவைத்திருப்பவர்களும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கணக்கு ஆரம்பப் படிவத்தில் தமது வரி அந்தஸ்து, வதிவிட அந்தஸ்து என்பவற்றின் நியதிச்சட்ட முறையான வெளிப்படுத்துகையை நிரப்புதல் வேண்டும். தனது வரி அந்தஸ்து மற்றும் வதிவிட அந்தஸ்து தொடர்பான சகல நியதிச்சட்டப் பிரகடனங்களையும் உரிய காலத்திற்குள் செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு கணக்கு வைப்பாளரையே சாரும். கணக்கு வைப்பாளர் தனது வரிப் பிரகடனத்தை உரிய வேளையில் வெளியிடத் தவறுதல் உள்ளிட்ட ஏதேனும் காரணத்தினால் அட்டை வைப்பாளர் எதிர்நோக்கக்கூடிய ஏதேனும் விளைவுகளுக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

17.3 குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கென செலுத்தப்பட வேண்டிய வட்டியிலிருந்து, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் குறித்துரைக்கப்பட்ட இடைநிறுத்திவைக்கப்பட்ட வரி வங்கியினால் கழிக்கப்படும்.

17.4 சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டி, தினசரி மீதியின் அடிப்படையில் கணிக்கப்பட்டு, மாதாந்தம் (வழமையாக மாதத்தின் 26ஆம் நாளன்று) கணக்கில் வரவுவைக்கப்படும்.

## 18. HSBC Advance உலகளாவிய சேவைகள்

18.1

a) கணக்கு வைத்திருப்பவருக்கு HSBC Advance உலகளாவிய சேவைகள் வழங்கப்படும் பட்சத்தில், HSBC Advance உலகளாவிய சேவைகளின் கீழ் VISA Internationalஇனால் வழங்கப்படும் சேவைகள் எத்தகைய விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் முனையப்பட்டு வழங்கப்படுகின்றனவோ அத்தகைய விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்குக் கணக்கு வைத்திருப்பவர் இணங்குகின்றார்.

b) சந்தர்ப்பத்திற்கேற்ப) HSBC Advance உலகளாவிய சேவைகளை கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கும் நோக்கங்களுக்காக, (சந்தர்ப்பத்திற்கேற்ப) கார்ட் வைத்திருப்பவரின் HSBC Advance கணக்கு மற்றும் பிரதான கணக்கு தொடர்பில் காலத்துக்குக்காலம் வங்கி வைத்திருக்கக்கூடிய ஏதேனும் தகவல்களை VISA Internationalக்கும் அதன் முறையான முகவர்களுக்கும் மூன்றாம் தரப்புச் சேவை வழங்குநர்களுக்கும் (சரத்துக்கள் 18.2, 18.3, 18.4, 18..5 ஆகியவற்றின் கீழ் வங்கி கொண்டுள்ள உரிமைகளுக்குப் பங்கமின்றி) வழங்க அல்லது வெளியிட கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகின்றார்.

c) HSBC Advance உலகளாவிய சேவைகளின் கீழ் வழங்கப்படும் சேவைகள், VISA International, VISA Internationalஇனால் நியமிக்கப்பட்ட அதன் முகவர்கள், மூன்றாம் தரப்புச் சேவை வழங்குநர்கள் ஆகியோரால்

வழங்கப்படுகின்றன. அதற்கிணங்க, VISA International அல்லது அதன் முகவர்கள் அல்லது மூன்றாம் தரப்புச் சேவை வழங்குநர்களின் ஏதேனும் செயல் அல்லது செய்யாமல் விடுதல் அல்லது பொதுவாக HSBC Advance உலகளாவிய சேவைகள் தொடர்பாக எழுகின்ற எத்தகைய தன்மையினவுமான எவையேனும் வழக்குகள், உரிமைக் கோரிக்கைகள், நட்டம், சேதம் அல்லது பொறுப்பு என்பவற்றுக்கு வங்கி பொறுப்பாளியாகாது.

18.2 கணக்கு வைத்திருப்பவருக்கு ஏதேனும் சேவையை வழங்குவதா இல்லையா என்பதை ஆராய்ந்து முடிவுசெய்ய வங்கிக்கு இடமளிக்கும் வகையில், கணக்கு வைத்திருப்பவர், காலத்துக்குக்காலம் தனிப்பட்ட தரவுகளை வங்கிக்கு வழங்கத் தேவைப்படுத்தப்படுகின்றார். அவர் அவ்வாறு செய்யத் தவறினால், அத்தகைய சேவையை வழங்குவதற்கு இயலாத நிலை வங்கிக்கு ஏற்படக்கூடும்.

18.3 தனிப்பட்ட தரவுகள், கணக்கு வைத்திருப்பவரின் வேண்டுகோளைக் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுமென்பதுடன், அத்தகைய சேவையை வழங்குவதற்கு வங்கி உடன்படும் பட்சத்தில் வங்கியுடன் கணக்கு வைத்திருப்பவரின் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கையாளுகைகள் தொடர்பான தனிப்பட்ட தரவுகளும் மற்றெல்லா விபரங்களும் தகவல்களும், கணக்கு வைத்திருப்பவருக்கு அத்தகைய சேவையை வழங்குவது சம்பந்தமாகவும் பயன்படுத்தப்படும். வங்கியானது, பின்வருவன தொடர்பான நோக்கங்களில் ஏதேனுமொன்றிற்கு மற்றும் எல்லாவற்றுக்கும் அத்தகைய வேறு விபரங்களையும் தகவல்களையும் (இலங்கையினுள்ளோ இலங்கைக்கு வெளியிலோ) பயன்படுத்தும், களஞ்சியப்படுத்தும், வெளியிடும் மற்றும்/அல்லது (எவ்வித வரையறையுமின்றி HSBC குழுமத்தின் ஏதேனும் அங்கத்தவர் அல்லது ஏதேனும் சேவை வழங்குநர் உட்பட) வங்கி அவசியமெனக் கருதக்கூடிய எல்லா ஆட்களுக்கும், ஆட்களிடமிருந்தும் ஆட்களுடனும் அத்தகைய தனிப்பட்ட தரவுகளையும் விபரங்களையும்) பெற்றுக்கொள்ளும். மற்றும்/அல்லது பரிமாறிக்கொள்ளும்:

a) சேவைகளை வழங்குதல் தொடர்பாக (வரையறையின்றி, ஒருங்கிணைக்கப்பட்ட விபரக்கூற்றுக்களை வழங்குதல் உட்பட).

b) எத்தகைய நோக்கத்துக்காகவும், (கணக்கு வைத்திருப்பவருக்கு எதிராக ஏதேனும் பாதகமான நடவடிக்கையை எடுக்கும் நோக்குடனோ அல்லாமலோ), அத்தகைய எவையேனும் தனிப்பட்ட தரவுகளை வங்கியின் வசமுள்ள ஏனைய தனிப்பட்ட தரவுகளுடன் ஒப்பிடுதல் தொடர்பாக.

c) ஏனைய நிதி நிறுவனங்களுக்கு அல்லது வேறு தரப்பினருக்கு, கணக்கு வைத்திருப்பவர் பற்றி வங்கியாளரின் தகவல் குறிப்பீட்டை வழங்குதல் தொடர்பாக.

d) வங்கியினாலும் HSBC குழுமத்தின் வேறு அங்கத்தவர்களினாலும், பொதுவாகக் கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கப்படும் சேவைகளை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் அல்லது விரிவுபடுத்துதலுக்காக மற்றும்/அல்லது வேறெவையேனும் நோக்கங்களுக்காக காலத்திற்குக் காலம் வங்கியினால் கிடைக்கக்கூடியனவாக்கப்பட்ட விபரக்கூற்றுக்களிலும், சுற்றறிக்கைகளிலும், அறிவித்தல்களிலும் அல்லது நியதி நிபந்தனைகளிலும் தெரிவிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட தரவுகளை வங்கியின் பொதுக் கொள்கைக்கிணங்க வெளியிடுதல் தொடர்பாக.

18.4 தனிப்பட்ட தரவுகளுள் எவற்றையும் அணுகித் திருத்துவதற்கு வேண்டுகோள் விடுப்பதற்கு அல்லது நேரடிச் சந்தைப்படுத்துதல் நோக்கங்களுக்காகத் தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தாதுவிடும்படி வேண்டுகோள் விடுப்பதற்கும் கணக்கு வைத்திருப்பவர் உரிமை கொண்டுள்ளார். அத்தகைய வேண்டுகோள்கள் எழுத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், வங்கியினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படக்கூடிய முகவரி மற்றும் இலக்கத்திலுள்ள தனிப்பட்ட வங்கிச் சேவை முகாமையாளருக்கு அனுப்பப்பட வேண்டும். ஏற்புடைய எவையேனும் சட்டங்களின் அல்லது பிரமாணங்களின் கீழ் அவ்வாறு செய்வதற்கு மறுக்கும்படி தேவைப்படுத்தப்பட்டாலொழிய, வங்கி அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்கியொழுகும்.

18.5 தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு

a) காலத்துக்குக்காலம், கணக்குகளைத் ஆரம்பித்தல் அல்லது தொடர்ந்து பேணுதல், வங்கி வசதிகளை ஏற்படுத்துதல் அல்லது தொடர்ந்து பேணுதல் அல்லது வங்கிச் சேவைகளை வழங்குவது தொடர்பில் தரவுகளைக் கணக்கு வைத்திருப்பவர் காலத்திற்குக் காலம் வங்கிக்கு வழங்குவது அவசியமாகும். அத்தகைய தரவுகளை வழங்கத தவறுதல், கணக்குகளைத் ஆரம்பிப்பதற்கு அல்லது தொடர்ந்து பேணுவதற்கு அல்லது வங்கி வசதிகளை அல்லது சேவைகளைத் தாபிப்பதற்கும் தொடர்ந்து வழங்குவதற்கு முடியாத ஒரு நிலைமை வங்கிக்கு ஏற்படக்கூடும். வாடிக்கையாளர்கள் காசோலைகளை எழுதும்போது அல்லது பணத்தை வைப்பிலிடும்போது வங்கிச் சேவை உறவுகளின் சாதாரண நடைமுறையின் தொடர்ச்சியாகவும் வாடிக்கையாளர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.

b) ஒரு வாடிக்கையாளர் தொடர்பான தரவுகள் எந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாமோ அத்தகைய நோக்கங்கள பின்வருமாறு:

i. வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மற்றும் கடன் வசதிகள் தொடர்பான நாளாந்தச் செயற்பாடுகள்

ii. கடன் தகுதி நிலையைப் பரிசீலித்தல்

iii. கடன் தகுதி நிலையைப் பரிசோதிக்கவும் கடன்களைச் சேகரிக்கவும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கு உதவுதல்;

iv. கணக்கு வைப்பாளர்களின் நடப்பிலுள் கடன் தகுதி நிலையை உறுதிப்படுத்துதல்

v. கணக்கு வைப்பாளர்களுக்காக நிதிச் சேவைகள் அல்லது தொடர்புடைய வசதிகளை வடிவமைத்தல்

vi. நிதிச் சேவைகள் அல்லது தொடர்புபட்ட வசதிகளைச் சந்தைப்படுத்துதல்

vii. கணக்கு வைத்திருப்போருக்குச் செலுத்த வேண்டிய அல்லது அவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் தொகையைத் தீர்மானித்தல்

viii. கணக்கு வைத்திருப்போரிடமிருந்தும் கணக்கு வைத்திருப்போரின் கடப்பாடுகளுக்குப் பிணைப் பொறுப்பு வழங்குவோரிடமிருந்தும் நிலுவையாகவுள்ள தொகைகளைச் சேகரித்தல்

ix. வங்கியை அல்லது அதன் கிளைகளுள் எவற்றையும் பிணிக்கின்ற ஏதேனும் சட்டத்தின் தேவைப்படுத்தல்களிக் பிரகாரம் வெளிப்படுத்தலைச் செய்வதற்கான தேவைகளை நிறைவேற்றுதல்

x. வங்கியின் உண்மையான அல்லது உத்தேசிக்கப்பட்ட பொறுப்பு சாட்டப்பட்டவரை அல்லது வாடிக்கையாளர் தொடர்பில் வங்கியினது உரிமைகளின் பங்குபற்றுநரை அல்லது துணைப் பங்குபற்றுநரை, அத்தகைய சாட்டுதல், பங்குபற்றுதல் அல்லது துணைப் பங்குபற்றுதலுக்கு ஆளாக்கும் பொருட்டு, உத்தேசிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலை மதிப்பீடு செய்வதற்கு இயலச்செய்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய நோக்கங்கள்

c) கணக்கு வைத்திருக்கும் ஒருவர் தொடர்பாக வங்கி கொண்டிருக்கும் தரவுகள், வங்கியினால் இரகசியமாக வைத்திருக்கப்படும். எனினும், பந்தி (b)இல் தரப்பட்டுள்ள நோக்கங்களுக்காகப் பின்வரும் தரப்பினருக்கு வங்கி அத்தகைய தகவல்களை வழங்க முடியும்:

i. வங்கியானது அதன் அலுவல்களைத் தொழிற்படுத்துவது சம்பந்தமாக அதற்கு நிருவாக, தொலைத்தொடர்புகள், கணனி, கொடுப்பனவு

அல்லது பிணைப்பொறுப்புகள், தீர்வுசெய்தல் அல்லது வேறு சேவைகளை வழங்குகின்ற எவரேனும் முகவர், ஒப்பந்தக்காரர் அல்லது மூன்றாம் தரப்புச் சேவை வழங்குநர்

ii. அத்தகைய தகவலை இரகசியமாக வைத்திருப்பதற்குப் பொறுப்பேற்றுள்ள HSBC குழுமக் கம்பனி உட்பட இரகசியத் தன்மையைப் பேணும் கடமைப் பொறுப்புள்ள வேறெவரேனும் ஒருவர்

iii. செலுத்தப்பட்ட ஒரு காசோலையின் பிரதியை (அது பணம் பெறுபவர் பற்றிய தகவலைக் கொண்டிருக்கலாம்) காசோலை வரைபவருக்கு வழங்கும் பணம் செலுத்தும் வங்கி

iv. கடன் குறிப்பீட்டு முகவர் நிலையங்கள் மற்றும் தவறுகை புரியப்படும் பட்சத்தில், கடன் சேகரிப்பு நிலையங்கள்

v. வங்கியை அல்லது அதன் கிளைகளுள் எவற்றையும் பிணிக்கின்ற ஏதேனும் சட்டத்தின் தேவைப்பாடுகளின் கீழ் யார்யாருக்கு வெளிப்படுத்தலைச் செய்ய வங்கி கடப்பாட்டின் கீழுள்ளதோ அத்தகைய ஆட்கள்

vi. வாடிக்கையாளர் தொடர்பில் வங்கியின் எவரேனும் உண்மையான அல்லது உத்தேசிக்கப்பட்ட சாட்டுதல்பெறுநர் அல்லது பங்குபற்றுநர் அல்லது துணைப் பங்குபற்றுநர் அல்லது வங்கியின் உரிமைகள் கைமாற்றம் செய்யப்படவர்

vii. நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம்

## 19. கூட்டு விபரக்கூற்று

19.1 வங்கியினால் தனக்கு அனுப்பப்படும் விபரக்கூற்றுக்களின் பிரதிகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கணக்கு வைத்திருப்பவரின் பொறுப்பாகும். மேலதிக பிரதிகள் கோரப்படின், வங்கியானது தனது வெளிப்படுத்தப்பட்ட விதிப்பனவுகள் பட்டியலுக்கு அமைய அதற்கான கட்டணம் ஒன்றை விதிக்க உரிமை கொண்டுள்ளது.

19.2 HSBC Advance கணக்குகள் மற்றும் ஏனைய வங்கிச் சேவைகள் தொடர்பான சகல கொடுக்கல் வாங்கல்களையும் மீதிகளையும் காலத்திற்குக் காலம் வங்கியினால் குறித்துரைக்கப்பட்டவாறு காட்டுகின்ற கணக்கு விபரக்கூற்றுக்களை வங்கியானது ஒவ்வொரு மாதமும் (அல்லது கணக்கு வைத்திருப்பவரினால் குறித்துரைக்கப்பட்டவாறு) கணக்கு வைத்திருப்பவருக்கு அனுப்பும்.

19.3 ஒவ்வொரு விபரக்கூற்றும் பெறப்பட்டதும் உடனடியாக அல்லது கணக்கு வைத்திருப்பவர் அக் கூற்றை எத்திகதியில் பெற்றாரெனக் கருதப்படுகின்றதோ அத்தேதியிருந்து 30 (முப்பது) கலண்டர் நாட்களுக்குக் குறையாத (“30 நாள் மீளாய்வு”) காலப்பகுதிக்குள், விபரக்கூற்றில் காணப்படுகின்ற ஒவ்வொரு

பதிவையும் பரிசோதனை செய்து சரிபார்ப்பதற்கும், தனது சொந்தப் பதிவுகளோடு அவற்றை ஒப்பீடு செய்வதற்கும், எவையேனும் பிழைகள், விடுபடுகைகள் மற்றும் ஒழுங்கீனங்கள் இருந்தால் அல்லது எவையேனும் மோசடியான அல்லது அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் பதியப்பட்டிருந்தால் அல்லது வேறேதும் ஆட்சேபனைகள் இருந்தால் (கூட்டாக, “கணக்கு ஒழுங்கீனங்கள்” எனப்படும்) அவற்றை எழுத்து மூலம் உடனடியாக வங்கிக்கு அறிவிப்பதற்கும் கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகின்றார். 30 (முப்பது) நாள் மீளாய்வுக் காலத்தினுள் கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கு அறிவிக்கத் தவறுவாராயின், விபரக்கூற்றில் காட்டப்பட்ட மீதியும் கணக்கு ஒழுங்கீனங்கள் உட்பட்ட சகல பதிவுகளும் சரியானவை, பூரணமானவை, அதிகாரமளிக்கப்பட்டவை, கணக்கு வைத்திருப்பவரைப் பிணிப்பவை என்று கருதப்படும். கணக்கு வைத்திருப்பவர் இச் சரத்திற்கேற்ப அறிவித்தல் கொடுத்த கொடுக்கல் வாங்கல்களைத் தவிர, மிகச் சமீபத்திய விபரக்கூற்றுத் திகதி வரை இடம்பெற்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் வங்கி விடுவிக்கப்படும்.

19.4 கணக்கு வைத்திருப்பவர், மேலேயுள்ள சரத்து 19.3இன் கீழான தனது கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறினால், மற்றும் கணக்கு வைத்திருப்பவரின் நடத்தை அல்லது தவறுகை அக் கணக்கில் ஒரு நட்டத்தை (வங்கியினால் உறப்பட்ட மற்றும்/அல்லது அடையப்பட்ட எத்தகையனவுமான எவ்வகையிலுமான நட்டங்கள் அல்லது வங்கிக்கெதிராகக் கொணரப்பட்ட வரிகள், அறவீடுகள், குற்றப்பணங்கள், கட்டணங்கள் அல்லது தண்டங்கள்) விளைவித்தால் அல்லது அதற்குப் பங்களித்தால், அத்தகைய நட்டம் தொடர்பில் வங்கியானது கணக்கு வைத்திருப்பவருக்கு ஏதேனும் பொறுப்பை கொண்டிராது என்பதை கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கின்றார். இந்த உடன்படிக்கைக்கு அமைவாக, உரிய நேரத்தில் கணக்கு விபரக்கூற்றுக்களை மீளாய்வதற்குத் தவறியமையானது, விபரக்கூற்று அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவுகள் மீளாயப்பட்டிருப்பின் ஏதேனும் பிழை அல்லது விடுபடுகை கண்டுபிடிக்கப்பட்டிருக்கக்கூடிய நேரத்துக்கு பின்னர் ஏற்படுகின்ற ஏதேனும் நட்டத்தின் அளவுக்குக்கு கணக்கின் மீது நட்டத்தை விளைவிப்பதாக அல்லது அதற்கு உதவுவதாகக் கருதப்படுமென்பதையும் கணக்கு வைத்திருப்பவர் ஒப்புக்கொள்கின்றார். கணக்கு வைத்திருப்பவருக்கான வங்கியின் ஆகக்கூடிய பொறுப்பு, வங்கியின் பாரதூரமான கவனயீனம் அல்லது வேண்டுமென்ற மேற்கொள்ளப்பட்ட தவறான நடத்தை காரணமாக கணக்கு வைத்திருப்பவரின் கணக்கிலிருந்து தவறுதலாக அல்லது பிழையான முறையில் மீளப்பெறப்பட்ட பிரதான தொகையினால் ஏற்பட்ட நேரடி நட்டத்துக்கு மட்டும் வரையறுக்கப்படுமென்பதை கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கின்றார்.

## 20. தொலைநகல் இழப்பெதிர்காப்பு

20.1 அறிவுறுத்துதல்களின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் உண்மையான கையொப்பத்தைக் கொண்ட, எழுத்திலான உறுதிப்படுத்துகை அவசியம் என்ற ஆணையளிப்பு பக்கேஜை தேவைப்படுத்தாமல், ஆணையளிப்புப் பக்கேஜை செயற்படுத்துவதற்காக தொலைநகல் மூலம் காலத்திற்குக் காலம் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து கிடைக்கும் அறிவுறுத்துதல்களை (''அறிவுறுத்துதல்'') ஏற்றுக்கொள்வதற்கு வங்கி உடன்பட்டமைக்குப் பிரதியுத்தரமாக கணக்கு வைத்திருப்பவர் பின்வருவனவற்றிற்கு இணங்குகின்றார்:

a) வங்கியானது, கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து வருகின்றதென அதன் தற்றுணிபின் பேரில் நம்புகின்ற அறிவுறுத்துதல்களின் பேரில் செயலாற்றுவதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்பகின்றது. அதிகாரமளிக்கப்படாத ஆட்களிடமிருந்து வருகின்ற எவையேனும் அறிவுறுத்துதல்களின் அடிப்படையில் நல்லெண்ணத்துடன் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு வங்கி பொறுப்பாளியாகாது.

b) கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் விடுக்கப்படும் அறிவுறுத்துதல்கள் எனக் கொள்ளப்படும் அறிவுறுத்தல்களை விடுக்கும் ஆளின்/ஆட்களின் அடையாளத்தைச் சரிபார்க்க வேண்டிய கடப்பாடு எதுவும் வங்கிக்குக் கிடையாது. அத்தகைய அறிவுறுத்துதல்களின் அடிப்படையில் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள், கணக்கு வைத்திருப்பவரின் அதிகாரத்துடன், அறிவுடன் அல்லது சம்மதத்துடன் செய்யப்பட்டிருந்தாலும் அவ்வாறு இல்லாவிட்டாலும், கணக்கு வைத்திருப்பவரைப் பிணிக்கும்.

c) கணக்கு வைத்திருப்பவரின் தவறுகை காரணமாக மற்றும்/அல்லது வங்கியினால் பாதுகாவல் சேவைகளை வழங்குவதில், இதன்கீழ் அதன் கடப்பாடுகளைப் புரிவதில் அல்லது அறிவுறுத்துதல்களை ஏற்றுக்கொள்வதில் (தொலைபேசி மற்றும் தொலைநகல் அறிவுறுத்துதல்கள் உட்பட, ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல்) மற்றும் அவற்றின் பேரில் செயலாற்றியதில் அல்லது செயலாற்றத் தவறியதில் ஏதேனும் தவறுகை புரியப்பட்டதிலிருந்து அல்லது அது சம்பந்தமாக் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் எழுந்திருக்கக்கூடிய மற்றும் வங்கிக்கெதிராகக் கொண்டுவரப்படக்கூடிய, வங்கியினால் அடையப்பெற்ற அல்லது உறப்பட்ட வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், உரிமைக் கோரல்கள், இழப்புகள், சேதங்கள், கிரயங்கள், செலவுகள் என்பன வங்கியின் வேண்டுமென்ற தவறுகை காரணமாக ஏற்பட்டிருந்தாலொழிய, அவற்றிற்கெதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும் வங்கிக்குத் தீங்குவிளையாது காப்பதற்கும் கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகிறார்.

பக்கேஜ் முடிவுறுத்தப்பட்டாலும் அத்தகைய இழப்பெதிர்காப்பு தொடர்ந்து வலுவுள்ளதாக இருக்கும்.

d) தொலைநகல் மூலம் அனுப்பப்பட்ட வேண்டுகோளின் மூலப்பிரதி உட்பட, வங்கியினால் பெறப்படும் வேறேதும் ஆவணத்தின் முகப்பில் "இது, தொலைநகல் மூலம் அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி, இணைப்பிரதி எடுக்க வேண்டாம்" எனப் பெரிய எழுத்துக்களிலும் தெளிவாகவும் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, வங்கியானது அந்த ஆவணத்தை தனிவேறான வேண்டுகோளாகக் கருதுமெனக் கணக்கு வைத்திருப்பவர் விளங்கிக்கொள்கின்றார்.

e) கணக்கு வைத்திருப்பவர் ஒரே தொலைநகல் செய்தியை வங்கியின் வெவ்வேறு கிளைகளுக்கு/பிரிவுகளுக்கு அனுப்பினால், அந்த இணைப்பிரதிகள், மேலுள்ள சரத்து (d)இல் குறிப்பிடப்பட்டவாறு "இணைப்பிரதி" எனக் குறிப்பாக அடையாளமிடப்பட்டாலொழிய, அறிவுறுத்துதல்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் ஏதேனும் இரட்டிப்புக்காக வங்கி பொறுப்பாளியாகாதென்பதைக் கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கின்றார்.

f) வங்கியானது தனது தற்றுணிபின் பேரில் மேற்குறிப்பிட்ட வசதியை எந்த நேரத்திலும், முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு, காரணமெதுவும் காட்டாமலே இரத்துச்செய்ய அல்லது வாபஸ் பெற முடியும் என்பதைக் கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார்.

## 21. HSBC Advance அழைப்பு நிலையச் சேவைகள் மற்றும் இழப்பெதிர்காப்பு

21.1 வங்கியினால் வழங்கப்படும் அழைப்பு நிலையச் சேவைகள், பின்வருவன தொடர்பில் தொலைபேசி அறிவுறுத்துதல்களை உள்ளடக்குகின்றன:

i. கணக்கு வைத்திருப்பவரின் கணக்குகளுள் எவற்றுக்குமிடையே பணப் பரிமாற்றம் செய்தல். கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரையில், கணக்கை வைத்திருப்பவர்களுள் ஒருவர் கையொப்பமிட வேண்டும் (இருவரில் ஒருவர் கையொப்பமிடுதல்) என்ற கையொப்பமிடல் அறிவுறுத்துதல் இருந்தால் மாத்திரமே பணப் பரிமாற்றங்கள் அனுமதிக்கப்படும். அத்தகைய சந்தர்ப்பங்களில், பரிமாற்றமானது கணக்கு வைத்திருப்பவரின் கூட்டுக் கணக்குகளுக்கிடையில் மற்றும்/அல்லது அதே கணக்கு வைத்திருப்பவரின் தனிப்பட்ட கணக்குகளுக்கிடையில் மேற்கொள்ளப்படுவதாக இருக்க வேண்டும்.

ii. கணக்கு மீதிகள், கடைசிக் கொடுக்கல் வாங்கல்கள் (கணக்கு வைத்திருப்பவரின் கணக்குகள் தொடர்பாக), நாணயப் பரிவர்த்தனை வீதங்கள் மற்றும் வைப்பு வட்டி வீதங்கள் பற்றிய விசாரிப்பு.

iii. கணக்கு வைத்திருப்பவரின் கணக்குத் தொடர்பான விபரக்கூற்றுக்கள், (தெரிவுசெய்யப்பட்ட கணக்குகளுக்கு மட்டும்) மற்றும் காசோலைப் புத்தக வேண்டுகோள்களும் மற்றும் காசோலை நிறுத்தத்திற்கான வேண்டுகோள்களும்.

iv. HSBC குழுமத்தினால் அல்லது VISA Internationalஇனால் வழங்கப்படும் உலகளாவிய சேவைகள்.

v. வங்கியினால் காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்படக்கூடிய அத்தகைய வேறேதும் வங்கிச் சேவைகள் அல்லது முதலீட்டுச் சேவைகள்.

21.2 ஏதேனும் சாதனத்தின் பிறழ்செயற்பாடு அல்லது பழுது உட்பட, வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் விடயத்தை, முழுமையாக அல்லது பகுதியளவில் காரணமாகக் கூறக்கூடிய பட்சத்தில், எவையேனும் தொலைபேசி அறிவுறுத்துதல்களை நிறைவேற்றுவதற்குத் தவறுமாயின், வங்கி அதற்காக வங்கி கணக்கு வைத்திருப்பவருக்குப் பொறுப்பாளியாகாது. அத்தகைய தொலைபேசி அறிவுறுத்துதல்களை நிறைவேற்றுதல் சம்பந்தமாக அல்லது வேறு வகையாக எழுகின்ற எவையேனும் நேரடியான, நேரடியல்லாத அல்லது எதிர்விளைவான இழப்புகள் தொடர்பில் எச்சூழ்நிலையிலும் வங்கியானது கணக்கு வைத்திருப்பவருக்கு பொறுப்பாளியாகாது. அத்துடன், வங்கியானது தொலைபேசி அறிவுறுத்துதல்களை ஏற்று அவற்றின் அடிப்படையில் செயலாற்றியதால் அல்லது செயலாற்றத் தவறியதால் அல்லது அது தொடர்பில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் எழக்கூடிய வழக்குகள், சட்ட நடவடிக்கைகள், உரிமைக் கோரல்கள், சேதங்கள், கிரயங்கள், செலவுகள் ஆகிய எல்லாவற்றும் எதிராக எல்லா நேரங்களிலும் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும் வங்கியைத் தீங்கிலிருந்து விலக்கி வைக்கவும் கணக்கு வைத்திருப்பவர் உடன்படுகிறார்.

21.3 இதன்கண்ணுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளைப் பின்பற்றி தொலைபேசி அறிவுறுத்துதல்களை விடுப்பதற்குக் கணக்கு வைத்திருப்பவர் கொண்டுள்ள உரிமை, எல்லா நேரங்களிலும் வங்கியின் தற்றுணிபிற்கு அமைய இருத்தல் வேண்டும் வங்கியானது அத்தகைய உரிமையை முன்னறிவித்தலின்றி எந்நேரத்திலும் இரத்துச்செய்ய முடியும்.

21.4 தொலைபேசி அல்லது வேறு அறிவுறுத்துதல்களின் நோக்கத்திற்காக கணக்கு வைத்திருப்பவரின் HSBC கணக்கில் மற்றும்/அல்லது கிறெடிட் கார்ட் கணக்கில் போதிய பணம் (அல்லது முன்னொழுங்கு செய்யப்பட்ட கடன் வசதிகள்) இருப்பதை கணக்கு வைத்திருப்பவர் உறுதிப்படுத்துதல் வேண்டும். பணம் மற்றும்/அல்லது கடன் வசதிகள் போதாமை காரணமாக அத்தகைய

அறிவுறுத்துதல்களை நிறைவேற்றுவதற்கு வங்கி தவறியமையிலிருந்து எழுகின்ற ஏதேனும் விளைவுக்கு வங்கி பொறுப்பாளியாகாது. எனினும், வங்கியானது தனது தற்றுணிபின் பேரில், அத்தகைய போதாமை எவ்வாறிருப்பினும், அறிவுறுத்துதல்களை நிறைவேற்றுவதற்கு முடிவு செய்தால், வங்கியானது கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து முன்னங்கீகாரத்தை நாடாமல் அல்லது அவருக்கு அறிவித்தல் கொடுக்காமல் அவ்வாறு செய்ய முடியும். அதன் மூலம் உருவாக்கப்பட்ட அல்லது விளைகின்ற மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது கடன் என்பவற்றுக்கும் தொடர்புபட்ட எல்லா விதிப்பனவுகளுக்கும் கணக்கு வைத்திருப்பவர் பொறுப்பாதல் வேண்டும். அத்தகைய மேலதிகப் பற்று, முற்பணம் அல்லது கடன், வங்கியினால் அதன் தற்றுணிபிற்கேற்பத் தீர்மானிக்கப்படும் வீதங்களிலான வட்டிக்கு உட்படும் என்பதுடன், அத்தகைய கணக்குகளுக்கு ஏற்புடையதான வங்கியின் வழமையான விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் ஆட்சி செய்யப்படும்.

21.5 அழைப்பு நிலையத்தினூடாகப் பதிவு செய்யப்பட்ட சேவைகளுக்காக வங்கியானது வழமையான கட்டணங்களை விதிக்கும்.

21.6 வங்கி காலத்திற்குக்காலம் அதன் தற்றுணிபின்படி பொருத்தமெனக் கருதும் சேவைக் கட்டணங்கள் மற்றும்/அல்லது ஏனைய விதிப்பனவுகளை விதிப்பதற்கு உரிமை கொண்டுளது.

21.7 இச் சேவையின் செயலெல்லை, சேவைக்கான கட்டணங்கள், இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள ஏதேனும் விதிகள் மற்றும் நிபந்தனைகளை, வங்கியானது தனது தற்றுணிபிற்கேற்ப காலத்திற்குக் காலம் கூட்டுவதற்கு, நீக்குவதற்கு அல்லது மாற்றுவதற்கு உரிமை கொண்டுள்ளது. விதிகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது தொடர்புடைய கட்டணங்களின் மாற்றங்கள் பற்றி வங்கிக் கிளைகளின் பொது இடங்களிலும் ATM களிலும் காட்சிக்கு வைக்கப்படும் அறிவித்தல் பலகைகள் உள்ளிட்ட (ஆனால் அவை மட்டுமல்ல) வழிகள் மூலம் கணக்கு வைப்பாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

21.8 கணக்கு வைத்திருப்பவரின் கணக்குகள் தொடர்பாகத் தொலைபேசி மூலம் பெறப்பட்ட வேண்டுகோள்களின் அடிப்படையில் ("தகவல்கள்") கணக்கு வைத்திருப்பவரின் வேண்டுகோளின் பேரில் காலத்திற்குக் காலம் தகவல் வழங்குவதற்கு அல்லது நிதிகளைக் பரிமாற்றம் செய்வதற்கு வங்கி உடன்படுவதற்குப் பிரதியுத்தரமாக, அத்தகைய தகவல்களைக் கோருகின்ற அல்லது அத்தகைய பரிமாற்ற அறிவுறுத்துதலை விடுக்கின்ற ஆளின் ("அழைப்பவர்") அடையாளத்தைச் சரிபார்த்து உறுதிப்படுத்த வங்கிக்கு இயலாதிருக்குமெனக் கணக்கு வைத்திருப்பவர் முழுமையாகப் புரிந்துகொண்டு, பின்வருவனவற்றிற்கு நிபந்தனையின்றி அறிக்கையிட்டு உடன்படுகின்றார்:

a) வங்கியானது, அத்தகைய அறிவுறுத்துதல்கள் கணக்கு வைத்திருப்பவரினால் விடுக்கப்பட்டுள்ளனவென்ற ஊகத்தின் மீதும் நம்பிக்கையின் மீதும் அதன் தனித் தற்றுணிபின்படி, அத்தகைய தகவலைக் கொடுப்பதற்கு அல்லது கணக்கு வைத்திருப்பவரின் கணக்கிலிருந்து கணக்கு வைத்திருப்பவரின் வேறொரு கணக்கு அல்லது கணக்குகளுக்கு மட்டுமே மாற்றத்தைச் செய்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது. அதன் விளைவாக கணக்கு வைத்திருப்பவருக்கு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுமாயின், அதற்காக வங்கியானது எந்த வகையிலும் கணக்கு வைத்திருப்பவருக்குப் பொறுப்பாளியாகாது. ஆயினும், வங்கியானது இவ் விடயத்தில் பாரதூரமான கவனயீனம் எதுவும் இல்லாமலும் நல்லெண்ணத்துடனும் செயலாற்றியிருக்க வேண்டும்.

b) வங்கியானது அழைப்பவரின் நம்பகத்தன்மையைச் சரிபார்ப்பதற்கு நியாயமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும், ஆனால் தொலைபேசி மூலம் பெறப்பட்ட அத்தகைய வேண்டுகோள்களின் அடிப்படையில் வங்கியினால் புரியப்பட்ட ஏதேனும் செயலுக்காகக் கணக்கு வைத்திருப்பவருக்கு அல்லது வேறெந்தத் தரப்பிற்கும் எம்முறையிலேனும் எத்தகையதுமான பொறுப்பை வங்கி ஏற்காது. எனினும், இவ்விடயத்தில் வங்கி நல்லெண்ணத்துடன் செயலாற்றவேண்டும் என்பதுடன் பாரதூரமான கவனயீனக் குற்றவாளியாக இருக்கவும் கூடாது.

c) வங்கியினால் அத்தகைய தகவல் வழங்கப்படுவதன் அல்லது நிதிகள் பரிமாற்றம் செய்யப்படுவதன் தொடர்ச்சியாக எவரேனும் தரப்பினரால் வங்கிக்கெதிராகக் கொண்டுவரப்படக்கூடிய அல்லது வங்கியினால் புரியப்பட்ட ஏதேனும் செயல், கருமம் அல்லது காரியம் என்பவற்றிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வங்கியினால் உறப்படக்கூடிய வழக்குகள், சட்ட நடவடிக்கைகள், உரிமைக் கோரல்கள், இழப்புகள், சேதங்கள் கிரயங்கள் மற்றும் செலவுகள் ஆகிய எல்லாவற்றுக்கெதிராகவும் எல்லா நேரங்களிலும் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும் வங்கியைத் தீங்கிலிருந்து விலக்கி வைக்கவும் கணக்கு வைத்திருப்பவர் உடன்பட்டுப் பொறுப்பேற்கின்றார்.

d) வங்கியினால் கணக்கு வைத்திருப்பவருக்குச் செய்யப்பட்ட எவையேனும் பரிமாற்றங்கள் அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் தகவல் தொடர்பில் அல்லது வேறு எவ்வாறாயினும் எழுகின்ற நேரடியான அல்லது நேரடியற்ற ஏதேனும் இழப்பு அல்லது சேதம் தொடர்பில் வங்கிக்கெதிராக எவ்வாறான உரிமைக் கோரல்களையும் கணக்கு வைத்திருப்பவர் கொண்டிருக்க முடியாதென்பதைக் கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கின்றார்..

எனினும், இவ்விடயத்தில் வங்கி நல்லெண்ணத்துடன் செயலாற்றவேண்டும் என்பதுடன் பாரதூரமான கவனயீனக் குற்றவாளியாக இருத்தலும் கூடாது.

## 22. வங்கியின் பாத்திய மற்றும் எதிரீட்டு உரிமை

22.1 ஏதேனும் கணக்குத் தொடர்பில் வங்கிக்கு இருக்கக்கூடிய ஏதேனும் பொதுவான பாத்தியம், எதிரீட்டு உரிமை அல்லது பிணைப் பொறுப்பு மூலமான வேறேதும் உரிமைக்கு முரணாகாத வகையிலும் அவற்றிற்கு மேலதிகமாகவும், வங்கியானது எந்த நேரத்திலும் முன்னறிவித்தலின்றிப் பின்வருவனவற்றைச் செய்ய முடியும் என்பதை கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கின்றார்:

a) கணக்கு வைத்திருப்பவர் தனியாக அல்லது இன்னுமொருவருடன் சேர்ந்து கூட்டாகக் கொண்டிருக்கும் ஏதேனும் உண்மையான, எதேச்சையான, தற்போதய அல்லது எதிர்காலக் கடன்படுகைகளுக்கு ("கூறப்பட்ட கடன்படுகைகள்") எதிராக, கணக்கு வைத்திருப்பவர் தனியாக அல்லது இன்னுமொருவருடன் சேர்ந்து கூட்டாகக் வைத்திருக்கும் ஏதேனும் கணக்கில் ஏதேனும் நாணயத்தில் வரவாகவிருக்கும் ஏதேனும் பணத்தைப் பிரயோகித்தல் (அத்தகைய பிரயோகத்தினால் ஏதேனும் வைப்புத் தொகையை முதிர்ச்சிக்கு முன்பே பிரித்து எடுக்க வேண்டியிருந்தாலும்). மற்றும்/அல்லது,

b) உரிய நேரத்திலிருந்த கடன்படுகையானது அந்த நேரத்திலிருந்த பணத்திற்குச் சமமாக அல்லது அதற்கு மேலாக இருக்கும் பட்சத்தில் அத்தகைய பணத்தைக் கோரிக்கையின் பேரில் கணக்கு வைப்பாளருக்கு வழங்க மறுத்தல்.

22.2 மேலே சரத்து 21.1இல் குறிப்பிடப்பட்டுள்ள வங்கியின் உரிமைகள், வாடிக்கையாளரின் மரணத்தினால் அல்லது சட்டபூர்வமான இயலாமையினால் பாதிக்கப்பட மாட்டாது.

## 23. சட்டபூர்வ பிரகடனம்/வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைப் பிரமாணங்கள்

23.1 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளபடி, சகல கணக்கு வைப்பாளர்களும் கணக்கு ஆரம்பப் படிவத்தில் தமது வரி நிலைமை மற்றும் வதிவிட நிலைமை பற்றிய சட்டபூர்வமான பிரகடனத்தைப் செய்ய வேண்டும். இத்தகைய சட்டபூர்வ பிரகடனமும் வரி நிலைமை பற்றிய அறிக்கையும் உரிய வேளையில் சமர்ப்பிக்கப்படுவதை உறுதிப்படுத்துவது கணக்கு வைத்திருப்பவரின் முழுப் பொறுப்பாகும். உரிய வேளையில் தனது வரி நிலைமை பற்றிய பிரகடனத்தைச் சமர்ப்பிக்கத் தவறுவதால் கணக்கு வைத்திருப்பவருக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் வரி

தொடர்புடைய விளைவுகளுக்கு வங்கி பொறுப்பாளியாகாது. கணக்கு வைப்பாளர்களின் இச் சட்டபூர்வ பிரகடனம் அதே அதிகாரமளிப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட தற்போதய மற்றும் புதிய கணக்குகள் அனைத்திற்கும் பொருந்தும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் வீதம் அல்லது வீதங்களுக்கு அமைய, வட்டிக் கொடுப்பனவுகளின் மீது விதிக்கப்படும் இடைநிறுத்திவைக்கப்பட்ட வரி அல்லது வேறேதும் வரி குறிப்பிட்ட காலப்பகுதிக்கான வட்டிக் கொடுப்பனவிலிருந்து வங்கியினால் கழிக்கப்படும். செலுத்தப்படாத இடைநிறுத்திவைக்கப்பட்ட வரிகளை உள்நாட்டு இணைவரித் திணைக்களம் பிறிதொரு வேளையில் வங்கியிடமிருந்து கோருமானால், கணக்கு வைப்பாளருக்கு/ வைப்பாளர்களுக்கு அறிவித்தல் கொடுக்காமலே, கணக்கு வைப்பாளரிடம்/ வைப்பாளர்களிடம் இருந்து அவற்றை மீட்க வங்கிக்கு உரிமையுண்டு.

23.2 இதன்கண் அடங்கியுள்ள சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளும், வெளிநாட்டுப் நாணயப் பரிவர்த்தனை சட்டங்களின் நடைமுறையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் காலத்திற்குக் காலம் அவற்றின் கீழ் கொண்டுவரப்படும் எவையேனும் பிரமாணங்களுக்கு அமைந்தனவாக இருக்கும்.

## 24. பக்கேஜின் முடிவுறுத்தல்

24.1 வங்கியோ அல்லது கணக்கு வைப்பாளரோ பரஸ்பரம் மற்றைய தரப்பிற்கு எழுத்துமூல அறிவித்தலைக் கொடுப்பதன் மூலம் இப் பக்கேஜையும் வங்கியுடனான உறவையும் முடிவுறுத்திக்கொள்ள முடியும். மேலும், வங்கியானது கணக்கு வைத்திருப்பவரின்/வைத்திருப்பவர்களின் கடைசியாகப் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு இருபது (20) நாட்கள் முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு, காரணம் காட்டியோ காட்டாமலோ எந்தவொரு கணக்கையும் திறப்பதற்கு அல்லது மூடுவதற்கு மற்றும்/அல்லது எவையேனும் சேவைகளை வழங்குவதற்கு மறுக்க உரிமை கொண்டுள்ளது. எதிர்பாராத சந்தர்ப்பங்களில் வேறு வழிகளிலான தொடர்பாடல் /அறிவித்தல் வழங்கும் முறைகளை நாடவும்கூடும்.

இரு சந்தர்ப்பங்களிலும் கார்ட் வைத்திருப்பவர் தாமதமின்றியும் மேலதிக கோரிக்கை இன்றியும் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

a) கார்ட் வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட சகல கார்ட்களும் காசோலைப் புத்தகங்களும் வங்கிக்குத் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும்.

b) மேலதிகப் பற்று வசதிகள், கிறெடிட் கார்ட்/கள் மற்றும் ஏனைய கடன் வசதிகள் உட்பட (ஆனால் அவை மட்டுமல்ல) வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய மொத்தத் தொகையும் அவற்றுடன் தொடர்புபட்ட அறவீடுகளும் (கொடுப்பனவுக்காக இன்னமும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும்

ஏதேனும் விடயங்களின் தொகைகளும் உட்படும்) முழுமையாகச் செலுத்தப்பட வேண்டும். முடிவுறுத்துகை மேற்கொள்ளப்பட்டபோதிலும் அத்தகைய தொகையைச் செலுத்துவதற்குத் தொடர்ந்தும் முழுப் பொறுப்புடையவராக இருப்பார். கணக்கு வைப்பாளர் மரணமடையும் அல்லது வங்குரோத்து நிலையை அடையும் பட்சத்தில், மேற்கூறப்பட்டவற்றின் பொதுத் தன்மைக்கு வரையறை செய்யப்படாமல், அத்தகைய சகல தொகைகளும் உடனடியாக (மேலதிக கோரிக்கை எதுவுமின்றி) செலுத்தப்படுதல் வேண்டும்.

24.2 பக்கேஜின் பாவனை வங்கியினால் அல்லது கணக்கு வைப்பாளரினால் முடிவுறுத்தப்பட்ட பின்பு, கணக்கு வைப்பாளர் பக்கேஜின் கீழான அனுகூலங்கள் எதுவுமின்றி ஒரு சாதாரண கணக்கு வைப்பாளராகத் தொடர்ந்து செயற்படும் பட்சத்தில், அதற்குரிய பொது விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்குக் கணக்கு வைப்பாளர் இணங்குகின்றார். வங்கியில் பேணப்படும் அத்தகைய ஒவ்வொரு கணக்கிற்குமுரிய விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் காலத்திற்குக் காலம் மாற்றப்படக்கூடிய அறவீடுகள் என்பவற்றின் பிரதிகள் ஏற்கனவே கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன அல்லது அவற்றை வங்கியின் எந்தவொரு கிளையிலும் கேட்டுப் பெறலாம் அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ பொது வலைத்தளத்தில் பார்வையிடலாம்.

## 25. அறவீடுகள்

25.1 பக்கேஜ் தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் சேவை அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்காக, கணக்கு வைத்திருப்பவர் நிர்வாக, கையாளுகை, சேவை, நிதி அல்லது வேறேதும் அறவீடுகள் அனைத்தையும் வங்கிக்குச் செலுத்த வேண்டும். வங்கியினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படக்கூடிய வீதங்களில் இந்த அறவீடுகள் விதிக்கப்பட்டு, கணக்கு வைப்பாளரின் கணக்கில் பற்று வைக்கப்படும். சகல வட்டி வீதங்களும் நிர்வாக, சேவை, நிதி மற்றும் ஏனைய அறவீடுகளும் முன்னறிவித்தலுடன் மாற்றத்திற்கு உள்ளாக்கப்படலாம்.

வங்கியின் விதிப்பனவுகள் பட்டியலில் விபரிக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபடி, கணக்குகள் மற்றும் சேவைகள் தொடர்பில் சேவைக் கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை விதிக்க வங்கி உரிமை கொண்டுள்ளது. வங்கியின் விதிப்பனவுகள் பட்டியலை www.hsbc.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பார்வையிடலாம் மற்றும்/அல்லது கணக்கு வைப்பாளர்/கள் வங்கியின் ஏதேனுமொரு கிளையில் கேட்டுப் பெறலாம்.

வங்கியின் விதிப்பனவுகளில் ஏதேனும் மாற்றங்கள் மற்றும்/அல்லது சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டால், வங்கியானது அவை தொடர்பான அறிவித்தலை இலங்கையிலுள்ள தனது கிளைகளில் மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் காட்சிப்படுத்தும். இந்த மாற்றங்கள் அல்லது புதிய சேர்ப்புக்கள் கார்ட் வைத்திருப்பவரை/வைத்திருப்பவர்களைப் பிணிப்பவையாக அமையும்.

## 26. Advance திட்டத்திற்காக வெளிநாடுகளில் வழங்கப்படும் HSBC சேவைகள்

26.1 இப் பக்கேஜின் கீழ் கணக்கு வைப்பவர் அனுபவிக்கக்கூடிய சிறப்பு வசதிகளுள், வங்கியினால் மாத்திரமன்றி, HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களினாலும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வழங்கப்படும் சர்வதேசக் கணக்கு ஆரம்பச் சேவைகள், Global View View/Global Transfer சேவைகள், சன்மானங்கள், அனுகூலங்கள், சலுகைகள் மற்றும் அவை போன்ற அனைத்தும் உள்ளடங்கும். இவை, வங்கிச் சேவை சார்ந்தகையாகவோ அல்லாமலோ இருக்கலாம். இவை, நேரடியாக வங்கியினால் அல்லது HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களினால் அல்லது அவற்றினால் காலத்திற்குக் காலம் நியமிக்கப்படும் மூன்றாம் தரப்பினரால் வழங்கப்படுபவையாகவும் இருக்கலாம் ("சிறப்பு வசதிகள்").

26.2 வங்கியினாலும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களினாலும் வழங்கப்படும் குறிப்பிட்ட சில சிறப்பு வசதிகளை அனுபவிப்பதற்குக் கணக்கு வைத்திருப்பவர் உரித்துடையவரா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதில் வங்கிக்கும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் வசதியளிக்கும் பொருட்டும், கணக்கு வைத்திருப்பவர் இச் சிறப்பு வசதிகளை அனுபவிப்பதற்குத் தகவுடையவராகவிருக்குமிடத்து, அத்தகைய சிறப்பு வசதிகளை வங்கியும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களும் அவருக்கு வழங்குவதனை இயலச்செய்வதற்கும், வங்கியுடன் மற்றும் HSBC குழும அங்கத்தவர்களுடன் பேணப்படும் (கடன் குறிப்பீட்டு முகவர் நிலையங்களிடமிருந்து பெறப்பட்டவை உட்பட) தனிப்பட்ட தரவுகளும் வேறு கடன் தகவல்களும் உட்பட, கணக்கு வைத்திருப்பவர் மற்றும் அவரது கணக்குகள் தொடர்பான சகல தகவல்களையும் பகிர்ந்துகொள்வதற்கு, கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கும் இந்த HSBC குழுமத்தின் அங்கத்தவர்களுக்கும் முழுமையான அதிகாரத்தை வழங்குகிறார். கணக்கு வைத்திருப்பவர், வங்கிக்கும் HSBC குழுமத்தின் அங்கத்தவர்களுக்கும் (கீழே விபரித்துக் கூறப்பட்டவாறு) வங்கிக் கடன்களும் பிரதான கடன்களும் தொடர்பான தகவல்களை, வரையறையின்றி உட்படுத்தி, இச் சிறப்பு வதிகளை அவர்கள் வழங்குவது சம்பந்தமாக அவசியமென அவர்கள்

கருதவேண்டியவாறாகக் கணக்கு வைத்திருப்பவர் தொடர்பான சகல தகவல்களையும் (சம்பந்தப்பட்ட நியாயாதிக்கத்தினுள்ளோ அதற்கு வெளியிலோ மற்றும் HSBC குழுமத்திற்குள்ளோ தொகுதியினுள்ளோ அதற்கு வெளியிலோ) பயன்படுத்துவதற்கும்,களஞ்சியப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் வெளியிடுவதற்கும் பரிமாறிக்கொள்வதற்கும் கணக்கு வைத்திருப்பவர் மேலும் அதிகாரமளிக்கின்றார்.

26.3 வங்கி அல்லது HSBC குழுமத்தின வேறோர் அங்கத்தவர் வேறு விதமாகத் தீர்மானித்தாலொழிய, HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களால் கணக்கு வைத்திருப்பவருக்கு வழங்கப்படும் சிறப்பு வசதிகள் அனுபவிக்கப்படுவதற்கு, கணக்கு வைத்திருப்பவர் வங்கியினால் (அல்லது ஏற்புடையதாயின், HSBC குழுமத்தின வேறோர் அங்கத்தவரினால்), பக்கேஜுக்கென குறித்தொதுக்கப்பட்டவராகவும் அதனைப் பேணுபவராகவும் இருக்க வேண்டும். இச் சிறப்பு வசதிகள் ஒவ்வொன்றும், வங்கியினால் மற்றும்/அல்லது HSBC குழுமத்தின உரிய அங்கத்தவரினால் விதிக்கப்பட்ட குறித்த சில நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தந்தனவாக இருக்கும். கணக்கு வைத்திருப்பவர் அவற்றினால் பிணிக்கப்படுவதற்கு உடன்படுகின்றார்.

26.4 வங்கியினால் முன்வைக்கப்பட்டுள்ள பக்கேஜ் மூலம் கணக்கு வைத்திருப்பவருக்கு ஏதேனும் வங்கிச் சேவை அல்லது கடன் வசதி வழங்கப்படுமிடத்து, அத்தகைய வங்கிச் சேவைக்காக அல்லது கடன் வசதிக்காக (“வங்கிக் கடன்கள்”) பணம் செலுத்த வேண்டிய வேளை ஏற்படுகின்றபோது அதனைச் செலுத்த வேண்டிய கடப்பாட்டில் இருந்து கணக்கு வைத்திருப்பவர் தவறுவாராயின், வங்கியானது பின்வருவனவற்றைச் செய்ய முடியும் என்பதற்கு அவர் உடன்பட்டு அதிகாரமளிக்கின்றார்:

a) HSBC குழுமத்தின் அங்கத்தவர்கள் வங்கிக்காகவும் வங்கியின் சார்பிலும் வங்கிக் கடன்களின் மீளளிப்புக்களைச் சேகரிக்கலாம்..

b) கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் நிலுவையான அல்லது காலங்கடந்த தொகையையும் வங்கியின் பெயரில் கணக்கு வைத்திருப்பவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் இழப்பெதிர்காப்பீட்டையும் பெற்றுக்கொள்வதற்கு, சேகரிப்பு முகவரை/ முகவர்களையும் மூன்றாம் தரப்பினரையும் பணிக்கமர்த்த HSBC அங்கத்தவர்கள் கொண்டுள்ள உரிமையில் எல்லா நோக்கங்களுக்காகவும் வங்கிக் கடன்கள் உள்ளடக்கப்படும்.

c) வங்கியானது எந்த நேரத்திலும் காலத்திற்குக் காலமும் வங்கிக் கடன்களின் முழுமையையும் அல்லது அவற்றின் ஏதேனும் பகுதியை/ பகுதிகளையும் HSBC அங்கத்தவர்கனுளுக்குச் சாட்ட முடியும்.

d) HSBC அங்கத்தவர்கள் அவர்களின் பெயரிலான வங்கிக் கடன்களின் ஒரு சாட்டுதலை ஏற்றுக்கொள்ளலாமென்பதுடன், அவ்வாறு சாட்டப்பட்ட அத்தகைய வங்கிக் கடன்கள் தொடர்பில் அவற்றின் எதிரீட்டு உரிமையைப் பிரயோகிக்கவும் முடியும்.

e) பொருத்தமான எல்லாச் சட்டங்களினாலும் பிரமாணங்களினாலும் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு, வங்கிக் கடன்களின் ஏதேனும் சாட்டுதல்களுக்கும் அவ்வாறு சாட்டப்பட்ட கடன்கள் தொடர்பில் எதிரீட்டு உரிமையைப் பிரயோகிப்பதற்கு HSBC அங்கத்தவர்களுக்குள்ள உரிமைகளுக்கும் எதிராகத் தனக்குள்ள எல்லா உரிமைகளையும் கணக்கு வைத்திருப்பவர் தள்ளுபடி செய்கின்றார்.

f) வங்கிக் கடன்களை மீட்பதில் உறப்பட்ட நியாயமான சட்டக் கட்டணங்கள், மற்றும் வேறு கட்டணங்கள், அறவீடுகள் மற்றும் செலவுகள் என்பவற்றை வரையறையின்றி உட்படுத்தி, வங்கிக் கடன்களின் விளைவாக அல்லது அவற்றிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வங்கியினாலும் HSBC அங்கத்தவர்களினால் உறப்படும் கட்டணங்கள், அறவீடுகள், இழப்பு, செலவுகள் என்பவற்றுக்கும் சரத்து 26.4 பிரயோகிக்கப்படும்.

26.5 வங்கி (அதாவது, இனிமேல் "HSBC அங்கத்தவர்" எனவும் அழைக்கப்படும் HSBC கொழும்பு) தவிர்ந்த HSBC குழும அங்கத்தவர் ஒருவரால் வழங்கப்பட்ட பக்கேஜ் மூலம் கணக்கு வைத்திருப்பவருக்கு ஏதேனும் வங்கிச் சேவை அல்லது கடன் வசதி வழங்கப்படுமிடத்து, அத்தகைய வங்கிச் சேவைக்காக அல்லது கடன் வசதிக்காகப் பணம் செலுத்த வேண்டி ஏற்படுகின்றபோது ("அங்கத்தவர் கடன்கள்") அதனைச் செலுத்த வேண்டிய கடப்பாட்டில் இருந்து கணக்கு வைத்திருப்பவர் தவறுவாராயின், வங்கியானது பின்வருவனவற்றைச் செய்வதற்கு அவர் உடன்பட்டு அதிகாரமளிக்கின்றார்:

a) வங்கியானது, HSBC அங்கத்தவருக்காகவும் HSBC அங்கத்தவரின் சார்பிலும் அங்கத்தவர் கடன்களை மீட்கலாம்.

b) கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் நிலுவையான அல்லது காலங்கடந்த தொகையையும் வங்கியின் பெயரில் கணக்கு வைத்திருப்பவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் இழப்பெதிர்காப்பீட்டையும் பெற்றுக்கொள்வதற்கு, சேகரிப்பு முகவரை/முகவர்களையும் மூன்றாம் தரப்பினரையும் பணிக்கமர்த்த வங்கி கொண்டுள்ள உரிமையில் எல்லா நோக்கங்களுக்காகவும் அங்கத்தவர் கடன்கள் உள்ளடக்கப்படும்.

c) HSBC அங்கத்தவர் எந்த நேரத்திலும் காலத்திற்குக் காலமும் அங்கத்தவர் கடன்களின் முழுமையையும் அல்லது அவற்றின் ஏதேனும் பகுதியை/பகுதிகளையும் வங்கிக்குச் சாட்ட முடியும்.

d) வங்கியானது அதன் பெயரிலான அங்கத்தவர் கடன்களின் ஒரு சாட்டுதலை ஏற்றுக்கொள்ளலாமென்பதுடன், அவ்வாறு சாட்டப்பட்ட அத்தகைய அங்கத்தவர் கடன்கள் தொடர்பில் தனது எதிரீட்டு உரிமையைப் பிரயோகிக்கவும் முடியும்.

e) பொருத்தமான எல்லாச் சட்டங்களினாலும் பிரமாணங்களினாலும் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு, அங்கத்தவர் கடன்களின் ஏதேனும் சாட்டுதல்களுக்கும் அவ்வாறு சாட்டப்பட்ட கடன்கள் தொடர்பில் எதிரீட்டு உரிமையைப் பிரயோகிப்பதற்கு வங்கி கொண்டுள்ள உரிமைகளுக்கும் எதிராகத் தனக்குள்ள எல்லா உரிமைகளையும் கணக்கு வைத்திருப்பவர் தள்ளுபடி செய்கின்றார்.

f) அங்கத்தவர் கடன்களை மீட்பதில் உறப்பட்ட நியாயமான சட்டக் கட்டணங்கள், மற்றும் வேறு கட்டணங்கள், அறவீடுகள் மற்றும் செலவுகள் என்பவற்றை வரையறையின்றி உட்படுத்தி, உறுப்பினர் கடன்களின் விளைவாக அல்லது அவற்றிலிருந்து நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வங்கியினாலும் HSBC அங்கத்தவரினாலும் உறப்படும் கட்டணங்கள், அறவீடுகள், இழப்பு, செலவுகள் என்பவற்றுக்கும் சரத்து 26.5 பிரயோகிக்கப்படும்.

26.6 HSBC குழும அங்கத்தவர் ஒருவராலும் வங்கியினாலும் வழங்கப்படும் ஒரு சிறப்பு வசதி ஏதேனும் வங்கிச் சேவையை அல்லது கடன் வசதியை உள்ளடக்கியிருக்குமானால், அத்தகைய வசதிகளுள் ஒன்று அல்லது அதற்குமேற்பட்டவை தொடர்பில் கணக்கு வைத்திருப்பவரினால் ஏதேனும் தவறுகை புரியப்படின், அந்த அங்கத்தவர்களில் எவரும் அல்லது எல்லோரும், அவர்களினால் வழங்கப்படும் எவையேனும் அல்லது எல்லாச் சிறப்பு வசதிகளையும் மீளப்பெற, இடைநிறுத்த, இரத்துச்செய்ய, முடிவுறுத்த அல்லது வேறுபடுத்த முடியுமன்பதைக் கணக்கு வைத்திருப்பவர் விளங்கிக்கொண்டு, அதற்கு உடன்படுகின்றார். இதன் விளைவாக, கணக்கு வைத்திருப்பவர் வழக்கத்தைவிட உயர்வான வட்டி வீதங்கள், கட்டணங்கள், விதிப்பனவுகள் மற்றும் செலவுத் தொகைகளைச் செலுத்துவதற்கும் நேரிடலாம். அத்துடன், கணக்கு வைத்திருப்பவரினால் உறப்பட்ட அத்தகைய அதிகரித்த வட்டிகள், கட்டணங்கள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் என்பவற்றுக்கும், கணக்கு வைத்திருப்பவருக்கு அதன் மூலம் ஏற்பட்ட வேறெவையேனும் (புதிய அல்லது சேர்க்கப்பட்ட) கடப்பாடுகளுக்கும் பொறுப்புகளுக்கும் HSBC குழும

அங்கத்தவர்கள் எவரும் எச்சூழ்நிலையிலும் ஆளாகவோ பொறுப்பாகவோ மாட்டார்கள்.

26.7 வங்கிக்கோ அல்லது HSBC குழுமத்தின் எவரேனும் அங்கத்தவருக்கோ கணக்கு வைத்திருப்பவரினால் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் பணத் தொகையிலிருந்து ஏதேனும் கழிப்பனவை அல்லது பிடித்துவைத்தலைச் செய்வதற்கு, எவையேனும் பொருத்தமான சட்டங்களினால் அல்லது பிரமாணங்களினால் (HSBC குழும அங்கத்தவர் ஒருவரால் வழங்கப்பட்ட சிறப்பு வசதி எந்த நியாயாதிக்கத்தில் அனுபவிக்கப்படுகின்றதோ அந்த நியாயாதிக்கத்திலுள்ள சட்டங்களும் பிரமாணங்களும் இதில் உள்ளடங்கும்)) கணக்கு வைத்திருப்பவர் தேவைப்படுத்தப்பட்டால், அத்தகைய கழிப்பனவு அல்லது பிடித்துவைத்தல் செய்யப்பட்ட பின்னர் தேறும் கொடுப்பனவு, அத்தகைய கழிப்பனவு அல்லது பிடித்துவைத்தல் எதுவும் செய்யப்பட்டிருக்காவிடின் வங்கி அல்லது அத்தகைய வேறு HSBC குழும அங்கத்தவர் பெற்றிருக்கக்கூடிய தொகைக்குச் சமமாகவிருத்தல் வேண்டும்.

பொருத்தமான கால எல்லையினுள் உரிய அதிகாரிக்கு அத்தகைய கழிப்பனவு அல்லது பிடித்துவைத்தலுக்கான கொடுப்பனவைச் செய்வது கணக்கு வைத்திருப்பவரின் தனிப் பொறுப்பாதல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவர் அவ்வாறு செய்யத் தவறுவதால் ஏற்படக்கூடிய எல்லா விளைவுகளுக்காகவும் கணக்கு வைத்திருப்பவர் வங்கிக்கும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களுக்கும் இழப்பெதிர்காப்பு வழங்க வேண்டும்.

26.8 இதன்கண் அடங்கியுள்ள சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளும், வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் பிரமாணங்களுக்கும் அவற்றின் கீழ் காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்படும் எவையேனும் திருத்தங்களுக்கும் அமைந்தனவாக இருக்கும்.

## 27. பொது

27.1 கணக்கொன்றை ஆரம்பிக்கும் அல்லது தொடர்ந்து பேணும் எவரும் இப் பக்கேஜின் கீழ் முதலில் ஆரம்பிக்கப்பட்ட கணக்குகளை ஆளுகை செய்யும் வங்கியின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது, பொருத்தமாகுமிடத்து, பின்னர் ஆரம்பிக்கப்படும் ஏதேனும் கணக்கு தொடர்பிலான விதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து, புரிந்துகொண்டு, அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அத்தகைய கணக்கின்/கணக்குகளின் விண்ணப்பப் படிவத்தில் அதற்கான பிரகடனம் நிரப்பப்பட வேண்டும்.

27.2 வேறு விதமான உடன்படிக்கை எதுவும் இல்லாத பட்சத்தில், கணக்கு வைப்பாளரினால் காலத்திற்குக் காலம் (உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயத்தில்) வங்கியில் ஆரம்பித்துப் பேணப்படும் ஏதேனும் நடைமுறை, சேமிப்பு, கால வைப்பு, பங்குப் பாதுகாவல் அல்லது வேறு கணக்குகள் மற்றும் கணக்கு வைப்பாளரினால் காலத்திற்குக் காலம் வங்கியுடன் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது பெற்றுக்கொள்ளும் வசதிகள் ஆகிய அனைத்தும் பக்கேஜின் ஒரு பகுதியாக அமையும் (அத்தகைய நோக்கத்திற்காக ஒவ்வொரு கணக்கும் HSBC Advance கணக்காகக் கருதப்படும்). அத்தகைய கணக்குகள் அனைத்தும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினாலும் அவற்றிற்கு மேலதிகமாக ஒவ்வொரு வசதியின் கீழும் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளினாலும் ஆளுகை செய்யப்படும்.

27.3 கணக்கின் ஆரம்பப் படிவத்தில் அல்லது வேறு வழியில் வங்கிக்கு வழங்கப்பட்ட சகல தகவல்களும் தமது அறிவுக்கெட்டிய வரை உண்மையானவை மற்றும் சரியானவை என்பதை கணக்கு வைத்திருப்பவர்/கள் உறுதிப்படுத்துகின்றார்/ உறுதிப்படுத்துகின்றனர். இத் தகவல்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படின், தாமதமின்றி அவை பற்றி வங்கிக்கு அறிவிக்க அவர்/கள் உடன்படுகின்றார்/உடன்படுகின்றனர்.

27.4 கணக்கு வைப்பாளரின்/வைப்பாளர்களின் முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்படின், அது பற்றி உடனடியாக வங்கிக்கு எழுத்தில் அறிவிக்கப்பட வேண்டும்.

27.5 வங்கிக்கு எழுத்து மூலம் கடைசியாக அறிவிக்கப்பட்ட முகவரிக்கு ஏதேனும் அறிவித்தல் அனுப்பப்பட்டால், 7 வேலை நாட்களுக்குள் அது கணக்கு வைப்பாளருக்குக் கிடைத்துவிட்டதாகக் கருதப்படும். .

27.6 கணக்கு வைத்திருப்பவர் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள தனது ஏதேனும் உரிமைகளை அல்லது கடமைகளை, வங்கியின் எழுத்துமூல சம்மதமின்றி, இன்னுமொருவருக்குச் சாட்ட அல்லது கைமாற்ற முடியாது..

27.7 வங்கியானது இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள தனது ஏதேனும் உரிமைகளை அல்லது கடமைகளை எந்த நேரத்திலும் இன்னுமொருவருக்குச் சாட்ட அல்லது கைமாற்ற முடியும்.

27.8 வங்கியின் விதிப்பனவுகள் பட்டியலை எந்தவொரு கிளையிலும் கேட்டுப் பெறலாம். விதிப்பனவுகள் பட்டியல் முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம். கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளின் மாற்றங்கள் பற்றிய அறிவித்தல், கடிதம் மற்றும்/அல்லது உள்நாட்டுப் பத்திரிகைகளிலான விளம்பரங்கள் மற்றும்/அல்லது வங்கியின் விளம்பரப் பலகைகளில் பார்வைக்கு வைக்கப்படும்

அறிவித்தல்கள் மற்றும்/அல்லது விபரக்கூற்றுச் செய்திகள் மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ பொது வலைத்தளத்தின் மூலம் அறிவிக்கப்பட்டதும், கணக்கு வைத்திருப்பவருக்கு முறைப்படி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும்.

27.9 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள், அப்போது இலங்கைக் குடியரசில் நடைமுறையிருந்த சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன், அவற்றிற்கு அமைவானவையாகவும் கொள்ளப்படும். சட்டத்தினால், அரசாங்கப் பிரமாணங்களினால் அல்லது இலங்கை மத்திய வங்கி அல்லது வேறேதும் சட்டபூர்வ விடுத்த ஏதேனும் அறிவுறுத்துதல்களினால் ஏதேனும் திருத்தங்கள் தேவைப்படுத்தப்படின், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் தன்னியல்பாகவே திருத்தம் பெறும்..

27.10 இப் பக்கேஜின் கீழ் வழங்கப்படும் வசதிகள் மற்றும் சேவைகளிலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அல்லது ஏதேனும் வசதிகள் மற்றும் சேவைகள் தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகளிலும், முழுமையாக அல்லது பகுதியாக, எவற்றையேனும் சேர்ப்பதற்கு, மாற்றுவதற்கு, திருத்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது.

27.11 வங்கிக் கட்டடத்தில் அறிவித்தலொன்றைப் பார்வைக்கு வைப்பதன் மூலம் அல்லது வங்கியினால் தீர்மானிக்கப்படும் வேறேதும் வழியில், வாடிக்கையாளருக்கு முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு, வங்கியானது தனது தனித் தற்றுணிபின் பேரில் காலத்திற்குக் காலம் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற முடியும். முன்னறிவித்தல் வழங்கப்பட்ட காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர், வாடிக்கையாளர் தனது பிரதான கணக்கை மூடிவிட்டு, HSBC Advance கணக்கை இரத்துச்செய்யாவிட்டால், அவர் அத்தகைய மாற்றத்திற்கு உடன்பட்டவராகக் கருதப்படுவார்.

27.12 வங்கியானது, சகல கணக்குகள் தொடர்பாகவும் விபரக்கூற்றுக்கள், வவுச்சர்கள், மீளப்பெறுகை/வைப்பு சீட்டுக்கள், காசோலைகள் அல்லது ஏனைய கொடுக்கல் வாங்கல்களின் பதிவேடுகள் என்பவற்றின் பிரதிகளை, சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குப் பேணி வைத்திருக்கும். அத்தகைய காலப்பகுதியின் பின்னர் அத்தகைய பதிவேடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டுவிடும். அதன் பின்னர், விபரக்கூற்றுக்களின் அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவேடுகளின் பிரதிகளை வழங்கும் பொறுப்பை அல்லது கடமையை வங்கி ஏற்காது.

27.13 வங்கி (அல்லது அதன் முகவர்) சேவைகளை வழங்கும் செயற்பாட்டின்போது, அச் சேவைகள் தொடர்பில் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து பெறப்பட்ட வாய்மூல அறிவுறுத்துதல்கள் மற்றும்/அல்லது கணக்கு வைத்திருப்பவருக்கும் வங்கிக்கும் (அல்லது அதன் முகவருக்கும்) இடையிலான வாய்மூலத்

தொடர்பாடல்கள் என்பவற்றை ஒலிப்பதிவு செய்யும் தேவைக்கு (ஆனால், அது ஒரு கடமையாகாது) உள்ளாகலாம்.

27.14 கணக்கு வைத்திருப்பவர் இப் பக்கேஜை பெறுவதற்கு முன்னர் மற்றும்/அல்லது பக்கேஜின் கீழ், ஒரு வீட்டு அடைமானக் கடனுக்கு, தனிப்பட்ட தவணைமுறைக் கடனுக்கு, தனிப்பட்ட கடன் வசதிக்கு அல்லது தனிப்பட்ட பிணையுள்ள கடனுக்கு விண்ணப்பித்து, வங்கிடமிருந்து அதற்கான அங்கீகாரத்தையும் பெற்றிருந்தால், அத்தகைய வசதிகள் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக வேறு நிபந்தனைகளுக்கும் உட்படும் என்பதைக் கணக்கு வைத்திருப்பவர் ஏற்றுக்கொள்கிறார். அத்தகைய வசதிகள் தொடர்பில் அட்டை வைப்பாளருக்கு வழங்கப்படவிருக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வெவ்வேறான வசதிக் கடிதங்களில் வங்கியினால் குறித்துரைக்கப்படும் ஏதேனும் பிணை மற்றும் ஏதேனும் சட்ட ஆவணம் என்பன அத்தகைய நிபந்தனைகளுள் அடங்கும்.

27.15 கணக்கு வைத்திருப்பவர் வங்கியிடமிருந்து கிறெடிட் கார்ட் ஒன்றைப் பெற்றிருந்தால், அவரது தொழில் மற்றும்/அல்லது அவரது அலுவலக அல்லது வசிப்பிட முகவரி மற்றும் தொலைபேசி இலங்கங்களில் (‘‘தொடர்பு விபரங்கள்’’) ஏதேனும் மாற்றம் ஏற்படின் உடனடியாக வங்கிக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். வங்கியானது, அந்தத் தொடர்பு விபரங்களை மிகப் பிந்தியதாகக் கருதி, தற்போதுள்ள தொடர்பு விபரங்களுக்குப் பதிலாக அவற்றைப் பயன்படுத்தும்.

27.16 நானாவித பொது ஏற்பாடுகள்

i. சேகரிப்பு முகவர் - கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து வருமதியாகவிருக்கும் எவையேனும் நிலுவையாகவுள்ள அல்லது காலங்கடந்த தொகைகளைச் சேகரிப்பதற்கு வங்கி மூன்றாம் தரப்பினரைத் தொழிலுக்கமர்த்தலாம். அத்தகைய நிலுவையாகவுள்ள அல்லது காலங்கடந்த தொகையை அறவிடுவதில் உறப்பட்ட செலவுத் தொகைகள் (சட்டக் கட்டணங்கள் உட்பட) மற்றும் ஏனைய செலவுகள் தொடர்பில் கணக்கு வைத்திருப்பவர் இழப்பெதிர்காப்பு வழங்க வேண்டும்.

ii. ஒலிப்பதிவு - வங்கி (அல்லது அதன் முகவர்) சேவைகளை வழங்கும் செயற்பாட்டின்போது, அச் சேவைகள் தொடர்பில் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து பெறப்பட்ட வாய்மூல அறிவுறுத்துதல்கள் மற்றும்/அல்லது கணக்கு வைத்திருப்பவருக்கும் வங்கிக்கும் (அல்லது அதன் முகவருக்கும்) இடையிலான வாய்மூலத் தொடர்பாடல்கள் என்பவற்றை ஒலிப்பதிவு செய்யும் தேவைக்கு (ஆனால், அது ஒரு கடமையாகாது) உள்ளாகலாம்.

iii. தள்ளுபடிகளும் பரிகாரங்களும் - இதன் கீழான ஏதேனும் உரிமையை, அதிகாரத்தை அல்லது சிறப்புரிமையைப் பிரயோகிப்பதில் வங்கியின் தவறுதல் அல்லது தாமதம் அவற்றின் தள்ளுபடியாகத் கருதப்படலாகாது. ஏதேனும் தனியான அல்லது பகுதியளவிலான பிரயோகம், அதன் வேறேதேனும் அல்லது தொடர்ச்சியான பிரயோகத்தை அல்லது வேறேதேனும் உரிமையின், அதிகாரத்தின் அல்லது சிறப்புரிமையின் பிரயோகத்தைத் தடைசெய்தலுமாகாது. இதன்கண் வங்கிக்கு வழங்கப்பட்ட எவையேனும் பரிகாரங்கள், வேறேதேனும் பரிகாரத்துக்குப் புறநீங்கலானதாக இருத்தலாகாது என்பதுடன், ஒவ்வொரு பரிகாரமும் ஒட்டுமொத்தமானதாகவும் நியதிச் சட்டத்தின்மூலம் அல்லது வேறுவகையாக இதன்கீழ் கொடுக்கப்பட்ட அல்லது இப்போது அல்லது இதன் பின்னர் சட்டத்தில் அல்லது ஒப்புரவில் தற்போதுள்ள வேறு ஒவ்வொரு பரிகாரத்துக்கும் மேலதிகமானதாகவும் இருத்தல் வேண்டும்.

iv. பகுதியளவிலான செல்லுபடியின்மை - இங்குள்ள ஏதேனும் ஏற்பாடு, பொருத்தமான ஏதேனும் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமானது, செல்லுபடியற்றது அல்லது அமுல்செய்யப்பட முடியாதது என்று வெளிப்படுத்தப்பட்டால் அல்லது தீர்ப்பளிக்கப்பட்டால், அத்தகைய சட்டவிரோதத் தன்மை, செல்லுபடியற்ற தன்மை அல்லது அமுலாக்க முடியாத தன்மை, இங்குள்ள ஏனைய ஏற்பாடுகள் எவற்றினதும் செல்லுபடியாகும் தன்மையைப் பாதிக்காது. அவை தொடர்ந்தும் முழு வலுவுடன் செல்லுபடியானவையாக இருக்கும்.

v. வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட தவறுகை - வங்கியானது, அதன் கட்டுப்பாட்டுக்கப்பாற்பட்ட எவையேனும் காரணங்களின் விளைவாக (நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல்) இதன் கீழான ஏதேனும் சேவையை வழங்குவதில் அல்லது ஏதேனும் கடப்பாட்டை நிறைவேற்றுவதில் இடம்பெறக்கூடிய ஏதேனும் தவறுதலுக்கு அல்லது தாமதத்திற்குப் பொறுப்பாளியாக மாட்டாது.

vi. முகவரை நியமித்தல் - வங்கியானது, இதன கீழுள்ள அதன் கடப்பாடுகளுள் எவற்றையும் புரிவதற்கு எவரேனும் முகவரை, சேவை வழங்குநரை அல்லது உப ஒப்பந்தகாரரை நியமிக்கலாம்.

vii. வங்கியின் சாட்டுதல் - வங்கி, எந்நேரத்திலும், இதன் கீழான அதன் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளுள் எதனையும் அல்லது எல்லாவற்றையும், கணக்கு வைத்திருப்பவரின் சம்மதம் இல்லாமலே இன்னுமொருவருக்குச் சாட்டுதல் செய்யலாம் அல்லது கைமாற்றலாம்.

viii. அடையாள முத்திரை முதலியன காணாமற்போதல் - சேவைகளின் பயன்பாடு தொடர்பில் வங்கிக்கு அறிவுறுத்துதல்களை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஆளடையாள ஆவணம், அடையாள முத்திரை அல்லது

அனுமதிப்பத்திரம் காணாமற்போகும் பட்சத்தில், கணக்கு வைத்திருப்பவர் உடனடியாக வங்கிக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும். அத்தகைய எழுத்திலான அறிவித்தல் கிடைப்பதற்கு முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவுக்கு வங்கி பொறுப்பாளியாகாது.

27.17 வங்கிக்கு ஏதேனும் பொறுப்புக்களைக் கொண்ட வாடிக்கையாளர்களின் கணக்குகளை, அப் பொறுப்புக்கள் உண்மையானவையாக அல்லது எதேச்சையாளவையாக, பிரதானமானவையாக அல்லது துணையானவையாக, தனித்தனியானவையாக அல்லது கூட்டானவையாக இருந்தாலும், ஒன்று சேர்த்து அல்லது ஒருங்கிணைத்து, அவற்றிலுள்ள பணத் தொகைகளை அல்லது வேறேதும் கணக்கின் பேரில் வங்கியிடமிருந்து கணக்கு வைப்பாளருக்கு வருமதியாகவுள்ள வேறேதும் பணத் தொகைகளை முன்னறிவித்தல் கொடுக்காமலே எதிரீடு செய்ய அல்லது இடமாற்றம் செய்ய வங்கிக்கு உரிமையுண்டு.

27.18 வாடிக்கையாளர் தொடர்பிலான கணக்கின் தகவல்கள் உட்பட சகல தரவுகளும் அனுப்பீடு செய்யப்படவும் மற்றும்/அல்லது ஏதேனுமிடத்தில் களஞ்சியப்படுத்தப்படவும் பின்வருவோரால் அவை அணுகப்படவும் முடியும் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொண்டு, அதற்கு உடன்படுகிறார்:

1. வங்கி, அதன் தலைமை அலுவலகம், அதன் கிளைகள் மற்றும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்கள்/துணை அங்கத்தவர்களின் அதிகாரம் பெற்ற அலுவலர்கள்
2. தரவுகளைத் தொகுக்கும் எவரேனும் சேவை வழங்குநர்கள்
3. கணக்கு விபரக்கூற்றுக்களை அச்சிட்டு, தபாலில் அனுப்புவதற்காக வங்கியினால் ஈடுபடுத்தப்பட்டவர்கள்
4. வங்கியினால் அவசியமெனக் கருதப்படும் நபர்கள்
5. வங்கி தனது வழமையான வியாபாரச் செற்பாடுகளின்போது, பொதி செய்தல், விபரக்கூற்றுக்களை அச்சிடுதல், தபாலில் அனுப்புதல் போன்ற ஏதேனும் சேவைகளை வெளியாரிடம் ஒப்படைக்கும் பட்சத்தில், நிர்வாகம் மற்றும் உள்ளகக் கண்காணிப்பு உள்ளிட்ட நோக்கத்திற்காக அத்தகைய அனுப்பீடு, களஞ்சியப்படுத்தல் அல்லது அணுகல் அவசியமென வங்கியினால் கருதப்படும் நபர்கள்

27.19 வாடிக்கையாளர் தொடர்பிலும் வாடிக்கையாளரின் கணக்கு/கள் மற்றும்/அல்லது அவரது சார்பில் வங்கியினால் நிறைவேற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்/கள் தொடர்பிலுமான தகவல்களை, வாடிக்கையாளர்களின் சார்பில் வங்கி கொடுக்கல் வாங்கல்களை நிறைவேற்றும் தகுதி வாய்ந்த ஏதேனும்

நியாயாதிக்கத்தின் சட்டம், விதிகள் அல்லது பிரமாணங்களினால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் நபர்களுக்கு அல்லது அத்தகைய நியாயாதிக்கப் பிரதேசத்திலுள்ள ஏதேனும் பரிவர்த்தனை அமைப்புகள், அரசாங்கம் அல்லது ஒழுங்குபடுத்தல் அமைப்புக்களுக்கு வெளியிட அல்லது இடமாற்றம் செய்ய, வாடிக்கையாளர் வங்கிக்கு அதிகாரமளிக்கிறார்.

27.20 HSBC குழுமத்திற்கு அல்லது வங்கிக்குப் ஏற்புடைய சட்டங்களுக்கும் பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல், தடையுத்தரவுகளுக்கு உட்படுத்தப்பட்ட நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு நிதி மற்றும் வேறு சேவைகளை வழங்குதல் தொடர்பான ஏதேனும் HSBC குழுமப் பிரமாணங்களுக்கும் அமைவாகச் செயற்பட வங்கியும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்துவ அமைப்புக்களும் தேவைப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, அத்தகைய சட்டங்களுக்கும் குழுமப் பிரமாணங்களுக்கும் அமைவாகச் செயற்படுவதற்கு பொருத்தமானவையெனக் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளை தனது தனி மற்றும் பூரண தற்றுணியின் பேரில் எடுப்பதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது.

அத்தகைய நடவடிக்கைகளுள், வங்கியின் அல்லது HSBC குழுமத்தின் வேறு அங்கத்தவர் ஒருவரின் கணனி அமைப்பின் ஊடாக வாடிக்கையாளரினால் அல்லது வாடிக்கையாளருக்கு அல்லது வாடிக்கையாளரின் சார்பில் அனுப்பப்படும் ஏதேனும் கொடுப்பனவுச் செய்திகளையும் வேறேதும் தகவல்கள் அல்லது தொடர்பாடல்களையும் இடைமறித்து விசாரித்தல், சம்பந்தப்பட்ட ஏதேனும் பெயர் தடைசெய்யப்பட்ட ஒருவரின் அல்லது நிறுவனத்தின் பெயரா என்பதை மேலும் விசாரித்து ஊர்ஜிதம் செய்தல் என்பனவும் உள்ளடங்கும்.

பின்வருவன தொடர்பில் ஏதேனும் தரப்பினால் உறப்படும் (நேரடியான அல்லது விளைவான மற்றும் இலாப அல்லது வட்டி இழப்பு உள்ளடங்கலான) இழப்பிற்கு அல்லது சேதத்திற்கு வங்கி அல்லது HSBC குழுமத்தின் வேறொரு அமைப்பு பொறுப்பாளியாகாது:

i. வங்கி அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் கணக்கு விதிகளின் அல்லது வேறேதும் கடப்பாடுகளின் கீழ் தனது கடமைகளை நிறைவேற்றும்போது, அத்தகைய சகல சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கும் அமைவாகச் செயற்படுவதற்கு அவசியமென வங்கி தனது பூரண தற்றுணிபின் பேரில் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளின் முழுமையான அல்லது பகுதியளவிலான காரணத்தினால் ஏற்படும் ஏதேனும் தாமதம் அல்லது தவறுகை.

ii. இச் சரத்தின் கீழ் வங்கியின் ஏதேனும் உரிமைகள் பிரயோகிக்கப்படுதல். சில சந்தர்ப்பங்களில், வங்கியினால் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கை, சில தகவல்களைப் பரிசீலனை செய்வதில் தடையை அல்லது தாமதத்தை ஏற்படுத்தக்கூடும். ஆகவே, இச் சரத்தின் பேரில் எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு உட்படுகின்ற ஏதேனும் கொடுப்பனவுச் செய்திகள் மற்றும் தொடர்பாடல்கள் சம்பந்தமாக வங்கியின் கணனி அமைப்புக்களிலுள்ள தகவல்கள் அனுகப்படும் வேளையில் முற்றிலும் சரியானவையாகவும் மிகப் பிந்தியவையாகவும் இருக்குமென வங்கியினாலோ HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவரினாலோ உறுதிப்படுத்த முடியாது. மேலாதிக்கம் செய்யும் ஏதேனும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் குழுமமப் பிரமாணங்களுக்கு முரணாகாத வகையில், வங்கியானது சாத்தியமான அளவு விரைவில் அத்தகைய சூழ்நிலை பற்றி வாடிக்கையாளருக்கு அறிவிக்க முயலும்.

27.21 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கல் தடுப்புச் சட்டம் (PMLA), 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டம் (FTRA) மற்றும் அவற்றுடன் தொடர்புடைய வழிகாட்டு நெறிகளும் பணிப்புரைகளும், திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க இலங்கை வங்கியியல் சட்டம் மற்றும் திருத்தப்பட்ட அச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் ஏற்பாடுகள் (அச் சட்டத்தின் விதிகளுக்கமைந்த கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான வழிகாட்டு நெறிகளும் பணிப்புரைகளும் உட்படும்) என்பவற்றின் ஏற்பாடுகளை நான்/நாம் அறிந்துள்ளோம் என்பதை நான்/நாம் உறுதிப்படுத்துகின்றேன்/ றோம்.

வங்கியானது, இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கி என்ற முறையில் செயற்படுவதற்காக, மேற்குறிப்பிட்ட சட்டங்கள், பணிப்புரைகள், வழிகாட்டுதல்கள் அனைத்தினதும் ஏற்பாடுகளுக்கு, எல்லா வேளைகளிலும், தேவைப்படுத்தப்பட்டவாறு, பணிந்தொழுகும் என்பதை நான்/நாம் உறுதிப்படுத்தி புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்கின்றேன்/றோம்.

27.22 வங்கியானது அதனால் வழங்கப்படும் வசதிகள் மற்றும் சேவைகளையும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மாற்றற, திருத்த, இரத்துச்செய்ய அல்லது அவற்றில் எவற்றையேனும் புதிதாகச் சேர்க்க உரிமை கொண்டுள்ளது. அத்தகைய மாற்றம், திருத்தம், இரத்துச்செய்கை அல்லது சேர்ப்பு, வங்கியின் கிளைகளிலுள்ள விளம்பரப் பலகைகளில் காட்சிக்கு வைக்கப்படும் அறிவித்தல்கள் அல்லது

பத்திரிகைகள் அல்லது விளம்பரங்கள் அல்லது www.hsbc.lk என்ற எமது உத்தியோகபூர்வ வலைத்தளத்தின் இற்றைப்படுத்தல் உள்ளிட்ட (ஆனால் அவை மட்டுமல்ல) வழிகளில் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட நேரத்திலிருந்து நடைமுறைக்கு வருவதுடன் வாடிக்கையாளரைப் பணிப்பதாகவும் அமையும்.

27.23 வங்கியானது, சகல கணக்குகள் தொடர்பாகவும் விபரக்கூற்றுக்கள், வவுச்சர்கள், மீளப்பெறுகை/வைப்பு சீட்டுக்கள், காசோலைகள் அல்லது ஏனைய கொடுக்கல் வாங்கல்களின் பதிவேடுகள் என்பவற்றின் பிரதிகளை, சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குப் பேணி வைத்திருக்கும். அத்தகைய காலப்பகுதியின் பின்னர் அத்தகைய பதிவேடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டுவிடும். 7 ஆண்டுகளுக்குப் பின்னர், விபரக்கூற்றுக்களின் அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவேடுகளின் பிரதிகளை வழங்கும் பொறுப்பை அல்லது கடமையை வங்கி ஏற்காது.

27.24 கணக்கு வைத்திருப்பவர்/கள் காலத்திற்குக் காலம் நடைமுறையிலிருக்கும் சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் வங்கியின் கொள்கைகளுக்கு அமைவாக வங்கியினால் வழங்கப்பட்ட டெபிற் காா்ட்களை, virtual நாணயங்கள், crypto நாணயங்கள் மற்றும் bitcoinsகளை வாங்குதல், விற்பனை செய்தல் அல்லது பயன்படுத்துதல் மற்றும்/அல்லது வெளிநாட்டு நாணயமாற்று வர்த்தகம், மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டு நாணயப் பரிமாற்றங்களைச் செய்தல் உள்ளிட்ட (ஆனால் அவை மட்டுமல்ல) காரியங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது.

27.25 கணக்கு வைத்திருப்பவர்/கள், தரும நோக்கங்களுக்கான பணத்தை/ நன்கொடைகளைப் பெறுவதற்குத் தனது/தமது கணக்கை/கணக்குகளை பயன்படுத்தக் கூடாது. தனிப்பட்ட தன்மையிலான கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டுமே தனிப்பட்ட கணக்கு/கள் உபயோகிக்கப்பட வேண்டும். காலத்திற்குக் காலம் நடைமுறையிலிருக்கும் சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் வங்கியின் கொள்கைகளுக்கு அமைய, தனிப்பட்ட கணக்கின்/ கணக்குகளின் ஊடாக வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய முடியாது.

## 28. வாடிக்கையாளர் தகவல்களைச் சேகரித்தல், செயற்படுத்துதல் மற்றும் பகிர்ந்துகொள்ளல்

### சேகரித்தல்

28.1 HSBCயும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களும் **வாடிக்கையாளர் தகவல்களை** (வாடிக்கையாளர், வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல்கள், வாடிக்கையாளர் பயன்படுத்தும் HSBC வங்கி வசதிகள் மற்றும் சேவைகள், வாடிக்கையாளர் HSBC குழுமத்துடன் கொண்டுள்ள உறவுகள் பற்றிய

பொருத்தமான தகவல்களும் உள்ளடங்கும்) சேகரிக்க, பயன்படுத்த மற்றும் பகிர்ந்துகொள்ள முடியும். **வாடிக்கையாளர் தகவல்கள்** சம்பந்தப்பட்ட வாடிக்கையாளரிடமிருந்து (அல்லது அவரின் சார்பில் செயற்படும் ஒருவரிடமிருந்து) கோரப்படலாம். அல்லது இத் தகவல்கள் HSBCயினால் அல்லது HSBCயின் சார்பில் அல்லது HSBC குழும அங்கத்தவர்களினால் வேறு இடங்களிலிருந்து (பகிரங்கமாகக் கிடைக்கும் தகவல்களும் உட்படும்) சேகரிக்கப்படும் தகவல்களாகவும் இருக்கலாம். HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்குக் கிடைக்கும் தகவல்களிலிருந்து உருவாக்கப்பட்ட அல்லது இணைத்துக்கொள்ளப்பட்ட தகவல்களாகவும் அவை இருக்கலாம்.

**செயற்படுத்துதல்**

28.2 HSBC மற்றும்/அல்லது HSBC குழுமத்தின் அங்கத்தவர்கள் பின்வரும் **நோக்கங்கள்** தொடர்பில் வாடிக்கையாளர் தகவல்களை செயற்படுத்தவும் பரிமாற்றம் செய்யவும் வெளிப்படுத்தவும் முடியும்: (a) சேவைகளை வழங்குவதற்காகவும் வாடிக்கையாளரினால் கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்காகவும் (b) பணிந்தொழுகுதல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக. (c) நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக. (d) வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய ஏதேனும் தொகைகளைச் சேகரிப்பதற்காக. (e)கடன் தகுதியைப் பரிசோதித்து, கடன் சிபாரிசைப் பெறுவதற்காக அல்லது வழங்குவதற்காக. (f) HSBCயின் அல்லது HSBC குழுமத்தின் உரிமைகளை அமுல் செய்வதற்காக அல்லது பாதுகாப்பதற்காக. (g) HSBCயின் அல்லது HSBC குழுமத்தின் உள்ளகச் செயற்பாட்டுத் தேவைகளுக்காக (கடன் மற்றும் இடர் முகாமைத்துவ அமைப்பு அல்லது திட்டம் ஒன்றின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல், காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிர்வாக நோக்கங்களும் உள்ளடங்கும்). (h) வாடிக்கையாளருடன் HSBC ஒட்டுமொத்த உறவுகளைப் பேணுவதற்காக (வாடிக்கையாளருக்கான சந்தைப்படுத்தல் அல்லது நிதிச் சேவைகளின் ஊக்குவிப்பு அல்லது தொடர்புடைய வங்கி வசதிகள் மற்றும் சந்தை ஆய்வு போன்றவை). **(“நோக்கங்கள்”)**

**பகிர்ந்துகொள்ளுதல்**

28.3 HSBC (அதன் நோக்கங்களுக்கு அவசியமெனவும் பொருத்தமெனவும் கருதும்) வாடிக்கையாளர் தகவல்களை பின்வரும் பெறுநர்களுக்கு (அவர்களும் தமது நோக்கங்களுக்காக அத் தகவல்களைச் செயற்படுத்தவும் பரிமாற்றம் செய்யவும்

வெளிப்படுத்தவும் முடியும்) அனுப்பவும் வெளிப்படுத்தவும் முடியும் என்பதை வாடிக்கையாளர் இச் சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுக்கொள்கிறார்.

a) HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர்

b) எவரேனும் உப ஒப்பந்தகாரர்கள், முகவர்கள், சேவை வழங்குநர்கள். HSBCகுழுமத்தின் இணையாளிகள் (அவர்களின் ஊழியர்கள், பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள்)

c) வாடிக்கையாளரின் சார்பில் செயற்படுபவர்கள், கொடுப்பனவைப் பெறுபவர்கள், பயனடைபவர்கள், கணக்கு நியமத்தர்கள், இடையீட்டாளர்கள், பிரதிநிதித்துவ மற்றும் முகவர் வங்கிகள், கிளியரிங் நிலையங்கள். கிளியரிங் அல்லது தீர்ப்பனவு அமைப்புக்கள், சந்தைப் பங்காளிகள், எதிர்நீரோட்ட இடைநிறுத்தல் முகவரகங்கள், பரிமாற்ற அல்லது வர்த்தக வைப்பகங்கள், பங்குப் பரிவர்த்தனைகள், வாடிக்கையாளருக்கு அக்கறையுள்ள பிணையங்களை கொண்டிருக்கும் கம்பனிகள் (வாடிக்கையாளருக்காக HSBCயினால் பிணையங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்).

d) சேவைகளில் அல்லது சேவைகள் தொடர்பில் அக்கறையைப் பெறும் அல்லது இடர் பொறுப்பை ஏற்கும் தரப்பினர்.

e) கடன் சிபாரிசுகளைப் பெறுவதற்காக அல்லது வழங்குவதற்காக வேறு நிதி நிறுவனங்கள், கடன் சிபாரிசு நிலையங்கள் அல்லது கொடுகடன் தகவல் பணியகம் மற்றும் கணக்காய்வாளர்கள்/வரி ஆலோசகர்கள்.

f) வாடிக்கையாளருக்கு சொத்து முகாமைச் சேவைகளை வழங்கும் எவரேனும் மூன்றாம் தரப்பு நிதி முகாமையாளர்

g) HSBCயினால் அறிமுகப்படுத்தல்கள் அல்லது சிபாரிசுகள் வழங்கப்படும் அறிமுகப்படுத்தும் தரகர்

h) HSBCயின் ஏதேனும் வியாபார இடமாற்றம், விற்பனை, ஒருங்கிணைப்பு அல்லது சுவீகரிப்பு தொடர்பில் சேவைகள் வழங்கப்படும் நியாயாதிக்கப் பிரதேசத்தில் அமுலிலுள்ள தரவுப் பாதுகாப்பு மட்டத்திலான தரவுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டிராத நியாயாதிக்கப் பிரதேசங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் மேற்குறிப்பிட்டவை செல்லுபடியாகும்.

**வாடிக்கையாளரின் கடப்பாடுகள்**

28.4 காலத்திற்குக் காலமும் HSBC அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் விடுத்த வேண்டுகோளின் பேரிலும் HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு வழங்கப்பட்ட வாடிக்கையாளர் தகவல்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படின், அதனை உடனடியாக, அல்லது

எவ்வாறாயினும் 30 தினங்களுக்குள், எழுத்து மூலம் HSBCக்கு அறிவிக்க வாடிக்கையாளர் இணங்குகின்றார்.

28.5 இணைக்கப்பட்ட ஒவ்வொரு நபரினதும்/(தனிப்பட்ட தரவுகள் அல்லது வரித் தகவல்கள் உள்ளிட்ட) தகவல்கள் வழங்கப்பட்ட நபர்களினதும் தகவல்களை HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு வழங்குவதற்கு முன், அத்தகைய நபருக்கு/நபர்களுக்கு அது பற்றி அறிவித்து, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அத் தகவல்களின் செயற்படுத்தல், வெளிப்படுத்தல் மற்றும் பரிமாற்றத்திற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர் ஊர்ஜிதம் செய்ய வேண்டும். இணைக்கப்பட்ட நபர்கள் தமது தனிப்பட்ட தகவல்களைப் பரிசீலிக்கவும், வேண்டுமானால் திருத்தம் செய்யவும், உரிமை கொண்டுள்ளார்கள் என்பதை வாடிக்கையாளர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

28.6 பின்வரும் சந்தர்ப்பங்களில்:

a) HSBC நியாயமான முறையில் கோரும் வாடிக்கையாளர் தகவல்களை வழங்க ஒரு வாடிக்கையாளர் தவறினால், அல்லது
b) குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வாடிக்கையாளர் தகவல்களைச் செயற்படுத்த, பரிமாற்றம் செய்ய அல்லது வெளிப்படுத்த HSBCக்கு தேவைப்படும் ஏதேனும் சம்மதத்தை வாடிக்கையாளர் இடைநிறுத்தினால் அல்லது வாபஸ் பெற்றால், அல்லது
c) நிதிசார் குற்றம் இழைக்கப்படும் சாத்தியம் உள்ளதென HSBC அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் சந்தேகித்தால் அல்லது நிதிசார் குற்ற இடருக்கான சாத்தியத்தை ஒரு வாடிக்கையாளர் HSBC குழுமத்தின் அங்கத்தவர் ஒருவருக்கு ஏற்படுத்தினால்

HSBC ஆனது

a) வாடிக்கையாளருக்குப் புதிய சேவையை வழங்க அல்லது தற்போதய சேவைகளில் அனைத்தையும் அல்லது அதிலொரு பகுதியைத் தொடர்ந்து வழங்க முடியாதிருக்கும். வாடிக்கையாளருடன் தனது வியாபார உறவுகளை முடிவுறுத்தும் உரிமையும் அதற்கு உண்டு.
b) இணக்கப்பாட்டுக் கடப்பாடுகளை நிறைவேற்ற HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும். மற்றும்/அல்லது
c) வாடிக்கையாளரின் கணக்கை/கணக்குகளை தடைசெய்ய, இடம்மாற்ற அல்லது மூடிவிட நடவடிக்கை எடுக்கும்.

28.7 வாடிக்கையாளர் பின்வருமாறு உறுதியளித்து ஊர்ஜிதம் செய்கின்றார்:

28.7.1 (i) வாடிக்கையாளராகிய (ii) வாடிக்கையாளரின் ஊழியர்கள் அல்லது முகவர்களில் ஒருவராகிய நான் (**"நான்"**):

a) ஐக்கிய அமெரிக்க திறைசேரித் திணைக்களத்தின் வெளிநாட்டுச் சொத்துகள் கட்டுப்பாட்டு அலுவலகம், ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, ஐரோப்பிய ஒன்றியம், மேன்மைதங்கிய மகாராணியின் திறைசேரி, ஹொங்கொங் நாணய அதிகார சபை, இலங்கை அரசாங்கம் மற்றும் வேறேதும் பொருத்தமான தடையுத்தரவு அதிகார அமைப்புக்களினால் (கூட்டாக, "தடையுத்தரவுகள்") நிர்வகிக்கக்கடும் அல்லது அமுலாக்கப்படும் தடையுத்தரவுகளுக்கு உள்ளாக்கப்படவில்லை.

b) கிரீமியா பிரதேசம், கியூபா, ஈரான், வட கொரியா, சூடான் மற்றும் சிரியா உட்பட தடையுத்தரவுக்கு உள்ளாக்கப்பட்ட நாடுகள் அல்லது பிரதேசங்களில் மற்றும் தடையுத்தரவுக்கு உள்ளாக்கப்பட்ட அரசாங்கங்கள் ஆட்சியிலிருக்கும் நாடுகள் அல்லது பிரதேசங்களில் தங்கியிருக்கவோ வசிக்கவோ இல்லை.

28.7.2 ஏதேனும் கணக்கிலுள்ள பணத்தை அல்லது வங்கியினால் வழங்கப்பட்ட நிதி வசதியை பின்வரும் நோக்கங்களுக்கு நேரடியாகவோ அல்லது நேரடியாக அல்லாமலோ பயன்படுத்தக் கூடாது என்பதற்கும் அத்தகைய பணத்தை ஏதேனும் உப நிறுவனம், கூட்டு முயற்சியின் பங்காளி அல்லது வேறொரு நபருக்குக் கடனளிக்கவோ, பங்களிப்புச் செய்யவோ அல்லது வேறு வழியில் கிடைக்கச் செய்யவோ கூடாது என்பதற்கும் வாடிக்கையாளர் இணங்குகின்றார்:

a) தடையுத்தரவுக்கு அந்த வேளையில் ஆளாக்கப்பட்டிருக்கும் ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தில் அல்லது தடையுத்தருவுக்கு ஆளாக்கப்பட்ட அரசாங்கம் பதவியிலிருக்கும் ஒரு நாட்டில் அல்லது பிரதேசத்தில் வசிக்கும் எவரினதும் அல்லது எவருடனுமான ஏதேனும் நடவடிக்கைகள் அல்லது வியாபாரத்திற்கு நிதி வழங்குதல்.

டி) எவரேனும் நபர் தடையுத்தரவை மீறுவதற்கு இடமளிக்கும் வகையில் வேறேதும் வகையில் செயற்படுதல்.

28.7.3 ஐக்கிய இராச்சியத்தின் இலஞ்ச அதிகாரச் சட்டம் 2010 (the "**UK லஞ்ச சட்டம்**") மற்றும் ஐக்கிய அமெரிக்க வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் அதிகாரச் சட்டம் 1977 (the "**FCPA**"). என்பன உள்ளிட்ட (ஆனால் அவை மட்டுமல்ல) ஏற்புடைய இலஞ்ச எதிர்ப்புச் சட்டம் எதுவும் மீறப்படுவதற்கு வழிகோலக்கூடிய

நேரடி அல்லது நேரடியற்ற நடவடிக்கைகள் எதையும் வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளரின் சார்பில் செயற்படும் ஏனைய நபர்கள் அறிந்திருக்கவில்லை அல்லது எடுத்திருக்கவில்லை. மேலும், வாடிக்கையாளர் தனது வியாபாரங்களை ஐக்கிய இராச்சியத்தின் இலஞ்ச அதிகாரச் சட்டம், ஐக்கிய அமெரிக்க வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் அதிகாரச் சட்டம் மற்றும் அது போன்ற சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாகவே நடத்தியுள்ளார் என்பதுடன், அவை இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் தொடர்ந்து இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துமென நியாயமான முறையில் எதிர்பார்க்கக்கூடியதுமான கொள்கைகளையும் நடைமுறைகளையும் நிறுவிப் பேணிவருகின்றார். ஏற்புடைய ஏதேனும் இலஞ்ச எதிர்ப்புச் சட்டத்தை மீறக்கூடிய வகையிலான கொடுப்பனவுகளுக்காக எவ்விதமான கணக்குகளோ அல்லது சேவைகளோ நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் பயன்படுத்தப்பட மாட்டாது என்று வாடிக்கையாளர் உறுதியளிக்கின்றார்.

28.7.4 வாடிக்கையாளர் அல்லது அவரது ஏதேனும் உப நிறுவனங்களின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினால் விடுக்கப்பட்டு, நிர்வகிக்கப்படும் அல்லது அமுலாக்கம் செய்யப்படும் நிதிப் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் அறிக்கையிடல் தொடர்பான ஏற்புடைய தேவைகள், பணம் தூயதாக்கல் சட்டங்கள் அவற்றின் கீழான விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் தொடர்புடைய அல்லது அவை போன்ற எவையேனும் விதிகள், பிரமாணங்கள் அல்லது வழிகாட்டுதல்கள் (கூட்டாக, **"பணம் தூயதாக்கல் சட்டங்கள்"** எனப்படும்) அனைத்திற்கும் வாடிக்கையாளர் எல்லா வேளைகளிலும் இணங்கியொழுக வேண்டும். பணம் தூயதாக்கல் சட்டங்களின் கீழ் வாடிக்கையாளர், அவரது முகவர்கள் அல்லது ஊழியர்கள் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கை, விசாரணை மற்றும் வழக்கு எதுவும் எந்தவொரு நீதிமன்றம், அரசாங்க நிறுவனம், அதிகார அமைப்பு அல்லது நியாயத்தீர்ப்பு மன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக் கூடாது அல்லது அறிவுக்கெட்டிய வரை சமர்ப்பிக்கப்படும் சாத்தியமும் இருக்கக்கூடாது.

## 29. தரவுகளின் பாதுகாப்பு

வாடிக்கையாளர் பற்றிய தகவல்கள் தரவுப் பாதுகாப்பு சட்டத்திற்கு அமைவாக உள்நாட்டு நியாயாதிக்கத்தில் செயற்படுத்தப்பட்டாலும் வெளிநாட்டில் செயற்படுத்தப்பட்டாலும், HSBC குழுமத்தின் அங்கத்துவ நிறுவனங்கள், அவற்றின் ஊழியர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினர் கடைப்பிடிக்க வேண்டிய கண்டிப்பான இரகசிய குறியீடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாட்டின் மூலம் பாதுகாக்கப்படும்.

## 30. நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள்

30.1 நிதிசார் குற்றங்களின் கண்டுபிடிப்பு, விசாரணை மற்றும் தடுப்பு தொடர்பான சட்டங்கள், பிரமாணங்கள். தடையுத்தரவுகள், சர்வதேச வழிகாட்டுதல்கள், HSBC குழமத்தின் உள்ளகக் கொள்கைகளும் நடைமுறைகளும், மற்றும்/அல்லது ஏதேனும் அதிகார சபைகளின் கோரிக்கைகள் என்பவற்றிற்குப் பணிந்தொழுகுவதற்காக HSBCயும் HSBC குழமத்தின் அங்கத்தவர்களும் பொருத்தமெனக் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளை (அவற்றின் தனி மற்றும் பூரண தற்றுணிபிற்கேற்ப) எடுக்க வேண்டும் என்பதுடன் எடுக்கவும் முடியும் **(“நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள்”).**

அத்தகைய நடவடிக்கைகளுள் (a) வாடிக்கையாளரினால் அல்லது அவரின் சார்பில் அனுப்பப்படும் அல்லது பெறப்படும் ஏதேனும் அறிவுறுத்தல், தொடர்பாடல், மீளப்பெறும் வேண்டுகோள், சேவைகளுக்கான விண்ணப்பம் அல்லது ஏதேனும் கொடுப்பனவைப் பரிசோதித்தல், இடைமறித்தல் மற்றும் விசாரித்தல், (b) நிதிகளின் மூலவிடம் அல்லது அவற்றின் உத்தேச பெறுநர்கள் பற்றி விசாரித்தல், (c) வாடிக்கையாளர் தகவல்களை HSBC குழுமத்திடமிருக்கும் ஏனைய தொடர்புடைய தகவல்களுடன் இணைத்தல், மற்றும்/அல்லது (d) சம்பந்தப்பட்ட நபர் அல்லது நிறுவனத்தின் மீது தடையுத்தரவு உள்ளதா என்பதை அறிவதற்காக அல்லது வாடிக்கையாளரின் அடையாளம் மற்றும் அந்தஸ்தை ஊர்ஜிதம் செய்வதற்காக மேலும் விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

30.2 நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை HSBC மேற்கொள்வதால் ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படுதல் அல்லது கிளியரிங் செய்யப்படுதல், வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்கள் அல்லது சேவைகளுக்கான விண்ணப்பங்கள் செயற்படுத்தப்படுதல் அல்லது அல்லது சேவைகளின் முழுமையான அல்லது பகுதியான வழங்கல் என்பன அரிதான சந்தர்ப்பங்களில் HSBCயினால் தாமதிக்கப்படலாம், தடைசெய்யப்படலாம் அல்லது மறுக்கப்படலாம். நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் வாடிக்கையாளருக்கு அல்லது ஏதேனும் மூன்றாம் தரப்பிற்கு முழுமையாக அல்லது பகுதியளவில் ஏதேனும் இழப்பு ஏற்படுமாயின், அது தொடர்பில், சட்டம் அனுமதிக்கு அளவிற்கு, வங்கியோ அல்லது HSBC குழுமத்தின் அங்கத்தவர்களோ வாடிக்கையாளருக்கு அல்லது ஏதேனும் மூன்றாம் தரப்பிற்கு பொறுப்பாளியாகத் தேவையில்லை.

## 31. வரி இணக்கப்பாடு

31.1 வரிக் கட்டுப்பாடுகள் எழுகின்ற சகல நியாயாதிக்கப் பிரதேசங்களிலும் எம்மால் அல்லது HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களினால் வழங்கப்படும் கணக்கின்/கணக்குகளின் அல்லது சேவைகளின் ஆரம்பம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பிலும் உங்கள் வரிக் கட்டுப்பாடுகளை (வரிகளைச் செலுத்துதல், வருமான வரிப் படிவங்கள் மற்றும் பொருத்தமான வரிகள் தொடர்பாகத் தேவைப்படுத்தப்படும் ஆவணங்களை நிரப்புதல் என்பனவும் இக் கட்டுப்பாடுகளில் உள்ளடங்கும்) புரிந்துகொள்வதும் அவற்றிற்கு இணங்கி நடப்பதும் முழுக்க முழுக்க உங்கள் பொறுப்பாகும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள். ஒவ்வொரு இணைக்கப்பட்ட நபரும், ஓர் இணைக்கப்பட்ட நபர் என்ற முறையில் (அவரது தனிப்பட்ட முறையில் அல்ல) தனது விடயத்தில் இதே ஒப்புதலை வழங்க வேண்டும். இணைக்கப்பட்ட நபரின் அல்லது உங்களின் வாழிட நாடு, வசிப்பிடம், பிராஜாவுரிமை அல்லது கூட்டிணைப்பு என்பவற்றைக் கருத்திற்கெடுக்காத, பிரதேச வரையறையற்ற வரிச் சட்டங்களைச் சில நாடுகள் கொண்டிருக்கலாம். நாமோ அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவரோ வரி ஆலோசனைகளை வழங்குவதில்லை. நீங்கள் சுயாதீன தரப்பினரிடமிருந்து சட்ட மற்றும் வரி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எந்தவொரு நியாயாதிக்கப் பிரதேசத்திலாவது ஏற்படக்கூடிய உங்கள் வரிக் கட்டுப்பாடுகள் தொடர்பாக எமக்கோ அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கோ எவ்வித பொறுப்பும் கிடையாது. குறிப்பாக, எம்மால் அல்லது HSBC குழுமத்தின் அங்கத்தவர்களினால் வழங்கப்படும் கணக்கின்/கணக்குகளின் அல்லது சேவைகளின் ஆரம்பம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பில் ஏற்படுகின்ற கட்டுப்பாடுகளும் இவற்றில் அடங்கும்.

## 32. நானாவித விடயங்கள்

32.1 இந்த விதிகளுக்கும் ஏதேனும் வேறு சேவை, வங்கி வசதி வியாபார உறவு, கணக்கு அல்லது வாடிக்கையாளருக்கும் HSBCக்கும் இடையிலான ஒப்பந்தம் தொடர்பான விதிகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்தமின்மை காணப்படுமாயின், இந்த விதிகளே பொருத்தமானதாக மேலாதிக்கம் செலுத்தும். வாடிக்கையாளர் தகவல்கள் தொடர்பில் வாடிக்கையாளரிடமிருந்து ஏற்களவே பெறப்பட்ட ஏதேனும் சம்மதங்கள், அதிகாரமளிப்புக்கள், HSBCஇனால் கோரப்பட்ட விலக்களிப்புக்கள் மற்றும் அனுமதிகள் யாவும், ஏற்புடைய உள்நாட்டுச் சட்டம் அனுமதிக்கும் அளவிற்கு பூரண வலுவுள்ளதாக நடைமுறையிலிருக்கும்..

32.2 இந்த விதிகளின் ஏற்பாடுகள் அனைத்தும் அல்லது அவற்றின் ஏதேனுமொரு பகுதி ஏதேனுமொரு நியாயாதிக்கப் பிரதேசத்தின் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமானதாக, செல்லுபடி அற்றதாக அல்லது நடைமுறைப்படுத்த முடியாததாக இருந்தாலும், வேறேதும் நியாயாதிக்கப் பிரதேசத்தில் அத்தகைய ஏற்பாடுகளினதும் அதே நியாயாதிக்கப் பிரதேசத்தில் எஞ்சியுள்ள ஏற்பாடுகளினதும் சட்டவலு, செல்லுபடியாகும் தன்மை, நடைமுறைப்படுத்தும் தன்மை என்பன பாதிக்கப்பட மாட்டா.

**33. முடிவுறுத்தலின் பின்பும் நிலைத்திருக்கும் தன்மை**

வாடிக்கையாளருக்கான ஏதேனும் சேவைகளின் வழங்கலை HSBC அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் முடிவுறுத்தினாலும் வாடிக்கையாளரின் ஏதேனும் கணக்கு மூடப்பட்டாலும் அத்தகைய முடிவுறுத்துகையைப் பொருட்படுத்தாமல், இந்த விதிகள் தொடர்ந்து செல்லுபடியாகும்.

இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஆங்கில, தமிழ், சிங்கள வாசகங்களுக்கிடையே் ஏதாவது முரண்பாடுகள் காணப்படின், ஆங்கில வாசகமே சரியானதாக ஆதிக்கம் செலுத்தும் என்பதை நான்/நாம் ஊர்ஜிதம் செய்து, ஏற்றுக்கொள்கின்றேன்/ஏற்றுக்கொள்கின்றோம்.

**34. ஆளுகைச் சட்டம் மற்றும் நியாயாதிக்கம்**

இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கையின் சட்டங்களுக்கு அமைவானவையாகக் கொள்ளப்பட்டு, அவற்றினால் ஆட்சி செய்யப்படும் என்பதுடன் வழக்க்குகள் இலங்கை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும். எனினும், வழக்குகளை இன்னுமொரு நாட்டின் அல்லது நியாயாதிக்கப் பிரதேசத்தின் நீதிமன்றங்களில் தாக்கல் செய்வது பொருத்தமென வங்கி கருதினால், அது அவ்வாறு செய்ய முடியும். அத்தகைய சந்தர்ப்பங்களில் அத்தகைய நீதிமன்றங்களுக்கு ஏற்புடைய சட்டங்கள் பிரயோகிக்கப்படும். கணக்கு வைப்பாளர்/கள் அத்தகைய நீதிமன்றங்களுக்கும் அத்தகைய வேறு சட்டங்களுக்கும் பணிந்தொழுக இணங்க வேண்டும். இதனால் உறப்படும் ஏதேனும் சட்டச் செலவுகள், நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் சட்டத்தரணிகளின் கட்டணங்கள் கணக்கு வைப்பாளரின்/வைப்பாளர்களின் கடன்படுகையில் சேர்த்துக்கொள்ளப்படும்.

நாம் வழங்கும் சேவைகள் குறித்து உங்களுக்குப் பூரண திருப்தி இல்லையெனின் அல்லது அச் சேவைகள் உங்கள் தேவையை ஈடுசெய்யவில்லையெனின், தயவுசெய்து இயன்றளவு விரைவாக பின்வரும் ஒரு வழியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்:

- + 94 114 511 566 என்ற வாடிக்கையாளர் தீர்வுகள் ஹொட்லைன் ஊடாகத் தொடர்புகொள்ளுங்கள்.
- customersolutions@HSBC.com.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.
- முறைப்பாட்டை எழுதித் தபாலில் அனுப்புங்கள்.:
  முகவரி:
  வாடிக்கையாளர் அனுபவ மற்றும் உறவுகள் முகாமையாளர்,
  சிற்றளவு வங்கிச் சேவை மற்றும் செல்வ முகாமைத்துவம்,
  HSBC, இல. 24, சேர் பரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 01.
  கொழும்பு 02.

நீங்கள் முன்வைக்கும் பிரச்சினைகளை உங்களுக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் தீர்த்துவைக்கவே நாம் எப்போதும் விரும்புகிறோம். எனினும், நீங்கள் நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு உங்கள் பிரச்சினைக்கு நிவாரணம் கோரவும் முடியும். ஆலாட்சி அதிகாரியின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு:

- நிதித்துறை ஆராட்சி அதிகாரியின் அலுவலகம் - இலங்கை, 143ஏ, வஜிரா வீதி, கொழும்பு 05.
- தொலைபேசி: + 94 112 595 624
- தொலைநகல்: + 94 112 595 625
- மின்னஞ்சல்: info@financialombudsman.lkfosril@sltnet.lk
- இணையத்தளம்: www.financialombudsman.lk

தனிப்பட்ட இலட்சியங்களை ஒருபோதும் தனியாக அடைய முடியாது. உங்களிடம் எதிர்காலத்திற்கான பெரிய திட்டம் எதுவும் இருந்தால், அதனை நிறைவேற்றுவதற்கு HSBC அட்வான்ஸினால் உதவ முடியும். எனவே, நீங்கள் ஏதாவது கேட்க விரும்பினால் அல்லது மேலதிக தகவல்கள் எதையும் அறியவிரும்பினால் தயவுசெய்து எமது வலைத்தளத்தில் பிரவேசியுங்கள் அல்லது தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளுங்கள் அல்லது அருகிலுள்ள HSBC கிளை ஒன்றிற்குச் செல்லுங்கள்.

தொலைபேசி: +94 114 4722 43

வலைத்தளம்: www.hsbcadvance.lk

மேலதிக விபரங்களுக்கு, தயவுசெய்து www.hsbc.lk/advance என்ற இணையத்தளத்தை நாடவும்.

Should you require a translated copy of this document in Sinhala or Tamil languages, please visit www.hsbc.lk or request it from any one of our branches.

මෙම ලේඛනයේ ඉංග්‍රිසි හෝ දමිල භාෂා පරිවර්තනයක පිටපතක් ඔබට අවශ්‍ය වේ නම්, කරුණාකර අපගේ වෙබ් අඩවිය වන www.hsbc.lk වෙත පිවිසෙන්න. නැතිනම්, අපගේ ඕනෑම ශාඛාවකින් ඉල්ලා සිටින්න.

இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஆங்கில, சிங்கள, தமிழ் பிரதிகள் வங்கியின் இணையத்தளத்தில் (www.hsbc.lk) கிடைக்கின்றன. அல்லது அவற்றை எமது கிளை ஒன்றில் கேட்டுப் பெறலாம்.

ADVTC (T) 08/20

வெளியிடுவோர்: ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் - ஸ்ரீலங்கா. ஃபிச் ரேட்டிங்: AAA (lka). ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் - ஸ்ரீலங்கா என்பது இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும்.